# உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயில்
# புனராவர்த்தன
# மஹா கும்பாபிஷேக விழா மலர்



த.ப. 4911

255.22
கருணா
SL/PR

19-8-1973

ருப்பணிச் சபை வெளியீடு

உ

சிவமயம்

உரும்பராய்

# கருணாகரப் பிள்ளையார் கோயில்

புனராவர்த்தன

# மஹா கும்பாபிஷேக விழா மலர்

திருப்பணிச் சபை வெளியீடு

19 - 8 - 73


## ஐங்கர வரதன்

சீர்கொண்ட கிரணநவ மணிகொண்டு வெயில்கொண்டு
செம்பொற் பயிற்சி கொண்டு
திகழுமடல் பிறைகொண்டு நறைகொண்டு மலர்கொண்டு
சேற்றுக் குலாவு கொன்றை
கார்கொண்ட கௌரியை யிடங்கொண்டு மான்மறி
கரங்கொண் டிருந்த நாதன்
காதல்கொண் டுதவுமுன் புகழையொரு வாய்கொண்டு
களறுதல் எழிதா குமோ.

வார்கொண்டு நேர்கொண்டு வட்டித் திடங்கொண்டு
மார்பதங் கொண்டு விம்மி
வளரும்வல் லபையைத்தன் பங்கினிற் கொண்டு
வைகுமெஞ் ஞான முதல்வா
கூர்கொண்ட ஒருகோடன் அருள்கொண்டு உரும்பையிற்
குடிகொண்ட கருணு கரா
குஞ்சர முகங்கொண்டு நாளுமெமை ஆட்கொண்ட
குலவு மைங்கர வரதனே.

நீர்வேலி சிதம்பரநாதப் புலவர்

உ




உரும்பராய்

## கருணாகரப் பிள்ளையார்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

உ

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்

புனராவர்த்தன

# மஹா கும்பாபிஷேகம்

சிறப்புற நிகழ்வதாக.

# க. தா. வேலுப்பிள்ளை

'தங்கவேல் மாளிகை'

உரும்பராய்

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்

புனராவர்த்தன

## மஹா கும்பாபிஷேக மலருக்கு

பிரபல வர்த்தகரும், சமயத் தொண்டருமாகிய

காலஞ் சென்ற

தாவடி ச. முத்துவேலுப்பிள்ளை அவர்களின்

ஞாபகார்த்த அன்பளிப்பு.

## ச. முத்துவேலுப்பிள்ளை அன் சன்ஸ்

226, பாங்ஷால் வீதி,

கொழும்பு - 11.

தொலைபேசி: 24974

அன்பளிப்பு

# த சீப்சைட்

மெயின் வீதி,

வியாங்கொடை.

தொலைபேசி: 234

அன்பளிப்பு

லதா எம்போறியம்
276, மெயின் வீதி,
நீர்கொழும்பு.

உள்நாட்டு உற்பத்தியை ஆதரியுங்கள்

# ஸ்ரீ சிவகாமி கைத்தறி நிலையம்,

இணுவில்.

கைத்தறிப் புடவைகளை வாங்கி
உபயோகியுங்கள்.

கிடைக்குமிடம்:

## வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்,


176, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# தங்க நகை மாளிகை

## உரும்பராய்

உள்ளம் மகிழும் உயர்ந்த தங்கப்பவுண்
நகைகளுக்கு உத்தரவாதத்துடன் கூடிய





நம்பிக்கை நாணயம் நயமிக்க ஸ்தாபனம்

★ எங்களின் நகைகள் நீண்டகாலம் பாவிக்கக்கூடிய உறுதி வாய்ந்தவைகளாக இருக்கும்.

★ தங்களின் மனத் திருப்தியே எங்களின் ஆதாயம்.

★ ஒருமுறை பரீட்சித்தால் உண்மை விளங்கும்.

## க. ச. கந்தையாப் பத்தர்

நகை வியாபாரமும், தொழிற்சாலையும்.

உரும்பராய், சந்தி, — உரும்பராய்.

WITH BEST COMPLIMENTS FROM

# Menik Maligawa

**JEWELLERS**

Main Street,
VEYANGODA.

*Phone:* 266

*Branch:*

# K. A. Martin Perera & Sons,

14, Main Street,
MAHARAGAMA.

# 'VINK'

# 'விங்க்'

'விங்க்' போல் பொயின்ற் பேனு

'விங்க்' ஊற்றுப் பேனு

மற்றும் அலுவலக உபகரணங்களுக்கு

தரத்தில் சிறந்தவை, விலையிற் குறைந்தவை.

தயாரிப்பாளர் :

## வெள்ளியம்பதி,

அளவெட்டி.

ஏகவினியோகஸ்தர்கள் :

## கார்க்கில்ஸ் (சிலோன்) லிமிட்டெட்

கொழும்பு.

நங்கையர் விரும்பும் நவநாகரீகமான
பலவித புடவைத் தினுசுகள்

★

ஆடவர் விரும்பும் அழகிய
சேட்டிங், சூட்டிங் வகைகள்

★

குறைந்த விலையிற் பெற்றுக் கொள்ளலாம்.

★

நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்
58, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7232

கிளை :
சிங்கம்ஸ்
172, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

உலோகப் பொருட்களுக்கு மின்சக்தியால்

முலாமிடுவதில் பேர்பெற்றவர்கள்.

★

எவர் சில்வர் பாத்திர வியாபாரிகள்.

★

# கௌரி மெட்டல் இன்டஸ்ரீஸ்,

265, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார்

மஹா கும்பாபிஷேக விழாவிற்கு

எமது

அன்பளிப்பு

சைவ அடியார்களுக்குப் பணிவன்புடன் கூடிய

எமது நல்வாழ்த்துக்கள்

# த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

(பிரபல புடைவை ஸ்தாபனம்)

42 - 44, பெரிய கடை,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7034

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் வழங்கிய

## வாழ்த்துரை

எந்தச் சுபகார்யம் ஆரம்பிப்பதாயிருந்தாலும் பூஜிக்கப்பட வேண்டியவர் பிள்ளையார். ஓங்கார ஸ்வரூபியாய் விளங்கும் இப்பெருமான் எத்தகைய இடையூறுகளையும் விலக்கி, அந்தந்தக் கார்யங்களைச் செம்மையாக நடத்தி வைக்கக்கூடிய சக்தியுள்ளவர்.

இந்தத் தத்வத்தை உணர்ந்து ஸ்ரீலங்காத்விபகத்தில் உரும்பராய்ப் பகுதியில் பண்டைய காலத்திலிருந்து விளங்குபவரும், கருணாகரத்தொண்டமான் என்னும் அரசனால் வழிபடப்பட்டு, அதன் நிமித்தம் கருணாகரப் பிள்ளையார் என்று ப்ரஸித்தியடைந்திருப்பவருமான ஸ்ரீ விநாயகமூர்த்தியின் ஆலயம் ஜீர்ணமாயிருந்ததைப் புனருத்தாரணம் செய்விக்க இவ்வூர் மஹாஜனங்கள் முன்வந்து இதற்காக அநேக ப்ரமுககர்களைக்கொண்ட ஒரு திருப்பணிக் கமிட்டியை ஏற்படுத்திக்கொண்டு, இதன் மூலம் அவசியமான திருப்பணிகளைச் செய்வித்து ஸமீப காலத்தில் மஹாகும்பாபிஷேகத்தை நடத்தி வைக்க இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்,

பக்தர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டும், இக்கோயில் ஸம்பந்தமான மற்றத் திருப்பணிகளுக்கும், உத்ஸவங்களுக்கும் தாராளமாக உதவி செய்துகொண்டும் ஸ்ரீ விநாயகப் பெருமானின் அருளைப் பெற்று எல்லா வாழ்க்கை நலன்களையும் அடைவார்களாக;

லக்ஷ்மீபாய் நகர்
புதுடில்லி-23
12-6-73.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

## கருணாகரக் கடவுள்

காருண்ய ரூப கருணா கரக்கடவுள்
ஊருண் மிகுந்த உரும்பராய் — ஆருயிர்கள்
கும்பாபி ஷேகக் குளிர்பெருக வாழியரோ
இம்மா நிலமே லினிது.

சிருட்டி யாரம்பம் தோறும் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவன் இறைவியாகிய பராசக்தியை முகஞ் செய்யும் முதனிலையாகிய ஓம்படுநிலை ஓங்கார மூர்த்தமாம். அது விநாயக வடிவம்; மூத்த பிள்ளை; கருணாகரப் பிள்ளை.

உயிர்களின் அறிவு இச்சை செயல்களனைத்தும் கருணாகர மூர்த்தியாகிய மூத்த பிள்ளையை முன்னிட்டனவாதல் வேண்டும். அவ்வாறுதல் கைகூடி வருமாயின், ஒரு நாளைக்கு ஓம்படுநிலையாகிய உயர்வற உயர்ந்த உயர்நிலை கைகூடும்.

ஒரு நாள் வள்ளிநாயகியாகிய முந்திப் படரும் மொய்குழலாள் முன்பு, தந்திக் கடவுள் தனிவாரணப் பொருப்பாகிய கருணாகர யானை வந்துற்றதும், வள்ளிநாயகிக்கு ஓம்படுநிலை கைகூடியதைக் கந்தபுராணத்தாலறிகின்றோம்.

கருணாகர விநாயக கும்பாபிஷேகம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழி செய்து உயர்நிலையாகிய ஓம்படுநிலை கைகூடுவதற்குபகாரமாய் அமைக என்று பிரார்த்தித்து வாழ்த்துவோமாக,

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
8-8-73

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

(ஸ்ரீ காசிமடத்து அதிபர்)

வழங்கிய

## வாழ்த்துரை

"பல பல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்"

என்று விநாயகப் பெருமானை கி. பி. 7-ம் நூற்றாண்டிலேயே பாடியிருக்கின்றார் திருநாவுக்கரசர்.

"வழிபடுமவர் இடர்கடி கணபதி" என்று அருளினர் திருஞான சம்பந்தர். அதனாலன்றோ கணபதியைக் கருணாகரப்பிள்ளையார் என்ற பெயரால் பண்டைய உரும்பராய் அன்பர்கள் திருநாமம் சூட்டித் திருக்கோயில் அமைத்து வழிபடுவாராயினர்.

"பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்,
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறு"

என்று விநாயகப்பெருமானின் திருவுருவ வர்ணனை விநாயகர் அகவலில் காணப்பெறுகிறது. இப்பெருமானை வணங்கினால், மாயாப்பிறவி மயக்கம் அறும்; எல்லையில்லா ஆனந்தம் கிடைக்கும்.

இலங்கையிலுள்ள உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலை நல்லடியார்கள் பலர் ஒருங்குகூடி மகா கும்பாபிஷேகம் செய்விப்பதை யறிந்து மகிழ்கிறோம்.

"பாசத்த ளையறுத்துப் பாவக் கடல் கலக்கி
நேசத் தளைப்பட்டு நிற்கும்"

விநாயகப்பெருமான் திருவருள் அந் நல்லன்பர்கட்கு எய்துவதாகுக! கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவதாகுக! கும்பாபிஷேக மலர் சிவ மணம் கமழ்ந்து மக்களை நன்னெறிக்கண் உய்ப்பதாகுக! சிவநாமமே எங்கும் என்றும் நிலவுவதாகுக! வாழ்க சீரடியாரெல்லாம்.

சுபம்.

ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்.
(தஞ்சை ஜில்லா)

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து."

— *மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை.*

எண்ணிய காரியம் யாவையாயினும் எளிதின் முற்றுப்பெற விநாயகரைத் தொழுது மேம்படுவது சைவமரபு விநாயகரை வழிபட்டுத் தொடங்குவது சைவநூல்களின் மரபு. விநாயகர் வழிபாட்டைச் சிவபூசைத் தொடக்கத்தும் சைவப்பெருமக்கள் செய்து பயன் பெறுவர்.

சைவசமயாசாரிய மூர்த்திகளாகிய திருஞானசம்பந்த சுவாமிகள், 'வம்பருவரிவண்டு மணநாற மலரும் மதுமலர் நற் கொன்றையான் அடியலாற் பேணா' இயல்புடைய பெருமான்; அவர்களே வலிவலம் திருப்பதிகத்து விநாயகப் பெருமான் தோற்றத்தை விரித்துப்பாடி விநாயக வழிபாட்டை வற்புறுத்துவாராயினர். அவ்வருமைத் திருப்பாட்டு வருமாறு:

"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன்; மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே."

வக்கிரதுண்டர், சிந்தாமணி விநாயகர், கெசானனர், விக்கினராசர், மயூரேசர், பிந்திய மயூரேசர், பாலசந்திரர், தூமகேது, கணேசர், கணபதி, மகோற்கடர், உகுண்டி விநாயகர், வல்லபை, கணேசர் என்ற என்கின்ற அவதாரம் கொண்ட விநாயகர் திருவருட்டிறத்தை விநாயக புராணத்து லீலா காண்டம் விரிவாகப் பகரும்.

திருக்கயிலையில் சித்திர மண்டபத்துள்ள ஆனைகளின் சித்திரத்தை உமாதேவியாரும் சிவபெருமானும் வியந்து நோக்குங்கால், அதினின்று விநாயகப் பெருமான் திருவவதாரஞ் செய்த நாளே ஆவணித் திங்கள் வளர்பிறை நான்காம் நாளாகிய சதுர்த்தி நாளாகும். அந்நாளில் விநாயகரை வழிபட்டுப் பேறு பெற்றோர் பலராவர்.

"பந்தமறும் ஆவணித் திங்களின் வளரும்
சதுர்த்தியெனப் பகர்வர்; அற்றால்
அந்தமதிச் சதுர்த்தியிற் பூசிப்பவருக்கு
உறுபயன் ஆர் அளக்க வல்லார்"

என்பர் விநாயகபுராண ஆசிரியர். (1) கோவில்கள் கட்டுவித்தல் (2) கும்பாபிஷேகம் செய்வித்தல் (3) அபிஷேக அலங்காரஞ் செய்தல் (4) அவர் திருமுன் தேங்காய் முதலிய பல பொருள்களை நிவேதனஞ் செய்தல் (5) வலம் வருதல் (6) திருமுன் மும்முறை தலைகுட்டிக்கொண்டு தோப்புக்கரணம் இடுதல் முதலிய பலவகைகளில் விநாயகர் வழிபாடு நிகழும். இவற்றது பயன்கள் பலவாதலை நூல்கள் விரிவாகப் பேசும்.

ஈழத் திருநாட்டில், யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் பழைமையும், அன்பர் பல்லோர் வழிபட்ட நலமும் உடையது. கருணாகரத் தொண்டமான் என்ற அரசன் வழிபட்ட மூர்த்தி இங்குள்ளவர் என்பர். இத்திருக்கோயில் திருப்பணிகள் அன்பர் பலருடைய முயற்சியால் இனிது நடைபெற்று, மகா கும்பாபிஷேகம் நிகழ்வது அனைவரும் அறிந்தது. இத்திருப்பணியும் மகா கும்பாபிஷேகமும் எதிர்காலத்தினர்க்கும் இனிது விளங்கும்படி ஓர் அழகிய மலர் ஒன்றும் வெளியிடுவது நம் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி ஆகும். கருணைக் கடலாய் விளங்கும் விநாயகப் பெருமான் தன் செயல்களை விக்கினங்கள் இன்றி நிறைவேற்றிக் கொள்கின்றான்; செந்தமிழ்ச் சொக்கர் திருவருளால் கும்பாபிஷேகம் இனிது நிகழ்க; இதிற் பங்கு பற்றும் எல்லோர்க்கும் குருவருளும், திருவருளும் பெருகுவனவாகுக என்று வாழ்த்துகின்றோம்.

"உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்"

— திருவிளையாடற் புராணம்.

தருமபுரம்,
மாயூரம்.

---

## கருணாகரப் பண்ணவன்

அருணா சலத்தில் விநாயகன் பாதத்தை அஞ்சலிக்க
பொருள்நாவுக் கேற்றிட வந்தே யுறைந்திடும் பொற்புலியூர்
வருமானைக் கன்றைப் பணியப் பவம்கெடும் வாழ்உரும்பைக்
கருணாகரப் பிள்ளையார் பாதம் போற்றக் கலிகெடுமே.

நீர்வேலி சிதம்பரநாதப் புலவர்.

# பொருளடக்கம்


வாழ்த்துக்கள்

ஜகத்குரு ஸ்ரீ சங்ராசார்ய சுவாமிகள் அவர்கள்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

விநாயகர் வழிபாடு .... .... 1

ஒரு இரகசியம் பரம இரகசியம் .... 5

கர்ம பரிகாரம் .... .... 9

கருணாகரன் புகழ்மாலை .... .... 11

பிள்ளையார் சுழி .... .... 14

பல்லவர் காலச் சமய எழுச்சியும் தமிழ் இலக்கியச் சமய வளர்ச்சியும் .... 16

ஆலயம் .... .... 18

சைவ வாழ்வு .... .... 21

ஸ்ரீ கருணாகரக் கணபதி – திருப்பதிகம் .... 23

கும்பாபிஷேக மகிமை ... .... 25

கருணாகரக் கணேசனே! குடமுழுக்காடியருளே! .... 33

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலிலுள்ள கல்வெட்டுக்கள் .... .... 34

வளர்க கருணாகரன் புகழே .... .... 39

அப்பர் தேவாரத்தில் அரிய சில சொல் வடிவங்கள் 40

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கும்பாபிஷேக வாழ்த்துப்பா .... 47

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் வரலாறும் மகத்துவமும் .... 48

திருவூஞ்சல் .... .... 53

மனப்பூர்வமான நன்றி .... .... 57

# விநாயகர் வழிபாடு

செந்தமிழ்மணி பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை அவர்கள்

"சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே"

— ஔவையார்.

சைவசமயிகள் எக்கரும ஆரம்பத்திலும் வழிபடும் தெய்வம் விநாயகரே; வி + நாயகர், மேலான தலைவர் என்ற பொருள் தருகின்றது; தனக்குமேல் வேறெவரும் தலைவனாக இல்லாத தனி முதற் கடவுள் என்பது இதன் பொருளாகும். சிவகணங்களுக்கெல்லாம் தலைவராக இருப்பதால் கணபதி, கணேசன் என்கின்ற பெயர்களை இப்பெருமானே பெறுகின்றார். அடியார் இடர் களைவதால் விக்கினேஸ்வரன் எனப்படுகிறார். வேண்டிய சித்திகளை எல்லாம் அருள்வதால் சித்திவிநாயகர் எனப் போற்றப்படுகிறார். எல்லாருக்கும் மூத்தவராக, என்றும் இளையவராய், பிள்ளையாய் இருப்பதால் மூத்த பிள்ளையார் என்று நாமம் பெறுகிறார். மூத்தநயினார் என்பதும் இவர்தம் திருநாமமாகும். இப்படிப் பல திருநாமங்கள் பெற்று ஓங்கார வடிவாகி அமைந்திருக்கும் பெருமான் எல்லாம் வல்ல சித்திவரதப் பெருமானாகிறார்; "அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே" என்று அருணகிரிநாதப் பெருமான் இப்பெருமானாரை அன்பருக்கு நிலையான உறுதிப்பொருளாக வழுத்துகின்றார்.

## விநாயகர் திருவவதாரம் :

சித்திர மண்டபம் ஒன்றில் பிரணவமாகிய ஓங்காரம் களிறும் பிடியுமாகக் காட்சி தருகின்றது. இரண்டும் ஒன்று சேர்ந்து பழைய நிலையை எய்துவதனைச் சிவம் காட்டச் சக்தி காணுகின்றது; அப்பொழுது ஓங்கார மூர்த்தியாகிய விநாயகர் திருவவதாரம் நிகழ்கின்றது; சிவசக்தியின் சிருட்டி முகமான அருள் நோக்கமே ஓங்கார மூர்த்தியின் திருவவதாரமாகும். இங்ஙனம் கந்தபுராணத்திற் கூறப்படுகின்றது. எங்கள் தனிமுதற் பெரும் சைவகுரவர் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் பிரணவப் பொருளை,

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே."

என்று தமது திருவாக்காற் புலப்படுத்துகின்றார். மிகுந்த கொடையும் வடிவழகுமுடையவராகிய பெரியோர்கள் இடையறாது வாழுகின்ற வலிவலம் என்கின்ற தலத்தின்கண் இறையனார் உமாதேவி பெண்யானை வடிவமும் தாம் களிற்று வடிவமும் கொண்டு, தம்முடைய திருவடிகளை உருகும் அன்போடு தொழும் அடியவர்கள் இடர்கெடுக்க இக்கணபதியைத் தந்தருளினார். ஆகவே, மிடியைப் பொடியாக்கி முத்தி கொடுப்பதற்கென்றே இப்பெருமான் கோவில்கள் தோறும் எழுந்தருளி இருப்பது யாவரும் அறிந்ததொன்றே.

## சிலேடை நயப்பாக்கள் :

இப்பெருமானைப் பல பெரியோர்கள் பலகால் வழிபட்டுப் பெரும் பயன் அருளப்பெற்றுள்ளனர். அருள் வாக்குகளைத் திருமுறைகளாக வகுத்தருளிய தமிழ் வியாசராகிய நம்பியாண்டார் நம்பிகள் திருநாரையூரில் அவதரித்து, கணபதிப் பெருமான்மேல் அருட்பாடல்களைத் தந்துள்ளார்.

> "என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
> தன்னை நினையத் தருகின்றான் — புன்னை
> விரசுமகிழ் சோலையன் நாரையூர் முக்கண்
> அரசுமகிழ் அத்திமுகத் தான்."

இப்பாடலிற் பல மரங்களின் பெயர்கள் ஒருங்கு வந்துள்ளன. புன்னையொடு கலந்த மகிழும் அரசொடு கலந்த அத்தியும் இங்கு காட்சி தருவதால் தருக்கள் விரவும் குளிர் பெருங்காவொன்று மனக்கண்ணிற் புலப்படுகின்றது. முக்கணரசு ஈண்டு பெரும் பொருளாகிய முக்கட் சிவத்தைக் குறிக்கின்றது. மகிழ் அத்திமுகத்தான் என்பது அவர் உவந்து தந்தருளிய யானைமுகப் பெருமானைக் குறிப்பிடுகின்றது. திருநாரைப் பதியிலுள்ள பிரணவப் பெருமான் தாம் அவரை நினைக்கின்ற (அவன் அருளாலே அவன்தாள் வணங்கும்) பெரும்பேற்றைத் தந்தருளி, தம் இடர்களை எல்லாம் பொடியாக்கித் தம்மை அடிமைத் திறத்தில் வைத்திருக்கின்ற முடிவிலாப் பேற்றை, இப்பாடல் மூலம் நம்பிகள் நாம் அறியச் செய்கின்றார். நம்மையுமே அப்பெருமானுக்கு அடியவராகும் விழைவை ஏற்படுத்துகிறார்.

## வலிந்து வந்தருளும் கணபதி திறத்தை என்னென்பது !

இந்த அருட்பாடலை நினைக்கும்போது கந்தபுராணச் சுருக்கம் தந்தருளிய பக்த கவிஞர் ஒருவர் தந்தருளிய பாடல் ஒன்று நினைவில் எழுகின்றது. அஃது இஃதாகும்.

> "மாவேலை யாலமதை யடக்கித் தன்னுண் மண்டுலக மண்டமெலாம் வளர்ந்து தானோர்
> காவேயின் முன்னுதித்த வரசிற்றோன்றிக் கடம்புனை குருந்தினுக்குத் துணையதாகித்
> தூவேதந் தலைகாண்டற் கரியதாகித் துன்பமுறு பிறவியெனுந் துகள் சேர்வெய்யி
> லாவேனைத் தன்னடியா நிழலிற் சேர்த்த அத்திதனைப் பத்திசெய்து முத்திசேர்வாம்."

ஆன்மாக்களின்மீது கொண்ட பெருங்கருணைத் திறத்தினாலே பரசிவப் பெருமான் எவரும் நெருங்கவெருக்கொள்ளும் நஞ்சினைத் தம்திருக்கண்டத்தடக்கி உலகத்திற்கு உய்வுகாட்டும் அமிழ்தாகத் திகழ்கின்றார். அண்டங்களை எல்லாம் கடந்து நின்று அருள்செய்யும் பெருமானாரே சோலையின்கண்ணே வளரும் மூங்கில் மூலமாகக் காட்சி தந்தருளுகின்றார். கடப்ப மாலையைப் புனைந்த என்றும் இளங்குருந்தாகிய அழகு முருகனுக்கு அண்ணனும் அத்திமுகனைத் தந்தருளுகின்றார். பிறவி என்பது இடையறுக் கொடுவெயில் போன்ற தகிப்பிற்குரிய

தொன்றுகும். கொடு வெயிலிற் செல்வோர் குளிர் நிழலைச் சேரத் துடிப்பர்; அத்தகைய நிழல் பிரணவரூபனின் பாதமேதான். அதனைத் தொழுது பத்தி மிக்கு வெப்படங்கி நாம் முத்தி சேர்தற்கு இத்திருப்பாடல் வழிகாட்டுகின்றது. காவேய் தந்த அரசு, கடம்புபுனை குருந்து, அடியசம் நிழலிற் சேர்க்கும் அத்தி ஆதிய மரங்கள் ஈண்டுக் காட்சி தந்து, சிலேடைப் பொருள் பயந்து, செய்யுளுக்குப் பெருநயமூட்டி நம்மை மகிழச் செய்கின்றன. காவேயின் முன்னுதித்த அரசு = பூஞ்சோலையின் கண் மூங்கிலிடம் தோன்றிய தலைவராகிய சிவபெருமான். கடம்புபுனை குருந்தினுக்குந் துணைவன். கடப்பமாலையணிந்த என்றும் முருகனுக்கு மூத்த விநாயகப் பெருமான் அடியாம் நிழலிற் சேர்த்த அத்தி = தம் பாதநிழலின்கண் அடியவர்களைச் சேர்க்கும் யானைமுகப் பெருமான்; (அரசு - தலைவன், அரசமரமுமாம்; குருந்து - என்றும் இளமையுடையது, குருந்தமரம்; அத்தி - யானைமுகப் பெருமான்; அத்திமரம்- இப்படிச் சிலேடை அமைந்தவாற்றைக் காண்க.)

## தந்தையைத் தம்பியை வழிபாடாற்ற அருள்தரும் விநாயகா:

முருகக் கடவுள் மீது உருகும் அன்பு கொண்ட அருணகிரிநாதப் பிரான் தம் அனுபவ ஞானமாக வெளிவந்த கந்தரனுபூதியில் அமைக்கும் விநாயகர் காப்பு செப்பருந்திறத்தது. தம்பிக்குமேல் தாம் பாடுகின்ற பாடலை அழகுறச் செய்வது அண்ணாவின் திருவருள்தான் என்று நயம்பெறப் பஞ்சக்கர ஆனையைப் போற்றுகின்றார். பஞ்சக்கர ஆனை என்பது ஈண்டு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தையுமே எந்தை கணபதி ஐந்து திருக்கரத்தால் அடியவருக்கு அள்ளி வழங்குகின்றார் என்னும் கருத்துத் தருவதாகப் பெரியோர் உரைகாண்பர். தம்பியின் கருமத்திற்கு என்றும் அண்ணன் துணையாக நிற்பது உலக வழக்குத்தானே!

"நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்."

என்பது அந்தக் காப்பு.

சிவப்பிரகாச சுவாமிகள் கவிநயம் கைவந்த கற்பனைப் பாக்களால் தமிழுக்கு வளம் ஊட்டுகின்றார். அவர் பிரபுலிங்கலீலைக் காப்புச் செய்யுள் கவினொடு மிளிரும் குறிப்புப் பொருள் தருவதொன்று. அசுரகுலாதிபனும் சூரனுக்கு அஞ்சி சுரர்குலத் தலைவன் - இந்திரன் - பார்மிசை வந்து சீகாழியை நண்ணி, பரசிவப் பிரபுவை மலரால் வழிபாடியற்ற அழகு மிளிர் குளிர் பொழில் அமைக்கின்றான். அந்தப் பொழிலின் வேலியே சந்தனம், அகில், பலா, மா, தேக்கு, அசோகு, புன்னை, தென்னை, கமுகு, வன்னி, காஞ்சி, வேங்கை ஆகிய மரங்களால் அரணானதெனின், அதன் உட்புறச் சிறப்பு செப்பருந் தன்மை வாய்ந்தது. அவ்வருங்கா வாடிப் பொழிலிழந்தது. அரக்கருக்கஞ்சிக் கரந்து மூங்கில் வடிவாகிச் சிவத்தை வழிபட்ட இந்திரன் சோலை வளம் பெருக விநாயகப் பெருமானை உளமார வழிபடுகின்றான். தந்தைக்கு வழிபாடியியற்ற மைந்தனே இந்திரனுக்குக் கை தந்து உதவுகின்றான். சிவப்பிரகாச சுவாமிகள்,

"சுரகு லாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருகு வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளும் தலைக்கணி ஆக்குவாம்."

என்கின்றார்;

அகத்திய மகாமுனிவர் குடகுநாட்டுக் காவிரித்தீர்த்தம் கொண்டு தண்டமிழ் நாடு வருகின்றார்; கணபதிப் பெருமான் காக உருக்கொண்டு கரகநீரைக் கவிழ்க்கின்றார். அது கடல்போல் பாரிய காவிரியாகி இந்திரன் பூந்தோட்டத்தை வாட்டம் நீக்கி அழகுடைத்தாக்குகின்றது. அங்ஙனம் செய்த கணபதியின் பாத மலர் நம்சிரத்திற்கு அணியாகத் திகழுமாக என்பது பாவின் பொருள். சிறிய கமண்டலத்திலிருந்து பெரிய காவிரியாறு பெருகியதுபோல், சிறிய சொற்களில் பெருங் கற்பனை நயம் மிளிர வன்பாடல் தழைக்க விநாயகன் வரந்தர வேண்டு மென்று சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்பாக விடுக்கும் பெருவேண்டுகோள் இப்பா.

இவ்வாறு அன்பர்கள் எல்லோரும் தங்கருமம் சித்தியாகக் கணபதியைப் பாவால் வந்தித்து தலையால் வணங்குவர். கணபதியும் பால், தெளிதேன், பாகு, பருப்பின் சுவைமிளிர, அரும்பாடல்கள் கவிஞருக்குச் சுவைவிஞ்ச அளிப்பா ராகலின் அச்சுவைச் செஞ்சொல் மலர்களால் முழுதற் கணபதியை நாமும் மன மாரத் தொழுது உய்திபெறுவோமாக! காவிலும், குளக்கரையிலும், காட்டி லும், நடைபாதையிலும், பெருங் கோயிலிலும் அமரும் பெம்மான் அழகுதமிழொடு நம்மையும் காப்பானாக!

கருணாகர விநாயகக் கடவுளே போற்றி.

---

### கருணாகர கணேச அவதாரம்

தந்தி மாமுக முடைத்தன யனங்கணுகியே
முந்து பாரிடமெலா மொய்த்துமுன் சூழ்தர
நந்தி வந்தனை செயநான்முகன் முதலினோர்
வந்து வந்தடிதொழ மகிழ்வொடே வைகினன்.

— கந்தபுராணம் கயமுகனுற்பத்திப் படலம்.

# ஒரு இரகசியம் பரம இரகசியம்

செ. தனபாலசிங்கன் B. A (Lond.)

## நடன இரகசியம் :

இந்தக் காலத்தில் நடனவிருந்துக்குக் குறைவே இல்லை. அரங்கேற்ற விழாக்கள் கோலாகலமாக எங்கும் நிகழ்கின்றன. 'ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள் ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்' என்று திருமூலர் பாடுகின்ற காட்சியையே கண்டுவிடுகிறோம்.

ஒருநாள் ஒரு பெரிய நடன அரங்கிலே நங்கை ஒருத்தி ஆடுகிறாள். கண்கொள்ளாக் காட்சி! உலகம் யாவையும் ஆக்கி நிலைபெற நிறுத்தி அழிக்கும் இறைவனைத் தன் நடனத்தினால் காட்டிவிடுகிறாள் நங்கை. சமயச்சார்புடன் உணர்ச்சி வசப்பட்டு அவள் ஆடுகிறபோது 'ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டு உள்ளமும் போய் நான் கெட்டு' எல்லோரும் இருக்கிறார்கள். நடனம் முடிந்து திரை போடுகிறார்கள். என் நண்பர் நல்ல ரசிகர். அவசர அவசர மாக நடனமாடிய நங்கையிடம் ஓடோடிச் சென்று கேட்கிறார். "அம்மா, தாங்கள் ஆடிய நடன நிகழ்ச்சியிலே இறுதியாக ஓர் அற்புதமான நடனம் ஆடினீர்களே! அதற்குப் பொருள் சொல்ல வேண்டும்." "ஐயா, நடனத்துக்குப் பொருள் சொல்ல முடியுமா? அங்க வளைவுகளிலே காண்கின்ற இலளிதமும் இசையும் அங்கே துள்ளி ஓடுகின்ற உணர்ச்சியும் விளக்கத்துக்கு அப்பாற்பட்டன. கைவழி நயனம் செல்ல, கண்வழி மனமும் செல்ல ஆடுகின்ற நடனம் அவ்வாறு அறிவார் அறிகின்றதல்லால் எவ்வாறு ஒருவருக்கு எடுத்துச் சொல்ல முடியும்? வார்த்தைகளால் நடனத்தை விளக்கிவிட முடியும் என்றால், நடன அரங்கும் பக்கவாத்தியமும் அணிகலன்களும் வேண்டியன அல்லவே!

## ஆனந்தக் கூத்தனின் ஆட்டம்:

ஆம்! சொல்லால் விளக்க முடியாதது நடனம். இந்த அற்புத தத்துவத்தைக் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்பே விளக்கிக் காட்டி இருக்கிறான் நம்முடைய நடராஜப்பெருமான். அந்த நடராஜப் பெருமானின் திருவுருவிலே ஆடும் ஐயனின் அடிகளிலே கலையே நிலைத்து நிற்கிறது. தெய்வத் தமிழ்ச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்திலேயே, 'அலகில் கலையின் பொருட்டு எல்லை ஆடும் கழலே' என்று பாடியிருக்கிறார். இப்படியன், இந் நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட ஒண்ணாத இறைவனைக் காண முற்பட்ட முயற்சியில் தில்லை அம்பலக்கூத்தனைக் கண்டது அற்புதம்! அற்புதம்!! அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது. அவன் ஆட்ட அண்டங்கள் ஆடுகின்றன. ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே? இவ்வாறு அண்டங்களை எல்லாம் ஒரு சேர ஆட்டுகின்ற ஐயன் சும்மா நின்ற இடத்திலேயே நின்றுகொண்டு ஆட்டமுடியுமா? அவனும் ஆடிக்கொண்டே ஆட்டினால்தானே அண்டங்களும் ஆடும். அவன் ஆட்டங்கள் ஓய்ந்தால் அண்டங்கள் அத்தனையின் ஆட்டமும் ஓய்ந்துவிடும். அண்டங்களின் ஆட்டம், ஓய்ந்தால் அண்டசராசரங்களின் ஆட்டமும் ஓய்ந்துவிடும். இந்த அற்புத ஆனந்தக் கூத்தனின் திருவோலக்கக் காட்சியைக் கண்டு விஞ்ஞானிகள் அதிசயிக்கிறார்கள்.

மெய்ஞ்ஞானிகள் பாடுகிறார்கள். கலைஞர்கள் போற்றுகிறார்கள்; அந்தச் சிதம்பர நடராஜனை — கூத்தனின் ஆட்டத்தைக் கண் குளிரக் கண்டு பரவசம் அடைந்த அப்பர் எக்களிப்பிலே பாடுகிறார்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண் நீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

நமக்கு மனிதப் பிறவி கிடைத்ததே பெரும்பேறு. ஆறறிவு படைத்த மனிதப்பிறவியைப் பெற்ற நாம் அவனது வளைந்த புருவத்தையும் கொவ்வைப் பழம் போன்ற சிவந்த வாயையும் புன்சிரிப்பையும் குளிர்ந்த சடையையும் பவளம் போல் சிவந்த மேனியில் பால்போன்ற வெண்ணீற்றையும் இனிமை நல்கும் தூக்கிய திருவடியையும் கண்டு களிப்பது மனிதப்பிறவி பெற்ற பெரும் பயனாகும். தகுதிவாய்ந்த பெறற்கரிய பெரும் பிறப்பை எடுத்த நாம் பெரும் பயன் அடையவேண்டும். இந்த நடராஜப் பெருமானை இன்றே, இப்போதே கண்டு களியாமல்விட்டால் அடுத்து புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாகிக் கல்லாய்ப் பேயாய்க் கணங்களாய்ப் பிறந்துவிடுவோம் என்பது அப்பரின் மறைமுகமான எச்சரிக்கை.

சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்ற ஐந்தொழில்களை யும் வானம் மணிமுகடாய் மால்வரையே தூணாக ஆனபெரும்பார். அரங்காக அமைத்துக் கொண்டு ஆடிக்கொண்டே செய்கிறான் நடராஜன். திருக்கரத்தில் உள்ள உடுக்கை (டமருகம்) ஒலியால் உலகத்தைத் தோற்றுவிக்கிறார், அபய கரத்தால் உலகினைக் காப்பாற்றுகிறார்; அக்கினி ஏந்திய கையால் உலகை ஒடுக்கு கிறார். முயலகனை அழுத்தி ஊன்றிய பாதத்தால் உலகத்தை மறைக்கிறார். தூக்கிய திருவடியாம் குஞ்சிதபாதத்தால் உலகுக்கு அருள்புரிகிறார். இதோ ஒரு உண்மை விளக்கம்.

தோற்றம் துடிஅதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

இன்னும் அந்த நடராஜப் பெருமானின் அதிஅற்புத தத்துவங்களைச் சித்தி யார், சிதம்பரமும்மணிக்கோவை, திருமந்திரம் போன்ற இன்னோரன்ன நூல் கள் எல்லாம் அருமையாக விளக்குகின்றன.

## பிள்ளையார் முருகன் சண்டை:

தெய்வச் சிறார்களாகிய மூத்த பிள்ளையாருக்கும் முருகனுக்கும் ஒருநாள் பலத்த சண்டை ஒன்று வந்துவிடுகிறது. முருகன் பிள்ளையாருடைய பெரிய காதைப் பிடித்து இழுத்துக் கிள்ளிவிடுகிறான்; பிள்ளையாருக்கு வருகிறது கோபம்! என்ன செய்வதென்றே தெரியாது — தானும் கிள்ளிவிடத் தெரியா மல் ஆறுமுக வேலனின் ஈராறுகண்களையும் ஒன்று இரண்டு மூன்று என்று கொஞ் சம் கிண்டலாகக் குத்தலாக எண்ணிப் பார்க்கிறார்; முருகன் விட்டுவிடுவானா? வேழமுகத்து விநாயகனும் அண்ணனின் துதிக்கையின் நீளத்தை முழம்போட்டு அளந்து பார்க்கிறான்; கோபம் மேலிட முப்பழம் நுகரும் மூஷிகவாகனனார்,

"அப்பாவிடம் சொல்லி உனக்கு என்ன செய்கிறேன் பார்" என்று முழங்குகிறார். மூக்கால் அழுதுகொண்டு பேழை வயிற்றுடன் அப்பாவிடம் ஓடிவருகிறார். சும்மா இருப்பானா முருகன். அம்மாவிடம் சொல்லி உனக்கு மோதகமும் இல்லாமல் செய்துவிடுகிறேன் பார் என்று துள்ளிக் குதித்து வருகிறான் புள்ளி மயிலேறும் பொற்குமரன். இருவரும் அப்பாவுக்கு முறையிடத் தொடங்குகிறார்கள். "அப்பா, என் செவியைத் தம்பி கிள்ளி விட்டான்." "முருகா, ஏன் அண்ணன் செவியைக் கிள்ளினாய்" "கிள்ளாமல் விடுவேனா? என் முகங்களிலே இருக்கின்ற கண்களை ஒன்று இரண்டு மூன்று என்று ஏளனமாக அண்ணன் எண்ணினான்." "விநாயகா, ஏன் அப்படிக் குறும்பு செய்தாய்; ஆறுமுகன் உன்னுடைய அருமைத் தம்பி அல்லவா!" "இவன் என் துதிக்கையின் நீளத்தை எத்தனை முழம் இருக்கிறதென்று முழம் போட்டு அளந்து பார்த்தான். நான் அவன் கண்களை எண்ணிப் பார்த்தேன்." குமரனுக்குப் பெரிய சிரிப்பு வருகிறது. சிரிக்கிறான், அப்பா என்ன செய்வார்? குறும்புப் பிள்ளைகள் ஒன்றை ஒன்று விடுவதாக இல்லை. பரமேஸ்வரன் பார்வதியை அழைத்து, "அம்மா, உன் பிள்ளைகள் பண்ணுகின்ற குறும்பைப் பார்த்தாயா? சும்மா, இருப்பதாக இல்லை. ஒருவரை ஒருவர் கேலி பண்ணி மோதிக் கொள்கிறார்கள் சற்றே கவனித்துக்கொள்" என்கிறார். சிணுங்கிய கணபதியை அருகழைத்து ஆறுதல் சொல்கிறாள் அம்பிகை. ஓடிவிளையாடும் பாப்பாக்களின் திருக்கூத்தைப் பாடலாக வடிக்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள். இதோ அப்பாடல்!

"அரனவ ளிடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐயஎன் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே அண்ணன்என் சென்னியில்
விளங்குகண் எண்ணி னன்என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து நீஅப்படி
விகடம்ஏன் செய்தாய் என
மருவும் என்கைநீள முழம்அளந் தான்என்ன
மயிலவன் நகைத்து நிற்க
மலைஅரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராய் எனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டங்
கருப்பமாப் பெற்ற கன்னி
கணபதியை அருகழைத்து அகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக் காக்கவே."

## கருணாகரன் திருக்கோயிற் கனகசபை;

இத்தனையும் தெரிந்தபின் உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலுக்குள் நுழையலாம். அங்கே இந்தக் குறும்புக்காரப் பிள்ளைகளை வலத்திலேயும் இடத்திலேயும் வைத்துக் கொண்டு நடராஜன் ஆடுகிறான். அந்த நடனசபை கனகசபை. அகிலாண்டகோடி ஈன்ற அன்னை பின்னையும் கன்னிஎன மறை பேசும் ஆனந்த ரூபவல்லி, கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தாக நின்று கொண்டு இருக்கிறாள். பெண்மைக்கு எடுத்துக்காட்டாகி, தாய்மைப் பண்புடன் மக்களையும் மருமக்களையும் அருகே வைத்துக்கொண்டு நிற்கின்ற சிவகாமி அம்மை அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிர் ஓவியமாகக் காட்சி தருகிறாள்.


மால் அயன்தேட, மறைதேட, வானவர்தேட நின்றவள் நம்மைத்தேடி வந்து இங்கே இடம் பிடித்திருக்கிறாள். பொருளாகிப் பொருள் முடிக்கும் போகமாகி, போகத்தைச் செய்யும் மாயையாகி மாயாமலத்தை நீக்கி அருளும் தெருளாகி - வித்தின்றி விளைந்த பரமானந்தத்தின் விளைவாகி - பழமறையின் குருந்தாகி - முழு ஞானப் பெருக்காகி - பிறவிப்பிணிக்கோர் மருந்தாகி - அருள் பழுத்த கொம்பாகி - அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயில் விளக்காகி - நறைபழுத்த துறைத்தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையாகி - இலங்குபவள் சொல்லும் பொருளும் என நடராஜப் பெருமானின் அருகே நிற்கின்ற கோலம் உயிர்களுக்கு எல்லாம் அருள்புரியும் கோலம்; அது தொன்மைக் கோலம்.

வள்ளியையும் தெய்வயானையையும் வலத்திலும் இடத்திலும் வைத்துக் கொண்டு அளவிடற்கரிய எழிலோடு கம்பீரமாக ஆறுமுகநாதன் கனகசபையிலே நிற்கிறான். அவன் கையிலே விண்ணோர் சிறைமீட்ட வீரவேல் விளங்கித் தோன்றுகிறது. கழுத்தில் இருக்கும் முததாரம், தோளிற் புரளும் வாகுவலயம், மார்பில் விளங்கும் யக்ஞோபவீதம், இடையில் இலங்கும் கச்சை, காலிற் பொலியும் வீரக்கழல். இவைகளால் ஆயிர கோடி காமர்களையே தூக்கி அடித்திருக்கிறான். இவன் மங்காத அழகன்; மாறாத அழகன். ஆம்! அப்பெருமான் ஈராறு கை அழகன்; இசைவான மயில் அழகன்; கருணை வேலழகன்; கமலப் பூப்போல், கால் அழகன்; மார்பழகன்; பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண் தோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும் கச்சைத் திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் விரிகரணம் சிந்தப்புனைந்த திருமுடிகள் ஓராறும் வைத்த கண் வாங்காமலே பார்க்கப் பார்க்க அழகு சொட்டிக் கொண்டே இருக்கின்றன.

நடராஜனின் வலப்புறத்திலே வித்தக விநாயகன் நின்று கொண்டிருக்கிறான். இந்த மூத்தபிள்ளை பொன்னரைஞாணும் பூந்துகில் ஆடையும் வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப் பேழைவயிறும் பெரும பாரக்கோடும் வேழ முகமும் விளங்கு சிந்தூரமும் அஞ்சுகரமும் அங்குசபாசமும் இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும் திரண்ட முப்புரி நூலும் திகழ் ஒளி மார்பும் விளங்கக் காட்சி அளிக்கிறான். அம்பலவன் ஆடும்போது அண்டசராசரங்கள் அனைத்தும் ஆடும்; உவட்டா உபதேசம் புகட்டித் தெவிட்டாத ஞானத் தெளிவைக் காட்டும் சித்திவிநாயகனும் ஆடத் தொடங்கிவிடுவான்! நிலம் துளங்க மேருத் துளங்க நெடுவான் தலம் துலங்கச் சப்பாணி கொட்டுவான்! ஆடுகின்ற கோலம் நர்த்தனவிநாயகர்! அதனால் கருணாகரப்பிள்ளையார் கோயிற் கனகசபையிலே அப்பன் ஆட்டத்தைப் பார்க்கிறார் தான் ஆடாமலே இருந்துகொண்டு! வென்றாடு திருத்தாதை வியந்து கைதுடி கொட்ட நின்றாடும் மழகளிறு இங்கே ஆடாது அசையாது நிற்கிறார்.

இத்தனை மூர்த்திகளையும் பார்த்துக்கொண்டிருக்கலாம். பலமணி நேரம் நினைத்துக் கொண்டிருக்கலாம். பல வருடம் புகழைப் பாடலாம். பல்லாயிரம் தரம் இந்த மூர்த்திகளைப் பார்க்காத கண் புண்கண்; திவ்வியரூப சௌந்தர்யத்தைப் பேசாத நாக்கு புண்நாக்கு.

ஆடத் தெரிந்த கருணாகரப் பிள்ளையார் இங்கே ஆடாமல் இருப்பது ஒரு இரகசியம். குறும்புக்காரப்பிள்ளைகளை அருகே வைத்துக்கொண்டு நடராஜன் ஆடுவது பரம இரகசியம். எல்லாம் சிதம்பர இரகசியம்!



1. மூலமூர்த்தி, 2. உற்சவமூர்த்தி, 3. ஆலய கொடிஸ்தம்பம், 4. உற்சவமூர்த்திகள், 5. மூலஸ்தான ஸ்தூபி, 6. நடேசர் ஆலயம், 7. பிள்ளையார் தேருக்கு எழுந்தருளுகிறார்.

உ

# கர்மபரிகாரம்

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

"போனநாட் செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்"

என்பது ஔவைப்பிராட்டியார் திருவாக்கு.

இப்பிறப்பில் அநுபவிக்கும் இன்பத் துன்பங்கள், முந்திய பிறப்புக்களிற் செய்துவைத்த புண்ணிய பாவ கர்மங்களின் விளைவுகள். இவை பிராரத்தம் எனப்படும். கர்மம் – வினை.

பிராரத்தத்தை ஊட்டுவோன் இறைவன். உயிர்களின் நன்மையின் பொருட்டு அளவறிந்து ஊட்டுபவன் அவன்.

இன்பத்தை ஊட்டுங்கால் விருப்பும், துன்பத்தை ஊட்டுங்கால் வெறுப்பும் உண்டாகின்றன. இந்த விருப்பு வெறுப்புக்கள் ஊட்டுவோன் கருத்தறியாமையின் விளைவுகள். இவ்விளைவுகள் ஆகாமியம் எனப்பட்டு, மேலும் வினைபெருகு தற்கு வித்தாய் விடுகின்றன.

ஊட்டுவோன் கருத்தை விசாரித்தறிபவர்கள், துன்ப அநுபவங்களைப் பொறுக்க இயலாதிருந்தால், இறைவனை வேண்டுதல் செய்து, தவத்தால் துன்ப சாந்தி பெறுவதன்றி, துன்ப அநுபவத்தில் வெறுப்புக் கொண்டு, இறைவன் நீதியை அவமதிப்பதில்லை. இறைவன் துன்பத்தை அருளும் நீதியை விசாரித் துணரும் ஞானமே வேண்டற்பாலது.

"இருள் சேர் இருவினை" என்கின்றார் வள்ளுவதேவர். உயிர்கள் செய்யும் நல்வினை தீவினைகள் இருளாகிய அறியாமையின் விளைவுகளே. நல்வினை பொன் விலங்கு; தீவினை இரும்பு விலங்கு.

ஊட்டுவோன் கருத்தறிவோர், பிராரத்தத்தை நுகருங்கால் விருப்பு வெறுப்புக் கொள்ளார். அவர்களுக்கு ஆகாமிய விளைவு இல்லை. அவர்கள் நல் வினையுஞ் செய்வதில்லை; தீவினையுஞ் செய்வதில்லை; உத்தரவின்றி எதுவும் செய்வ தில்லை. உத்தரவு இறைவன் உத்தரவு.

'அத்தனே திருவாலவாயாய்
அமண் சித்தரை அழிக்கத் திருவுள்ளமே'

என்று, சம்பந்தப்பிள்ளை உத்தரவு வேண்டுதல் காண்க.

ஊட்டுவோன் கருத்தறிய முயலும் நிலை, இருவினை ஒப்புப் பிறக்கும் நிலை. இந்நிலை, மலபரிபாகமுறுதற்கு முதற்படியாய நிலை.

ஊட்டுவோன் கருத்தறியும் ஞானம் உதிக்குமானல், இருவினையாகிய கர்மங்களுக்குப் பரிகாரந் தேடியதாம். கர்மபரிகார ஞானமே வேண்டற்பாலது.

*" அரன்றன்பாதம் மறந்துசெய் அறங்களெல்லாம்*
*வீண் செயல் "*

என்பது சித்தியார். எத்துணை உயர்ந்த செயலாயினும், ஊட்டுவோன் கருத்தறியாது செய்யும் செயல் வீண்செயலேயாம் என்றவாறு.

*" கிரியையென மருவுமவை யாவும் ஞானம்*
*கிடைத்தற்கு நிமித்தம் "*

என்பது சிவப்பிரகாசம்.

கோயிற் கிரியைகளத்தனையும், ஊட்டுவோன் கருத்தை அறியும் ஞானத்தைப் பெறுதற்கு நிமித்தமாயிருத்தல் வேண்டும். நிமித்தம்–காரணம்.

ஒரு கணித வினவின் விடையைப் பெறுதற்குச் செய்யுங் கிரியைகள் அவ் விடைக்கு நிமித்தமாதல் போல, கோயிற் கிரியைகள் அத்தனையும் கர்மபரிகார ஞான நிமித்தமாதல் வேண்டும்.

## கருணாகர கணேச அவதாரம்

எண்டகு பெருநசை யெய்தி யைம்புலன்
விண்டிட லின்றியே விழியின் பாற்படக்
கண்டனள் கவுரியக் கடிகொண் மண்டபங்
கொண்டிடு மோவியக் கோலம் யாவுமே;

பாங்கரில் வருவதோர் பரம ஞானையா
லாங்கத னடுவணி லாதி யாகியே
யோங்கிய தனியெழுத் தொன்றி ரண்டதாய்த்
தூங்குகைம் மலைகளிற் றேன்றிற் றென்பவே.

அக்கணத் தாயிடை யைங்கரத் தவனருண்
முக்கணுல் வாயினன் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனு மாமுகத் தவன்மதிச்
செச்கர்வார் சடையனேர் சிறுவன்வந் தருளினன்.

மருளறப் புகலுநான் மறைகளிற் றிகழுமெய்ப்
பொருளெனப் படுமவன் புவனமுற் றவர்கடம்
இருளறுத் தவர்மனத் திடர்தவிர்த் தருளவோ
ரருளுருத் தனையெடுத் தவதரித் துளனவன்;

— கந்தபுராணம்.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

கலைமகள் ஆசிரியர், வாகீச காலாநிதி,
கி. வா. ஜெகந்நாதன் அவர்களால்
பாடப்பெற்ற

# கருணாகரன் புகழ்மாலை

ஓங்காரந் தன்னுருவாய்ப் பரஞானம் முழுக்கோடாய்
ஓடிந்த கோடு
பாங்கார அபரஞா னக்குறியாய் இலங்குகின்ற
பரமன் கல்வி
நீங்காமல் உயர்வதற்கு நினைப்பார்கள் அடிபணியின்
நிறைவு சேர்த்துத்
தேங்காத ரத்தினருள் செய்கருணா கரப்பிள்ளை
திருத்தாள் போற்றி.

தந்தையொடும் அன்னையிருந்த கோலத்தை வலம்வந்து
சராசரங்கள்
முந்தஉறை உலகங்கள் நும்மிடத்தே இருத்தலினால்
முயன்று செய்த
இந்தவலத் தாலுலகை வலம்வந்த தாயிற்றால்
எனவே ஈக
அந்தமிலாச் சுவைக்கனியை ஏற்றகரு ணாகரப்பேர்
ஆனை வாழ்க.

ஔவைக்குக் கருணைபுரி மதகரியை உயர்நம்பி
ஆண்டார் நம்பி
செவ்வையுறத் தேவாரம் இருக்குமிடம் அறிந்திடவே
தெரித்த தேவை
எவ்வயினும் நிறைபொருளை உரும்பராய்த் திருத்தலத்தே
இலங்கும் வாழ்வைக்
கொவ்வையிதழ் வல்லவைநா யகன் கருணா
கரக் கரியைக் குறித்து வாழ்வாம்.

சிதம்பரசுப் பிரமணியன் தனக்குமுன்னும் விநாயகனைத்
தேவர் போற்றிப்
பதம்பரவ அருள்கொடுக்கும் கற்பகத்தை மாதுளச்செம்
பழத்தை ஏந்தி
நிதம்பொலியும் எழிற்கருணா கரப்பிள்ளை யாம்தேவை
நெடுங்கை ஏந்தி
இதம்தருநல் லருள்பொழியும் கணபதியைப் போற்றி என்றும்
ஏத்தி வாழ்வாம்.

தள்ளையார் தந்தையார் எவ்வளவு சந்ததமும்
தழைக்கும் இந்தப்
பிள்ளையா ரன்றியோ ருறவுண்டோ என அன்பர்
பேணும் பெம்மான்
கள்ளையார் தரும்பொழில்சூழ் உரும்பராய்ப் பதியினிலே
கவினும் ஐயன்
கொள்ளையார் அருள்கொழிக்கும் திருக்கருணு கரக்கரியின்
குணத்தாள் போற்றி.

ஞானம்வரும் செல்வம்வரும் பண்புவரும்
எழில்பெருகும் நண்பர் சேர்வர்
தானம்வரும் தவம்வளரும் மிடியின்றி எந்நாளும்
தழைக்கும் வாழ்வு
வானவரும் மண்ணவரும் பணிகருணு கரப்பிள்ளை
யாரை வாழ்த்தும்
மானவருக் கெய்தாத பயனில்லை இதைநினைந்து
வாழ்தி நெஞ்சே.

துதிக்கைமிக உடையான்தன் புகழ் பேசித்
துதிக்கையுடைத் தொண்டர்தன்னை
மதிக்கையிலே அவரிடரை மிதிக்கைசெயும் பேராளன்
மயலைப் போக்கிக்
கதிக்கையுறு ஞானந்தந் தின்பளிக்கும் கணபதிஓங்
காரச் சோதி
நிதிக்குவைபோல் அருள்வழங்கும் கருணுகரக் கரியை
நினைந்து வாழ்வாம்.

சோழனுய ராணையினைச் செலுத்துகரு ணுகரனும்
தூய வீரன்
ஆழமுறு மன்பின்நிறு வியகருணு கரப்பிள்ளை
யாரைப் போற்றின்
ஏழுலகில் புகழடையும் பொருளடையும் கலைஅடையும்
எவர்க்கும் மேலாம்
வாழ்வுவரும் மறுமையிலே முத்திநிலை எய்துகின்ற
மாட்சி யுண்டாம்.

இதழொன்றே உடையதும்பை நறுமணமில் லாவிடினும்
ஏற்கும் ஐயன்
கதுவுபடா டோபமின்றி எளிமையொடும் அன்புசெய்வார்
கருணை எய்த
மதிநலந்தந் தாட்கொள்ளும் கரிமுகவன் உரும்பராய்
வாழும் அப்பன்
குதிமதமார் கவுட்கருணு கரப்பிள்ளை யார்பாதம்
குறித்து வாழ்வாம்.

திருமுறைகள் அழியாமல் வெளிப்படுத்தும் அருளுடையான்
திகழோங் காரத்
துருவுடையான் கல்விபெறு வார்பணியின் மதிநலத்தை
உதவும் ஐயன்
தெருவினிலும் மரத்தடியும் எளிமையாக எழுந்தருளும்
தேவன் போற்றும்
பெருவயிறன் கருணாகரப் பிள்ளையார் துணையைப்
பெற்று வாழ்வாம்.

### வெண்பா

உரும்பராய் மேவும் ஒருமுதலே ஞானத்
திருவுருவே ஓங்காரத் தேவே — கருணா
கரப்பிள்ளை யாரேஉன் காலிணையைப் பற்றின்
நிரப்பில்லை யாமே நிலத்து.

கருணாகரத் தொண்டை மானிறுவும் ஞானக்
கருணாகரக் கரியின் காலை — அரணாகப்
பற்றுமவர்க் கில்லை பலதுயரும் இவ்வுலகில்
பற்றுவரா வாழ்வு வரும்.

கல்வி பெறலாம் கனம்பெறலாம் சீர்பெறலாம்
செல்வம் பெறலாம் திறம்பெறலாம் — மல்குவளம்
ஆளுரும்ப ராயில் அரியகரு ணாகரனின்
தாளிணையில் வீழ்வார் தமக்கு

பாசத்தை வீட்டும் பரமசுக வாழ்வளிக்கும்
தேசுற்ற மேனிச் சிறப்பருளும் — வீசும்
தருணாத பம்போற்பொன் சாருரும் பராயிற்
கருணா கரப்பேர் கரி.

காணலாம் கண்டு கருத்துருக லாமன்பு
பூணலாம் துன்பத்தைப் போக்கலாம் — நீணிலத்தில்
கன்னமதம் பூத்த கருணா கரயானை
தன்னடியைத் தாழ்பவர்கள் தாம்.

### கலித்துறை

வேதத்தி னுள்ளே விளங்கும் பிறைமுடி மேலணியும்
நாதக் கழலொலி செய்ய நடஞ்செயும் ஞானமெனும்
போதத் திருவுரு வாகிச் சிறக்கும் புனலுரும்பை
ஆதிக் கருணா கரப்பிள்ளை யாரெனும் அற்புதனே.

சொல்லுக் கடங்காப் பொருளாய்ப் பொருள்களிற் சூக்குமமாய்
நல்லுத் தமர்தம் உளக்கோயில் மன்னி நடனமிடும்
மல்லுக் குரிய திருத்தோள்கள் நான்கொடு மற்றொருகை
புல்லிச் சிறக்கும் கருணா கரனெனும் பொற்கரியே.

பத்தர் விரும்பும் பொருளை அளிக்கும் பருப்பதத்தில்
புத்தக மாகப் பெரும்பா ரதத்தைப் பொறித்தருளும்
வித்தையில் வல்லவன் ஔவையைக் கைலை விடுத்துதவும்
உத்தம னுங்கரு ணாகரப் பிள்ளை உயர்கரமே.

௳

# பிள்ளையார் சுழி

சித்தாந்தப் பேராசிரியர் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

## மாற்ற முடியாத — மறக்க முடியாத பழக்கம்:

சில பழக்கங்கள் நம்மையறியாமலே நம்முடைய வாழ்வில் கலந்திருக்கின்றன. அப்பழக்கங்கள் எங்ஙனம் உண்டாயின? எப்படி நம்மிடைக் கலந்தன என்று எண்ணிப் பார்க்காமையால் சிற்சில சமயங்களில் நாம் அப்பழக்கங்களை விட்டுவிடலாமா? என்றுகூட எண்ணுகிறோம். துணிந்து விட்டுவிட்டாலோ. அன்று முழுவதும் ஏதோ செய்யக் கூடாத காரியத்தைச் செய்துவிட்டதுபோலவும் — அதனால் பெருந் தீங்கு விளையப் போவதாகவும் கண்டு கவலைப்பட்டுக்கொண்டேயிருப்போம். அத்தகைய பழக்கங்களில் பிள்ளையார் சுழி போடுதலும், எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் பிள்ளையார் குட்டிக் கொள்ளுதலும் ஆம்.

## பிள்ளையார் சுழி:

பிறந்தது எப்படி? என்பதிற் பலரும் பலவகையான காரணங்களைக் கூறுகின்றனர். அவற்றுட் சில ஆகம சாத்திர உண்மைகள். சில ஊகமான யுக்தி வாதங்கள். அவை எப்படியிருந்தாலும் தொகுத்துணிர்வது நல்லதுதானே!

1. நம்முடைய தமிழ் எழுத்தும், கிரந்த எழுத்தும் வட்டவடிவானவை. வட்டம் இயற்கையான வடிவம். குழந்தைகள் கையிலே எழுதுங் குச்சியைக் கொடுத்தால் வட்ட வட்டமாகவே எழுதுகின்றன. அது அவைகளின் இயல்பு. எழுதுகின்றவர்கள், எழுதுகோல் சிக்கின்றி நேர்மையாக எழுதுமா என்பதை ஆராய முதற்கண் சுழித்தனர். அது பிள்ளையார் சுழியாயிற்று என்பது ஒன்று.

2. ஓம் என்பது முதல் ஒலி. இதனின்றே எல்லா ஒலியுலகும் பிறந்தன; அது அ + உ + ம் என்ற மூன்றெழுத்தின் கூட்டு. ஒலியுலக மூலமாகிய இதனை எழுதியே ஏனையவற்றை எழுதுவது நன்றி மறவாத தமிழர் பண்பு. ஓம் என்பதை விரைந்து எழுதும்போது 'உ' என்பதுபோல எழுதினர். இதுதான் பிள்ளையார் சுழி என்பர் சிலர்.

3. ஓம் என்ற வடிவம் பிள்ளையார் வடிவம்; இப்பிரணவம் திரிந்த வடிவம் பிள்ளையார் சுழி என்பர் சிலர்.

4. ஓங்காரம் — பரம்பொருள். இதற்குச் சிந்திப்பவரை உயர்த்துவது என்பது பகுதிப்பொருள். உபதேசம் பெற்ற பரிபாக ஆன்மா இதனை உச்சரித்த அளவில் மூன்றுடல்களையும் நீத்து, பிரகிருதி மண்டலத்திற்கு மேலே உயர்கிறான் என்பது இதன் விளக்கம். இதனை அதர்வசிகோபநிஷத் —

ஸக்ருதுச்சாரித மாத்ர ஊர்த்வமுந்நயதீத்யோங்கார: | என்றும்
தஸ்மாதுச்யத ஓங்கார: யஸ்மாதுச்சார்யமாணவஸ்ஸர்வம்
ஶரீரம் ஊர்த்வமுந்நயதி தஸ்மாதுச்யதே ஓங்கார: || என்றும்

கூறுகிறது; பிரணவத்தை உபாசனை செய்தவன் சாவா மூவாப் பேரின்பத்தை எய்துகின்றான் என்று முண்டகோபநிடதம் மொழிகின்றது.

மேலும் முண்டகோபநிஷதம் 'ப்ரணவோ தநு:' எனப் பிரணவம் வில்வடிவானது என்றது. சர்ப்பவடிவான குண்டலி நீ இது: இதுதான் மூல நாடி அன்னத்தின் குரல் போன்ற ஒலியுடையது என்ற கருத்தமைய,

நாபிதேசாத் ப்ரவ்ருத்தா ஸா குண்டலிநீ ஹம்ஸநிஸ்வநா: என்று கூறுகிறது ஞான சித்தியாகமம்;

பிரணவம் ஐந்தெழுத்துக்களின் கூட்டம். முதல் எழுத்துரு நட்சத்திரப் புள்ளி. அதாவது வட்டப் புள்ளி (●). இரண்டாம் வடிவு தண்டம் போலப் படுக்கையிற் கோடு. '—' இது போன்றது. மூன்றும் உரு வட்டம் (○). நான்காம் உரு பிறைமதி ◡. ஐந்தாம் உரு பிந்து. அதாவது . புள்ளி. இவற்றுள் வட்டமும் நேர்கோடும இணைந்து பிள்ளையார் சுழியாகிறது. இச்சுழியை எழுதினுற் போதும், பிள்ளையார் வணக்கம் ஆகிவிடுகிறது. இப்பிரணவத்தில் உள்ள அகரம் சிவம். உகரம் சத்தி. இவையிரண்டும சேர்ந்த ெ — இது பிள்ளையார் சுழியாகிறது. இவ்வுண்மைகளை,

ப்ரதமம் தாரகாகாரம் த்விதீயம் தண்டவத் ஸ்திதம் |
த்ருதீயம் குண்டலாகாரம் சதுர்த்தம் ஹ்யர்த்தசந்த்ரகம் |
பஞ்சமம் பிந்துஸம்யுக்தம் ப்ரணவம் பஞ்சலக்ஷணம் |

என்று காமிகாகமும்,

"இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி
உற நிற்கும் ஓங்காரத்துள்."

எனத் திருவருட்பயனும்,

ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
"அகாம் உயிரே உகரம் பரமே
மகரம் மலமாய் வருமுப் பதத்தில்"

எனத் திருமந்திரமும் கூறுகின்றன. ஆகவே, பிள்ளையார் சுழி பிரணவத்தின் சிதைந்த வடிவு என்பதும், இதனை முதன்முதல் எழுதுவதன் வாயிலாக உயிர்கள் தற்போதங் கெட்டுச், சிவஞானமே வரப்பெற்று, செய்யுஞ் செயலனைத்தும் சிவச் செயலாக விளங்கும் தன்மையைப் பெறுகின்றன என்பதும் உணரக் கிடக்கின்றன.

---

சிவனரு வுருவுமல்லன் சித்தினே டசித்து மல்லன்
பவமுதற் றொழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
தவமுத லியோக போகந் தரிப்பவ னல்லன் றனே
இவைபெற வியைந்து மொன்று மியைந்திடா வியல்பினனே.

— சித்தியார்.

# பல்லவர் காலச் சமய எழுச்சியும் தமிழ் இலக்கியச் சமய வளர்ச்சியும்

**பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்**
(தமிழ்ப் பேராசிரியரும், தமிழ்த்துறைத் தலைவரும்
இலங்கைப் பல்கலைக் கழகம்.)

தமிழ் நாட்டிற் சங்க காலத்துக்குப் பின் ஏற்பட்ட குழப்பங்களை அடக்கி, ஆறும் நூற்றுண்டின் இறுதியில் மீண்டும் எங்கும் அமைதியும், நிலையான வாழ்வும் பரவச் செய்தனர் பல்லவ அரசர்கள். பல்லவர் ஆட்சிக்காலத்தின் தொடக்கத்திற் சமணமும் பௌத்தமும் ஆதிக்கம் பெற்றிருந்தன. இந்நிலையிற் சைவ நாயன்மாரும், வைணவ ஆழ்வார்களும் தோன்றி, இயக்க ரீதியாக வைதிக சமயங்களை மீண்டும் உயரிய நிலையில் அமைக்கத் தொண்டாற்றினர்.

இவர்களின் தொண்டினுற் கட்டுக்கடங்கா ஆவேசத்துடன் வைதிக சமய உணர்ச்சி பரவியது. இச்சமய எழுச்சியினுலே தமிழரின் மனப்பான்மையும் மாறுதல் அடைந்தது. காதலிலும், போரிலும் உயிரைக் கொடுத்த தமிழர், சமயத்திற்கு உயிரைக் கொடுக்கும் மனப்பான்மையைப் பெற்றனர். புதிய ஊக்கத்துடன் தமிழ் நாட்டில் ஏற்பட்ட சமய உணர்ச்சி பலப்பட்டுக்கொண்டே வந்தது. சமய குரவர் நாடெங்கும் சுற்றுலாச் செய்து, கரை கடந்த உற்சாகத்துடன் தொண்டாற்றினர். கோயில்களுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டது; சமய குரவர் பல தலங்களுக்குச் சென்று அங்குள்ள கடவுளரைப் பற்றி மனம் உருகப் பாடினர். சமய பக்தியும் உணர்ச்சியும் பக்தர்களின் உற்சாகத்தால் விரிந்து மக்களிடம் பரவின; கடவுளை அடைவதற்குப் பக்தி மார்க்கமே சிறந்தது எனக் கொள்ளப்பட்டது.

சமயத் தலைவரின் உரைகளைக் கேட்கவும், தோத்திரப் பாடல்களைப் பாடவும் மக்கள் திரள் திரளாக அடிக்கடி கூடினர். அவர்கள் உள்ளத்தில் உண்டாகும் சமய எழுச்சியை நம்பிக்கை மூலம் வலுப்படுத்துவதற்கு ஏற்ற வழி தேட வேண்டியதாயிற்று. கோயில்கள் இதற்குத் தகுந்த கருவிகளாக அமைந்தன. நாள்தோறும் மக்கள் கூடி அவரவர் மதப் பிரிவுக்குத் தக்கபடி வகுத்துள்ள ஆசாரங்களைக் கைக்கொண்டு, இறைவனை வணங்குவதற்கேற்ற வசதிகள் செய்யவேண்டியிருந்தது. இதற்காக ஆங்காங்கிருந்த சிறுகோயில்கள் பிரமாண்டமாக, என்றும் அழியாத கல்லினுற் கட்டப்பட்டன. அரசர் இப்பணியில் ஈடுபட்டுத் தம் புகழை நிலைநாட்டினர். கோயில்கள் அலுவல்களில் அரசரின் ஆவலினும் பன்மடங்கு ஆவலையும் ஆற்றலையும் மக்கள் பெற்றிருந்தனர். கோயில்கள் கட்டுவதும், வானத்தை நோக்கிக் கோபுரங்கள் எழுப்புவதும், மண்டபங்கள் அமைப்பதும் கடவுளுக்குச் செய்யும் திருப்பணிகள் ஆயின. தமிழ்நாட்டுக் கோயில்களைப் போன்ற சிறந்த சிற்பக் கட்டிடங்களை வேறு எந்நாட்டிலும் காணமுடியாது.

கோயில்களில் ஒழுங்காகப் பூசைகள் நடைபெற்றன, திருவிழாக்களும் கொண்டாடப்பட்டன. பொதுமக்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்க இவை காலாயிருந்தன. அயலூர்களிலிருந்தும் மக்கள் வந்து கோயிலிற் கூடினர். இதனுற் பல இடங்களிலுள்ள மக்களிடையே ஓர் ஒற்றுமை மனப்பான்மையும் தோன்றியது.

மக்களின் சமூக வாழ்க்கைக்கு அச்சாணியாகக் கோயில்கள் அமைந்தன; சிறந்த சிற்பம், ஓவியம் முதலியன கோயில்களிற் காட்சியளித்தன; இசை, நடனம் முதலிய நுண்கலைகளையும் கோயில்கள் வளர்த்தன. சமயக் கல்வியின் இருப்பிடமாகவும் இவை விளங்கின. சமயப் பிரசங்கங்களும், கூட்டு வழிபாடும் இங்கு இடம்பெற்றன. பிற ஊர்களிலிருந்து வரும் துறவிகளும் பிறரும் தங்குவதற்குக் கோயில்கள் பயன்பட்டன; கிராம மக்களுக்குத் தீயாலும், நீராலும் துன்பம் ஏற்படுங் காலங்களிற் கோயில்கள் அவர்களுக்குப் புகலிடமாக அமைந்தன; மக்களுக்கு உதவி செய்யும் பண்டாரங்களாக அவை விளங்கின. நோய்வாய்ப் பட்டோருக்கு அவை சிகிச்சை அளித்தன. சுருங்கக் கூறின், மக்கள் வாழ்க்கையின் பல துறைகளுடன் தொடர்புடையனவாய், அவர்கள் வாழ்க்கைக்குப் பல வகையிற் பயன் படுவனவாய்ப் பொதுமக்கள் வாழ்க்கையோடு பின்னி ஒன்றிக் கிடந்தன கோயில்கள்.

இந்தச் சமய எழுச்சியின் பயனாகத் தமிழ் இலக்கிய உலகம் அடைந்த பயன் அளவற்றது. சைவ நாயன்மாரின் தேவாரத்திலும் திருவாசகத்திலும், வைணவ ஆழ்வார்களின் பிரபந்தங்களிலும் கல் நெஞ்சையும் உருகச் செய்யும் இசைப் பாட்டுக்கள், கவி நயமும் இசை ஏற்றமும் பொருட் சிறப்பும் பொருந்தி, நூற்றுக்கணக்காக மலிந்து கிடக்கின்றன. இவர்கள் பாடல்கள் தமிழ் இலக்கியப் பண்பைப் பல துறைகளில் மாற்றி அமைத்தன. நாயன் மாரும் ஆழ்வார்களும் தம் உணர்ச்சி அனுபவத்தை வெளிப்படுத்தப் பெரும்பாலும் பதிக முறையினைப் பயன்படுத்தினர்; பத்துப் பாக்களைக் கொண்ட பதிகம், சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்றுப் பல்லவர் கால இறுதியில் உச்ச நிலையை அடைந்தது.

இறைவனைக் குறித்துப் பாடப்பட்ட பல்லவர் காலத்துப் பாக்கள், தமிழ் இலக்கிய வரலாற்றிற் சிறந்த இடம் பெறுகின்றன. பக்திச் சுவை மிக்க தோத்திரப் பாக்கள் பல்லவர் காலத்திலே தோன்றியவாறு வேறு எக்காலத்திலும் வேறு எந்நாட்டிலும் தோன்றவில்லை. அப்பர், சம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமாண் நாயனார், மாணிக்கவாசகர், திருமூலர் முதலிய சைவப் பெரியாரும்; திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், நாச்சியார், தொண்டரடிப் பொடியாழ்வார், குலசேகர ஆழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் போன்ற வைணவ அடியாரும் இறைவனின் திருவருளை எண்ணி எண்ணி உள்ளம் உருகப் பாடிய பாசுரங்கள் பக்திச் சுவை நிரம்பியனவாய், தமிழ் ஓசைப் பெருக்கு மலிந்தனவாய்த் தமிழ் இலக்கியத்தை அழகுபடுத்துகின்றன.

தமிழ்ச் சமய இலக்கிய வரலாற்றிலே நாயன்மார் பாடல்களுக்கும் ஆழ்வார்களின் பிரபந்தங்களுக்கும் தனி இடம் உண்டு. தமிழிற் பக்தி இலக்கியத்தை உருப்படுத்தியவர்கள் அவர்களே; அவர்களின் இலக்கியப்பணியினாலேயே உலகிலுள்ள பக்தி இலக்கியங்களிலே தமிழ்ப் பக்தி இலக்கியங்களே சிறந்தவை என்ற பெருமை ஏற்பட்டிருக்கின்றது; பிறநாட்டு அறிஞர்களும் பக்திக்கு உகந்தமொழி தமிழே என்று இன்றும் போற்றுகின்றனர்;

# ஆலயம்

## திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்

அறிவு நிறைந்த ஆன்றோர்கள் நமது பாரத தேசத்தில் ஆலயத்தை அமைத்து அன்புடன் வழிபாடு புரிந்தார்கள். பண்டைக் காலத்து மன்னர்கள் தமது அரண்மனையினும் பெரிதாகத் திருக்கோயில்களைப் புதுக்கிப் பாரத நாட்டிற்கு அழியாத புகழை நிலைநாட்டினார்கள்.

மலையே இல்லாத சோழவள நாட்டில் உள்ள தஞ்சையில் ராஜராஜ சோழன் வானமளாவிய கோபுரத்தையும் திருமதில்களையும் மண்டபங்களையும் என்றென்றும் அழியாத நிலையிற் சிலையினால் புதுக்கினான். இன்று தஞ்சையில் ராஜராஜ சோழன் அரண்மனை இருந்த அடிச்சுவடுகூடத் தெரியவில்லை. அவன் புதுக்கியஆலயம் அழியாப் புகழுடன் விளங்குகின்றது. அதேபோல், மதுரையில் பாண்டிய மன்னர்கள் வாழ்ந்த அரண்மனையோ அரண்மனையின் தூண்களோ காணப்படவில்லை பாண்டிய மன்னர்கள் கட்டிய மீனாட்சி அம்மையின் கோயில் ஒன்றே நிலைத்து நிற்கின்றது.

சுந்தரமாற பாண்டியன் திருவானைக்கா என்னும் திருக்கோயில் நான்காவது சுற்றுப்பிராகாரத்தில் தெற்கு மதில் புதுக்கினான். சுந்தரமாற பாண்டியன் வாழ்ந்த வீடோ அணிந்த அணிகலன்களோ இன்று காணப்பெறவில்லை. அம் மன்னவன் புதுக்கிய அம்மதில் இன்றும் நின்று காட்சி தருகின்றது. இதனை அருணகிரிநாதரும் தமது திருப்புகழில் வியந்து கூறுகின்றார்கள்.

“துங்க கஜாரணி யத்தி லுத்தம
சம்பு தடாக மடுத்த தட்சிண
சுந்தரமாறன் மதிற் புறத்துறை பெருமாளே”

கச்சியம்பதியிற் பல்லவ மன்னன் புதுக்கிய கைலாசநாதர் திருக்கோயிலின் அளவுபடுத்த முடியாத வித்தக சித்திரப் பதுமைகளை இன்று மேனாட்டவரும் கண்டு வியந்து, படமெடுத்துச் செல்வதை எண்ணும்போது உள்ளம் இறும்பூதெய்துகின்றது; இன்று பாரத நாட்டின் அழியாத செல்வங்களாக — புகழின் கருவூலங்களாக — சமய சின்னங்களாக நமது ஆலயங்கள் அமைந்திருக்கின்றன.

இனி, பொன்னும் வெள்ளியும் ஏராளமாக இருந்த பண்டைக் காலத்து மன்னர்கள் லக்ஷாதி லக்ஷம் நாணயங்களைச் செலவழித்து ஐந்து பிராகாரங்கள், ஏழு பிராகாரங்கள் ஆயிரங்கால் மண்டபம், கோபுரம் முதலியவைகளை அமைத்துப் பலப்பல ஆலயங்களைப் புதுக்கினார்கள். இவ்வண்ணம் புதுக்கிய மன்னர்கள் மூலஸ்தானத்தில் திருவுருவம் கல்லினாலும், எழுந்தருளும் உற்சவமூர்த்தி செம்பினாலும் அமைத்தார்கள். எத்தனையோ லக்ஷம் செலவழித்துக் கோயில் புதுக்கிய மன்னர்கள் தங்கத்தாலும் வெள்ளியாலும் உருவங்களை அமைத்திருக்கலாமல்லவா? அவர்களிடம் தனமும் மனமுமிருந்தும், தங்கத்தாலும் வெள்ளியினாலும் திருவுருவங்களை அமைக்காமல் கல்லாலும் செம்பாலும் அமைத்த காரணம் யாது? கூர்த்த மதியுடையார் இதனை ஆய்ந்து உண்மை காணும் கடமை உடையவராவர்.

இறைவன் ஒளி உருவாக விளங்குகின்றவன்; "சோதியே! சுடரே! சூழொளி விளக்கே!" "ஒளிவளர் விளக்கே!" "மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" "தீப மங்கள சோதி நமோ நம." "பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு" என்ற திருவாக்கால் அறியலாம்.

உலகிற் காணப்படும் பொருள்களில் கல்லில் நெருப்பு அதிகமாகத் தங்கியிருப்பது கண்கூடு, ஒரு கல்லை மற்றொரு கல்லால் தட்டினால் நெருப்பு உடனே வெளிப்படுகின்றது. சிவ வேள்வி வளர்த்து அச்சிவவேள்வியில் எழும் சிவவொளியை நிறைகுடமாகிய கும்பத்திற் சேமித்து அக்கும்ப நீரால் நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரகமாகிய கடவுளை நிறுவினார்கள். எனவே சோதிமயமான ஒளியின் ஆற்றல் அக்கற்சிலையில் அமைந்திருக்கின்றது.

இனி திருவீதியில் எழுந்தருளி வரும் உற்சவமூர்த்தி செம்பினால் அமைந்துள்ளது; அதன் காரணம் கூறுதும். ஊருக்கு வெளியே அமைந்துள்ள மின் ஆற்றலை (Electricites) ஊருக்குள்ளே பாய்ச்சும் கம்பி செம்பினால் அமைந்திருப்பதைக் காண்க. செப்புக் கம்பிக்குப் பாய்ச்சும் ஆற்றல் உளது. ஆகவே, மூலஸ்தானத்தில் சேமித்துள்ள தெய்வ மின்சார ஆற்றலை ஆன்மாக்களின் உய்வு கருதித் திருவீதியில் பாய்ச்சுகின்ற உற்சவ மூர்த்தியைச் செம்பினால் அமைத்த நமது முன்னோர்களின் மதிநலத்தை உன்னும்பொழுது உள்ளம் உருகுகின்றது. இன்று கண்கூடாக விளங்கும் இந்தச் சாதனங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னரேயே பல ஆண்டுகளுக்கு முன் தாமிர விக்கிரகத்தைச் செய்து அதன் மூலம் ஆன்மாக்களுக்கு நமது முன்னோர்கள் நன்மை புரிந்தார்கள்.

மேலும் இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான். ஆதலால், இறைவனை ஆலயத்தில் சென்றுதான் வணங்கவேண்டுமா? இருந்த இடத்தில் இருந்தே வணங்கினால் போதாதா? என்று கூறுவாருமுளர்.

இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் ஆலயத்திலுள்ள திருவுருவத்தில் விளங்கித் தோன்றுகின்றனன். பசுவின் உடம்பு முழுவதும் பால் நிறைந்து இருக்கின்றது. பாலைப்பெற முயலுகின்ற ஒருவன் அதன் கொம்பையோ காதுகளையோ, வாலையோ வருடினால் பால் கிடைக்குமா? என்ன கிடைக்கும் என்பதைக் கூறவேண்டாமே! எனவே, பால்பெற விரும்புவோன் பசுவின் மடியை வருடிப் பால் பெறுவதுபோல், இறைவன் அருளைப் பெறவிரும்புவோன் ஆலயத்திற் சென்று இறைவன் திருமுன் நின்று வழிபட்டுத் திருவருளைப் பெறுதல் வேண்டும்.

இனி, கம்பிகளில் மறைந்து நிற்கும் மின்சார ஆற்றல் மின்சார விளக்கின் மூலம் வெளிப்படுவது போல் எங்கும் மறைந்து நிறைந்திருக்கின்ற இறைவன் திருவருளைத் திருக்கோயிலின் திருவுருவங்கள் மூலம் பெறுவது எளிய முறையென உணர்க.

எனவே, நமது முன்னோர்கள் கல்லையும், செம்பையும் கடவுளெனக் கருதி மூடநம்பிக்கையினால் வழிபட்டார்கள் எனக் கருதுவது பேதைமையாகும். கல்லிலும் செம்பிலும் அமைந்துள்ள அருளாற்றலையே அவர்கள் கடவுளென்று கருதி வழிபட்டார்கள். நம்மையும் வழிபடுமாறு வழிகாட்டினார்கள். கடவுளின் திருவருளைப் பெற்றுக் கடவுளுடன் உறவாடிய நால்வர்களும், ஆழ்வாராதிகளும் தலங்கள் தோறும் நடந்து சென்று கோயில் வழிபாடு செய்தார்களென்றால் அதன் பெருமை அளவிடற்கரியதன்றோ? ஆலயங்கள்தோறும் சென்று வழிபடுவோர் உள்ளத்தை ஆண்டவன் தனக்கு ஆலயமாகக் கொண்டு எழுந்தருளுகின்றான். திருமூலர் எளிதாகத் தெரிவிக்கின்றனர்.

*"நாடும் நகரமும் நற்திருக் கோயிலும்*
*தேடித் திரிந்து சிவபெருமா னென்று*
*பாடுமின் ; பாடிப் பணிமின் ; பணிந்தபின்*
*கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே !"*

திருவருள் பெற்ற அநுபூதிச் செல்வர்களும் நியதியாக ஆலயஞ் சென்று வழிபட்டார்கள் என்று உணர்க. பாண்டி நாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்த மணிவாசகப் பெருந்தகையார், "புத்தேளிர் கோமான் நின் திருக்கோயில் தூரகேன், மெழுகேன், கூத்தாடேன்" என்று கூறுகின்றனர்.

மனிதனைப் புனிதனாகச் செய்வது ஆலயம். தெய்வ அருளாற்றல் அங்கே நிலவிக் கொண்டு இருக்கின்றது. அங்கு சென்று வழிபடுவோரது வினைகளாகிய பஞ்சுப் பொதிகள் திருவருளாகிய அனற்பொறியால் வெந்து சாம்பலாகின்றன. இகபர நலன்கள் எளிதில் எய்துகின்றன. மார்க்கண்டேயராதி மாதவரும், சீலமுடன் ஆலய வழிபாடு செய்தனர். சிவஞான போதம் 12வது சூத்திரம், அருட்பயன் பெற்ற ஆன்றோரும் வாசனா மலம் தாக்காதிருக்கும் பொருட்டு ஆலய வழிபாடு புரிவது இன்றியமையாதது என்று இயம்புகின்றது.

*செம்மலர் நோன்றாள் சேர லொட்டா*
*அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ*
*மாலற நேயம் மலிந்தவர் வேடமும்*
*ஆலயம் தானும் அரனெனத் தொழுமே.*

---

## கருணாகர கணேச அவதாரம்

*வந்துமுன் னிருவர்தம் மலரடித் தலமிசைச்*
*சிந்தையார் வத்தொடுஞ் சென்னிதாழ்த் திடுதலுந்*
*தந்தையுந் தாயுமுன் றழுவிமார் புறவணைத்*
*தந்தமில் கருணைசெய் தருளினா ரவ்வழி.*

*என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதன்*
*முன்னரே யுனதுதாண் முடியுறப் பணிவரே*
*லன்னர்தஞ் சிந்தைபோ லாக்குதி யலதுனை*
*யுன்னலார் செய்கையை யூறுசெய் திடுதிநீ*

— கந்தபுராணம்.

# சைவ வாழ்வு

## சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

சைவ வாழ்வின் ஆதாரமாக அமைந்தது பக்திக் கொள்கையாகும். இறைவனைப் பக்தி வலையிற் படுத்தலாம் என்ற கொள்கை பல நூற்றாண்டு காலமாகச் சைவ மக்களிடையே வளர்ந்து வந்துள்ளது. இதனாலேயே தமிழ் நாடெங்கும் திருக்கோயில்கள் பல எழுந்தன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றை முறையாகக் கொண்ட பல ஆலயங்கள் மக்கள் வழிபாட்டுக்குரிய இடங்களாக நம் நாடெங்கும் காட்சி அளிக்கின்றன. சைவ வாழ்வின் முக்கிய குறிக்கோள் உள்ளொளி பெருக்கலாகும். புறவாழ்வின் தூய்மையே அகவாழ்வின் தூய்மைக்கு அடியிடுவதாகும். எனவே, உள்ளும் புறமும் தூய உணர்ச்சியைப் பெருக்குவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களும் உதவுகின்றன.

திருவங்கமாலை என்ற பதிகம் அப்பர் சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது. அங்கே நான்கு மார்க்கங்களையும் சிறப்பாகக் காட்டிச் சைவ வாழ்வு மலர வேண்டிய முறைகளை விளக்கியுள்ளார். திருக்கோயிற்றரிசனம் எமது கண்களுக்குப் புனிதத்தையும், வழிபாடு எமது உறுப்புகளுக்குப் புனிதத்தையும், பாடல்கள் செவிக்குப் புனிதத்தையும் நல்குவன;

*கண்ணுதலாலயம் நோக்கும் கண்களே கண்கள்*
*கறைக் கண்டன் கோயில்புகும் கால்களேகால்கள்*
*பெண்ணொரு பாகனைப் பணியும் தலைகளேதலைகள்*
*பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளேகைகள்*
*பண்ணவன் தன் சீர்பாடும் நன்னாவே நன்னா*
*பரன் சரிதை கேட்கின்ற செவிகளேசெவிகள்*
*அண்ணல் பொலன் கழல்நினைக்கும் நெஞ்சமேநெஞ்சம்*
*அவனடிக்கீழ் அடிமைபுகும் அடிமையே அடிமை.*

திருவங்கமாலையில் அமைந்த முதற் பாடல்கள் சரியை வழிபாட்டை விளக்குவன. தலை, கண், மூக்கு, வாய், கை, கால் என்பன அவனை வழிபடுவதில் எவ்வாறு ஈடுபட வேண்டும் என்பதைக் காட்டி நெஞ்சை வழிப்படுத்துகிறார்.

*நெஞ்சே நீ நினையாய் — நிமிர்*
*புன் சடை நின்மலனை*
*மஞ்சாடும் மலை மங்கை மணாளனை*
*நெஞ்சே நீ நினையாய்.*

அடுத்ததாகக் கிரியா மார்க்கம் விளக்கப்படுகிறது. பூக்கையாலட்டிப் போற்றி என்னாத இவ்வாக்கையாற் பயனென்? என வினவுகிறார். இதையடுத்து யோக நிலை சுட்டிக் காட்டப்படுகிறது.

*தேடிக் கண்டு கொண்டேன் — திரு*
*மாலொடு நான்முகனும்*
*தேடிக் காணொணாத் தேவனை என்னுள்ளே*
*தேடிக் கண்டு கொண்டேன்.*

இதுதான் யோக சாதனையாகும். அடுத்து ஞானத்தின் பேற்றினைக் காட்டுகிறார்;

இறுமாந் திருப்பன் கொலோ — ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டு
சிறுமானேந்த தன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந் திருப்பன் கொலோ.

சைவசமயத்தில் பசுபுண்ணியமும், சிவபுண்ணியமும் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகிறது. பசு புண்ணியம் என்பது பிற உயிர்களிடத்திற் காட்டும் அன்பாகும். இவை ஏனைய மதக் கொள்கைகளாகவும் அமைந்துள்ளன. ஆனால், சிவபுண்ணியங்களென்று சொல்லப்படுவன சரியை, கிரியை முதலியன. ஆன்மா ஈடேற்றத்துக்குச் சிவ புண்ணியமே அவசியமானதாகும். தன்முனைப்பற்றுச் செய்கின்ற செயல்களே பயன் தருவதாகும். ஆலயத்தை மையமாக வைத்து வாழும் வாழ்வு சிறப்படைந்து செம்மை தருவதாகும்.

மனிதன் தோன்றிய காலந்தொட்டே சமயமும் இருந்து வருகிறது. அது அவன் வாழ்வோடு பிணைந்திருக்கிறது. அதை அவன் உணர்ந்துவிட்டால் உண்மை, அமைதி, ஆனந்தம் மூன்றையும் அடைந்து பெருமையடைவான்; அடியார்கள் எல்லோரும் சமயத்தை வாழ்வின் முழுமையாகக் கொண்டனர். இராமகிருஷ்ணர் இறைவனைக் காட்டுவேன் என்று விவேகாநந்தருக்குக் கூறினார். அடியார்கள் இறைவனோடு கூடிநின்று அனுபவித்தார்கள், பேசினார்கள், உறவாடினார்கள். தந்தது உன்றன்னைக் கொண்டது என்றனை என்கிறார் மாணிக்கவாசகர். ஞான உணர்வு அற்றவர்களுக்கு இது கட்டுக்கதையாக இருக்கலாம்; தனக்குத் தானே நற்சான்று பகர்வது சமய அனுபவம். ஒருவனுடைய சொல், எண்ணம், செயல் மூன்றையும் தூய்மையாக்குவது சமயம். சமயம் என்பது உண்மை வாழ்க்கை நெறியாகும். இதனாலேயே அடியார்கள் சீர்திருத்த வாதிகளாகத் திகழ்ந்தனர்.

சைவ சமயம் மக்களிடையே பரவ இலட்சியப் பிரசாரம் தேவை. சமயாசாரியர் வகுத்த முறை இது. நால்வரும் ஊர் ஊராகத் திரிந்தனர்.

மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுவேன்
கனி தந்தாற் கனி உண்ணவும் வல்லிரோ
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்றவர் கட்கே.

என்று கூவி அழைத்தார் அப்பரடிகள். நடையறுப் பெருந்துறவும் உழவாரத்தின் படையறுத் திருக்கரமும் கொண்டவர் அவர். நாளும் இன்னிசையாற்றமிழ் பரப்பியவர் ஞானசம்பந்தர். சமயம் மக்களிடையே மலராவிட்டால் மனம் பாலைவனமாய்விடும். மண் பாலைவனமானால் விஞ்ஞானம் திருந்தும். மனம் பாலைவனமானால் மெய்ஞ்ஞானமே திருந்தவேண்டும். மதத்தைப் போற்றி வாழாதவன் அநாகரீகமான வாழ்வுக்குரியவனாய் விடுவான்;

எனவே சைவத்தின் மகிமையையுணர்ந்து மானிடப் பிறவியின் மகத்துவத்தைப் போற்றி வாழுவதுதான் சைவ வாழ்வு. அங்கேதான் அகிம்சை, அறம், சத்தியம், அமைதி, தூய்மை யாவும் இலங்கும் என்பதற்கையமில்லை;

# உரும்பராய்

## ஸ்ரீ கருணாகரக் கணபதி — திருப்பதிகம்

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்

பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

சிவனோங்கிய களிறுய்வர சிவையோர்பிடி வடிவாகத்
தவமோங்கிய மகனாய்வரு தனியானையின் முகத்தோனே
கவியோங்கிய தமிழாலுன்றன் கழல்பாடவந் தருள்வாயே
கவினோங்கிய உரும்பைநகர்க் கருணாகரக் கணபதியே.

முற்றாமதி முடிசூடிய முதனாயகன் தருகனிக்குப்
பெற்றாரவர் தமையேவலம் பெரிதாய்வந்த பிரணவமே
உற்றாயெனை யுடையாயுனை யுணர்வாக்கினை நயந்தருளே
கற்றார்புகழ் உரும்பைநகர் கருணாகரக் கணபதியே.

மலையாறினிற் றிகழ்வோன்குற மகளோடணை மணம்பூண
தலையாரணக் கரியாய்வந்த தலைவாசதுர் மறைபேணும்
நிலையாகிய நினதீர்பதம் நினைவாழ்வினை நிதம்தருவாய்
கலையான்மிளிர் உரும்பைநகர் கருணாகரக் கணபதியே.

தொண்டானம்பி யாண்டார்நம்பி தொழுதேநின்முன் னழவேநீ
யுண்டாய்பழ மொடுபாலமு துடனேதிரு முறைபெறவும்
பண்டாகிய குறிகாட்டினை பழவூழ்வினை பறிப்பவனே
கண்டார்மகிழ் உரும்பைநகர் கருணாகரக் கணபதியே.

பண்ணாற்றொழு தணைவார்நெஞ்சிற் பலநாடகம் புரிபவனே
தண்ணார்வளந் திகழ்காவிரி *தருகாகவைங் கரசிறுவா
திண்ணோர்நின திருதாளிணை சிறியேன்தொழும் பணிநல்காய்
கண்ணோர்சிவ உரும்பைநகர்க் கருணாகரக் கணபதியே.

நாவேறிய கலையூறிய நரைமூதுரைத் தமிழௌவை
பாவேறிய இசைமாலையைப் பரிந்தேற்றருள் புரிந்தவனே
சாவேறிய பவவாரியைத் தமியேன் கடந் திடுவேனோ
காவேறிய உரும்பைநகர்க் கருணாகரக் கணபதியே.

பேர்தாங்கிய பொருட்பாரதம் பெருமேருவங் கிரிதனிலோர்
கூர்தாங்கிய மருப்பாற்றந்த குருவேயருட் கடலோனே
பார்தாங்கிய துயர்வேலையிற் பயிலாதனைத் தெமைக்காப்பாய்
கார்தாங்கிய உரும்பைநகர்க் கருணாகரக் கணபதியே.

---

* விநாயகர் — காக வடிவாய்ச் சென்று அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்தவர். ( காக + ஐங்கரன்.)

அடியார்களின் பழந்தீவினை யழித்தேபுதுக் கணக்கெழுதும்
முடியாமறை முனிவாசமர் முனைமூஷிக மீதிருந்தாய்
மடியாமல விருணீக்கிடும் மருந்தாகவந் தணைவோனே
கடியார்பொழில் உரும்பைநகர்க் கருணாகரக் கணபதியே.

தற்பரமே முதலாதரச் சச்சிதானந்தத் தண்பழமே
அற்புதமே அகிலாண்டங்க ளளித்தாண்டிடு மதிபதியே
சிற்பரமே டையிலாடிய சிவமேகலைத் தெளிஞானக்
கற்பகமே உரும்பைநகர்க் கருணாகரக் கணபதியே.

மதிநொந்திடு மிழிசாபத்தை வருநாள்திதி சதுர்த்தியெனும்
விதிதந்திடும் விகிர்தாவிக டவிநாயக விக்கினேசா
துதிதந்திடும் பணியேயெனைத் தொடர்பாயுறத் துணைகாட்டிக்
கதிதந்திடும் உரும்பைநகர்க் கருணாகரக் கணபதியே,

---

## தருமம்

உலக அன்னையாகிய ஔவை, "அறஞ்செய விரும்பு" என்று, அறத்திலே இந்த உலகத்துக்கு ஆசை உண்டாகுமோ என்று அங்கலாய்க்கின்றாள்.

தர்மத்தை அறத்தினின்று சிறிதே வேறுபடுத்திச் சொல்லலாம். அறத்தில் தர்மம் அடங்கும்; தர்மத்தில் அறம் அடங்காது: அறம் என்ற நீண்டரேகையின் தொடக்கப் புள்ளியாயிருக்கும் தர்மம்: தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் நான்கையும் அடக்கியது அறம் என்று சொல்லலாம். "சார் புணர்ந்து சார்பு கெட ஒழுகல்" திருவள்ளுவரில் அறம் என்று சொல்லப்பட்டது. உண்மைச் சார்புகளை விசாரித் துணர்ந்து, பொய்ச் சார்புகள் கெடும்படி ஒழுக வேண்டும் என்பது கருத்து. கடவுளுக்கு ஆதியுமில்லை; அந்தமும் இல்லை; அறத்திற்கு அந்தம் சொல்வது கஷ்டம்; ஆதியுண்டு; அது தர்மம்.

# கும்பாபிஷேக மகிமை

## வியாகரணசிரோமணி தி. கி. சீதாராமசாஸ்திரிகள்

அங்கிங்கெனுதபடி எங்கும் பரந்து விளங்கும் இறைவனை உருவத் திரு மேனியில் தியானித்து, ஆவாகித்து வழிபடவேண்டிய முறைகளை ஆகமநூல் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருக்கின்றது. அந்த உருவத்திருமேனியை வைத்து வழிபட வேண்டிய தலம் எத்தகையதாய் அமைய வேண்டும் என்பதையும் ஆகமநூல் சிறப்பாகக் கூறியிருக்கின்றது. இறைவன் உருவத்திருமேனியில் நின்று அடியார்களுக்கு அருள்புரியும் தலம் ஆலயமாகும்; அதனைப் பிராசாதம், தேவாயதனம் என்று பல பெயர் கொண்டு அழைப்பதுண்டு. பொதுவாக ஆலயம் என்ற பெயரால் பெரும்பாலும் வழங்கப்படுகின்றது: ஆ – ஆன்மாக்கள், லயம் - ஒடுங்குதல் என்று கருத்தாகும். ஆன்மாக்கள் இறைவன் சந்நிதியை அடைந்து, பக்தியுடன் ஒடுங்கும் தன்மையைப் பெறுவதால் ஆலயம் என்று பெயர் வழங்கலாயிற்று. ஆ - எங்கும் லீயதெ கும்பம் பிம்பம் தம்பம் முதலிய இடங்களில் மறைவாக அதிஷ்டித்து நின்று அருளுகின்ருர் என்று இலக்கண முறையாகவும் கருத்துக் கொள்ளலாம்; விதிமுறையாக ஆலயத்தை அமைத்து அவரவர் விரும்பும் உருவத்திருமேனியைத் தாபித்துக் கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வருவதை நாம் காண்கின்ருேம். இந்தக் கும்பாபிஷேகத்தின் நிகழ்ச்சி ஒழுங்கு முறைகளை நாம் ஊன்றிக் கவனித்தோமாளுல், பல அடிப்படையான தத்துவக் கருத்துக்கள் நம் வாழ்க்கையில் காணக்கூடியதாய் இருக்கும். கும்பாபிஷேகம் தொடக்கம் முதல் முடிவுவரை நிகழ்ச்சிகளை எட்டுப் பெரும் பிரிவுகளாகக் காணலாம்.

அவற்றுள். முதலாவது வரித்தல், அநுமதிபெறல், பிரார்த்தித்தல் என மூன்று அம்சங்கள் கொண்டது.

## I. அ. வரித்தல் :

ஒரு கும்பாபிஷேகத்தை நடத்தத்தக்க ஆசாரியரைத் தேர்ந்தெடுத்தல்; மனிதனுடைய வாழ்க்கை தெய்வப் பண்புடையதாய் அமைய வேண்டுமாளுல், முதலில் தக்க குருவைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவது இன்றியமையாததாகும். அதுபோலவே இறைவனைப் பிரதிஷ்டை செய்யத் தகுதிவாய்ந்த சிவாசாரியர் ஒருவரை முதலில் தேர்ந்தெடுப்பது மிக முக்கியமாகும். ஆசாரியர் நல்லொழுக்கமும் ஆகமசாஸ்திர அறிவும் பக்தியும் நிறைந்தவராய் இருக்க வேண்டும். சிவாசாரியருடைய தவவலிமையாலும், நித்திய நைமித்திக பூசை முறையாக நடந்து வருவதாலும், உருவத்திருமேனியை நன்கு அலங்கரித்துத் தூய்மையாக வைத்திருப்பதாலும் விக்கிரகம் தெய்வத்தன்மையுடையதாய் விளங்குகின்றது என்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது. அதில் சிவாசாரியருடைய தவவலிமையை முன்னதாக எடுத்துக்காட்டியிருப்பதால் கும்பாபிஷேகத்திற்கு முதலாவதாக ஆசாரியவரணம் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

## ஆ. அநுமதி பெறல் :

ஆசாரியர் பாலாலயம் சென்று இறைவனிடம் தருணுலயத்தில் பிரதிஷ்டை செய்ய அநுமதி தருமாறு வேண்டுதல். இதனை தேவாநுஞ்ஞை என்பர்.

அடுத்தது ஒழுக்கமும் சீலமும் பொருந்திய வேதமந்திரம் கற்றுணர்ந்த அந்தணர்களைக் கிழக்கு முகமாக மண்டபத்தில் அமரச் செய்து, அவர்களுக்கு சந்தன தாம்பூலம் கொடுத்து, மலரால் அவர்களை அர்ச்சித்து அவர்களிடம் அநுமதி பெறுவதாகும். கற்றுணர்ந்த சபையோர்களே இறைவனைப் பாலால யத்திலிருந்து தருணலயத்திற்குக் கொண்டு சென்று பிரதிஷ்டை செய்ய இறைவனிடம் அநுமதி பெற்றோம். அக்கிரியைகளில் மந்திரங்கள் விட்டுப்போகாமலும் கிரியைகள் மாறுபடாமலும் நடத்தித் தரவேண்டும். மேலும் எனக்கும் பிரதிஷ்டை செய்யக்கூடிய தகுதியையும் அருளவேண்டும்' என்று ஆசாரியர் பிரார்த்திக்க, அவர்களும், 'இறைவனின் பிரதிஷ்டாகர்மாவைச் செய்து முடிக்க உமக்கு ஆற்றல் உண்டாகுக' என்று ஆசி கூறுவர். இதனைப் பிராமணநுமதி பெறல் என்பர்.

இறைவனைப் பிரதிஷ்டை செய்ய அந்தணர்கள் வாழ்த்து அநுமதி அவசியமா என்ற ஐயம் எழலாம். கண்ணன் கூறுகின்றான்:

"இவ்வுலகம் இறைவனருளால் இயங்குகின்றது. அந்த இறைவன் எங்கும் வியாபித்திருக்கின்றான். ஆகாசவெளியிலும் கலந்து நிற்கின்றான். அவனை வழிபட்டு, அவனருளைப் பெற உருவத்திருமேனியில் மந்திரம் கூறி ஆவாகித்துப் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது; ஆகவே, அந்த இறைவன் மந்திரத்துக்குட் பட்டவன். அந்த மந்திரம் அந்தணர்களால் கற்கப்பட்டு விளங்குகின்றது. மந்திரம் அந்தணர்களுக்குரியதாகின்றது. அந்த அந்தணர்கள் எனக்குப் போற்றத் தக்கவர்கள். ஏனெனில், எல்லா உயிர்களும் வழிபட்டு உய்ய உருவத்திருமேனியில் என்னை ஆவாகிக்கும் மந்திரம் அந்தணரிடம் உறைவதால் அவர்கள் எனக்குப் போற்றத்தக்கவர்கள்" என்று வியந்து கூறினார்.

தாய் தந்தையர் சேர்க்கையால் குழந்தை உண்டாகின்றது. அக்குழந்தை வளர்ந்து மனிதனாகின்றான். அவன் குருவினிடம் சென்று மந்திரத்தைக் கற்றுக் கொள்ளுகின்றான் என்ற நியதி அளவில் மட்டிலும் அவன் அந்தணனாகமாட்டான். தாய் தந்தையர் சேர்க்கையால் உதயமாகின்ற மைந்தனுக்குத் தூய்மை உண்டுபண்ணக்கூடிய சில கிரியை முறைகள் விதிக்கப்பட்டுள்ளன. குழந்தை பிறந்த உடன் தங்கத்தை உரைத்துத் தேனில் கலந்து எல்லாத் தெய்வங்களும் உனக்கு நல்லறிவைக் கொடுக்கட்டும் என்று மந்திர வாழ்த்துக் கூறித் தந்தை மைந்தனின் நாவில் தடவுகின்றார். பின் மூன்று வேதங்களின் சாரமான பிரணவத்தைக் கூறித் தயிரையும் மைந்தனின் நாவில் தடவுகின்றார். வேத மந்திரம் கற்கத் தகுதியுள்ளவனாவாய் என்று வாழ்த்துக் கூறுகின்றார். மேலும் இது போன்ற சில கிரியைகளால் அக்குழந்தை தந்தையின் இந்திரியத்தால் வரும் தோஷமும், தாயின் கார்ப்பவாசத்திலுள்ள தோஷமும் நீங்கப்பெற்றுப் பரிசுத்தமாக விளங்குகின்றது. பின் ஏழாம் வயதில் வேதசாரமான காயத்திரியைத் தந்தை மகனுக்கு உபதேசிக்கின்றார். அவன் முறையாக ஜபித்து வருகின்றான். இதனால் அவன் உள்ளம் தூய்மையடைகின்றது. பின் குருவை அடைந்து வேதத்தை முறையாகக் கற்கிறான். தாயின் கர்ப்பவாசத்திலிருந்தே தூய்மை பெற்று வளர்ந்து வருகின்ற பாலகன் வேதத்தைக் கற்பதால் அந்த வேதம் சித்தியுடையதாக ஆகின்றது; ஆகவே, அந்தணர் அநுமதி என்பது அவர்கள் உள்ளத்திலிருந்து வருகின்ற வாழ்த்து. அது வேத புருஷனின் வாழ்த்து அநுமதியாகும். ஆகவேதான் இரண்டாவதாகப் பிராமணநுஞ்ஞை கூறப்பட்டுள்ளது.

## இ. பிரார்த்தித்தல்:

எந்த ஒரு காரியத்தையும் இடையூறு இல்லாமல் நிறைவேற்ற விநாயகப் பெருமான் திருவருள் வேண்டும். காற்று மழை நெருப்பு முதலிய உத்பாதங்கள் நிகழாது மங்களகரமாகக் கிரியைகள் நிறைவேற நவக்கிரகங்களின் அருள் வேண்டும். ஆகவே, கணபதிஹோமம், நவக்கிரகஹோமம் இவ்விரண்டையும் சிவாசாரியர் செய்து முடிக்கின்றார். இது பிரார்த்தனையாகும்.

## II. சுத்திகரித்தல்:

எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்கப் பொருள் இன்றியமையாதது. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற முதுமொழியை யாவரும் அறிவர். ஆகவே, சிவதர்மம் செய்து முடிக்கப் பொருள் மிக முக்கியமானது. அந்தப் பொருள் தூய்மையுடையதாய் இருக்கவேண்டும். அதாவது, நேர்மை வழியில் அப்பொருள் ஈட்டியதாக அமையவேண்டும். சிவ தர்மத்திற்காக ஈட்டிய பொருள் பல வழியாக வந்திருக்கக் கூடும். ஆகவே, அப்பொருளைச் சுத்திகரித்தல் என்ற கிரியையைக் குரு நடத்துகின்றார். சிவாஸ்திர மந்திர ஜெபம், ஹோமம் முதலியவற்றைச் செய்து கும்பநீரால் தெளித்துச் சுத்தமாக்கிப் பதினொரு பாகமாகப் பிரித்து எஜமானிடம் கொடுத்துச் சிவதர் மத்தைச் செய்து முடிக்குமாறு ஆசாரியர் தெரிவிக்கிறார்.

பொருளைச் சுத்திகரித்த பின் குரு தன்னையும் இறைவன் உறைவிடமான ஆலயத்தையும் சுத்திகரிக்கின்றார். மதுபாகம் என்னும் கிரியையைச் செய்து ஆன்ம சுத்தியைப் பெறுகின்றார். நெய், தேன், பழம் இவைகளில் ஆன்ம தத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவம் என்ற மூன்று தத்துவங்களையும் பூசித்து மதுபாகத்தை அருந்துகின்றார். அறிந்தோ அறியாமலோ முற்பிறவியிலோ சிவ நிந்தை, சிவசாஸ்திர நிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைச் செய்திருந்தாலும் அத்தோஷம் நீங்கப்பெற்றுக் குரு ஆன்ம சுத்தியுடையவராய் விளங்குகின்றார். பின் பத்து வகையாக நீராடிப் புறச் சுத்தியைச் செய்து கொள்ளுகின்றார். அதனால் உடல் ஆரோக்கியம், பலவகையான பாபங்கள் நீங்குதல், மனத்தில் ஒருமைப்பாடு, திரிகரணசுத்தி இவைகளைப் பெறுகின்றார். நல்லறங்களைச் செய்யத் தொடங்கும்பொழுது தீயவர் தீயசக்திகளை உபயோகித்து இடையூற்றை விளைவிப்பர். அத்தீய சத்திகளை நீக்க ரட்சோக்ந சாந்தியைக் குருசெய்கின்றார். நான்கு திசைகளிலிருந்து வரும் தீயசக்திகளை அழிக்கும் ஆற்றல் மிக்க தேவர்களே உங்களுக்கு வணக்கம் — எம்மைக் காத்தருள் புரிவீர்களாக என்று பிரார்த்தனை அமைந்துள்ளது; தீயசக்தியை நீக்கியபின் ஆலயத்தின் வெளிவீதியில் எண் திசைகளில் நின்று அமைதி நிலையைக் குலைக்கும் யக்கர், அரக்கர், பூதங்கள், பிசாசுகள், பிர்மராக்ஷஸர், மஹாகாளி, சரஸீவடுகர் ஆகிய எண்மருக்கும் பலி உணவு கொடுத்து மரியாதை செய்து, நீங்கள் இவ்விடத்தை விட்டு நீங்கி மலையடிவாரம், காடு, ஆற்றங்கரை, பாலைவனம், மயானம் முதலிய இடங்களிற் சென்று வசியுங்கள்; இங்கே இறைவனுடைய பிரதிஷ்டை நடைபெறப் போகின்றது என்று கூறிப் பிரவேச பலி என்ற கிரியையைக் குரு செய்கின்றார். தீயசக்திகளை விரட்டி அரட்டி அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவரைத் தூரச் சென்று வசிக்குமாறு குரு ஆணையிடுகின்றார். பின் கிராம சாந்தி என்ற கிரியையை நடத்துகின்றார். ஆலயம் மட்டும் சுத்தமானால் போதாது. அக்கிராமத்தில் வசிப்பவர்களும் நோய் பிணியற்றவர்களாய், அகால மரணமற்றவர்களாய், வறுமையற்றவர்களாய், தீமைகளற்றவர்களாய் விளங்கவேண்டும்.

அப்பொழுதுதான் ஆலயம் சிறப்புடையதாகும். அடியார்கள் வந்து தரிசிப்பதனுற்தான் ஆலயம் தெய்வ சாந்நித்தியம் உடையதாய் விளங்கும். ஆகவே, கிராம நன்மைக்காகச் செய்யப்படும் சாந்தியாதலால் கிராமசாந்தி என்று பெயர் வழங்கப்பட்டது. அதனைச் செய்து அதன்பின் பிரமா, இந்திரன், அக்கினி முதலிய எண் திசைப் பாலகர்கள் அவ்விடத்தில் வந்து வசிக்கக் கூடியதாகப் பூமியைச் சுத்திகரிக்கின்றுர். அதன் பொருட்டு வாஸ்துசாந்தி என்ற கிரியையைச் சிவாசாரியர் செய்கின்றுர்.

## வாஸ்துவின் வரலாறு:

முன்ஞெரு சமயம் அந்தகன் என்ற அசுரனுடன் இறைவன் போர் செய்யும்பொழுது அவரது மேனியிலிருந்து வேர்வைத்துமி நிலத்தில் விழுந்தது. அத்துமி உலகம் முழுவதையும் தன்னுள் விழுங்கும் வலிமை பொருந்திய பூதமாகத் தோன்றியது. இறைவன் கட்டளையால் அந்தப் பூதம் அந்தகாசுரன் இரத்தத்தைப் பருகியது. பின் சிவபெருமான் மகிழ்ச்சியுற்று அப்பூதம் விரும்பிய வரங்களைக் கொடுத்தார். வரங்களைப் பெற்றுப் பூதம் மூவுலகத்தையும் கொடுமைப்படுத்தியது. தேவர்கள் இறைவனிடம் தஞ்சம் புகுந்தனர். சிவபெருமான் உருத்திரனையும் பாசங்களையும் படைத்தருளினுர். சிவபெருமான் பூதத்தின் வலிமையை ஒடுக்குமாறு கட்டளையிட்டார். உருத்திரனும் பாசங்களால் அப்பூதத்தைக் கட்டி நிலத்தில் வீழ்த்தி, பிரமாதி தேவர்களை வாழச்செய்தார். இந்த வாஸ்து சாந்தியைச் சிவாசாரியர் செய்து ஆலயத்தைச் சுற்றிலும் தேவர்கள் வந்திருந்து இறைவன் பிரதிஷ்டையில் கலந்து கொள்ளும்படி செய்வதாக அமைகின்றது.

## III. விக்கிரகப் பிரதிஷ்டை:

உருவத்திருமேனி புதிதாகத் தாபிக்கப்படுவதாயின், குரு சிற்பியைக் கொண்டு (நயநோன்மீல நம்) கண் திறத்தல் என்ற கிரியையைச் செய்விக்கின்றுர்; உருவத்திருமேனியைச் சுற்றித் திரையிட்டுச் சிற்பி குருவின் கையிலிருந்து ஆயுதத்தைப் பெற்று முதலில் நெற்றிக் கண்ணையும் அடுத்தது சூரிய நேத்திரத்தையும் அதன்பின் சந்திர நேத்திரத்தையும் இறைவனைத் தியானித்துக்கொண்டு ஆயுதத்தால் திறக்கின்றுர். வாய் மூக்கு காது கொப்பூழ் நகக்கண் முதலிய ஒன்பது இடங்களில் சிறு துவாரத்தை உண்டு பண்ணுகின்றுர். பின் குரு பிம்ப சுத்தி முடித்து, பால், நெய், தேன், நெல், கண்ணுடி, யானை, அந்தணர், கன்னிப் பெண், தீபம், பசு, எஜமானன், பஞ்சாராத்திரிகம் இவைகளை இறைவனுக்கு முன் வைத்துத் தரிசிக்கச் செய்கின்றுர். அதனுல் பசுச்செல்வம், தானிய வளர்ச்சி, இன்பவாழ்வு, வீரியம், மனுேபலம், வேதநெறி, கற்பு, அறிவுச்சுடர், சிவதர்மம், ஐந்தொழில் இவையாவும் நாட்டில் சிறப்பாக விளங்கும் என்பதாகும். பின் உருவத்திருமேனியைத் தண்ணீரில் மார்பு அளவில் வைத்துச் சக்திவடிவமாக இருந்தால் காது அளவுவரை தண்ணீரில் வைத்து விசேஷ பூசை அபிஷேகம் இவைகளை ஆசாரியர் செய்கின்றுர். இதனை ஜலாதிவாஸம் என்பர். பின் தண்ணீரிலிருந்து எடுத்துத் தானியாதிவாசம் என்ற கிரியையை ஆசாரியர் செய்கின்றுர். சுத்தமான தானியத்தை எடுத்துப் புண்ணியாக நீரால் தெளித்து முன்கூறிய அளவில் அத்தானியத்தால் மூடி. எண்மலரால் அர்ச்சித்து ஒரு முகூர்த்தகாலம் அவ்வாறு வைத்திருந்து பின் பிம்பத்தை எடுத்து ஒரு பீடத்தில் வைத்து அடியார்களைக் கொண்டு வீதிவலம் செய்விக்கின்றுர். கோபுர வாயிலை அடைந்ததும் ஆசாரியர் (திருஷ்டி தோஷ நிவிர்த்தி) கண்ணூறு நீங்குதல் என்ற கிரியையைச்

செய்கின்ருர். பின் மாலையில் சயநாரோபணம் என்ற கிரியையையும் செய்து முடிக்கின்ருர். சுத்தமான விரிப்பில் தலையணை முதலிய உபகரணங்களுடன் உருவத்திருமேனியைப் படுக்கவைத்து விசேஷ பூசை, நியாஸம் முதலியவற்றைச் செய்கின்ருர். இதனுல் சயநாரோகணம் என்று கூறுவர். கண்திறத்தல், நீரில் வைத்தல், நெற்குவியலில் வைத்தல், வீதிவலம், படுக்கையில் விடுதல் இவ்வைந்து காரியங்களையும் ஆசாரியர் செய்து முடிக்கின்ருர். விவேச பூதாதி சராசராணி என்பது வேதமந்திரம். சரப்பொருள் அசரப்பொருள் எல்லாவற்றிலும் இறைவன் மறைந்து நிற்கின்ருர் என்பது கருத்து. அந்த இறைவன் ஒளியாகவும் உணவாகவும் நீராகவும் காற்ருகவும் இருந்து உயிர்களைக் காத்து வருகின்ருன் என்றும் போற்றப்படுகின்ருன். அருவமாகப் பஞ்சபூதங்களில் பரவி நிற்கும் இறைவனை உருவத்திருமேனியில் வந்து இணைந்து அருள்புரியுமாறு இவ்வைந்து கிரியைகள் செய்யப்படுகின்றன. கண்திறத்தல் என்பதால் ஒளியிலிருந்தும், நீரில் வைத்தல் என்பதால் ஜலத்திலிருந்தும், நெற்குவியலில் வைத்தலால் நிலத்திலிருந்தும், வீதிவலம் வருவதால் ஆகாயத்திலிருந்தும், படுக்கையில் கிடத்தலால் காற்றிலிருந்தும் இறைவனுடைய சக்தி உருவத்தில் இணைந்து கொள்ளுகின்றது. ஆகவே, புதிய உருவத்திருமேனிக்கு இவ்வைந்து கிரியைகளையும் ஆசாரியர் செய்து முடிக்கின்ருர். பின் சுபவேளையில் யந்திரஸ்தாபனம் செய்து பீடத்தில் உருவத் திருமேனியை ஸ்தாபித்து அஷ்டபந்தனம் என்ற கிரியையை நிகழ்த்துகின்ருர். எட்டுப்பொருள் சேர்த்து இடித்துக் குழைவாக்கி அதனுல் பீடத்திற்கும் உருவத் திருமேனிக்கும் இணைப்பை உண்டுபண்ணுகின்ருர். எந்த ஆலயத்தில் பீடபந்தம் இல்லாது மூர்த்தி காணப்படுகின்றதோ, அங்கு செய்யப்படும் பூசை முதலிய யாவும் பயனற்றனவாகும் என்று ஆகமநூல் கூறுகின்றது. அடுத்தது பிம்பசுத்தி என்ற கிரியை நிகழும்; தர்ப்பை, அடிமண், புற்றுமண், நாவலடிமண், ஆலடிமண், வில்வமரத்தடிமண், துளசி அடிமண் இவைகளை ஒரு மண் கலசத்திலிட்டு நீர் நிறைத்து, அதுபோல அரசு, ஆல், அத்தி, பில்வம், நாவல், மா இவைகளின் தளிரை ஒரு கலசத்திலும் பட்டைகளை மற்ருெரு கலசத்திலும் வைத்து நீர் நிறைத்து ஆத்ம தத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்ற தத்துவத்திரயத்தைப் பூசித்து அக்கலச நீரால் பிம்பத்தை அபிஷேகம் செய்தால் பிம்பசுத்தியாகும், பிம்பசுத்தி முறையாகச் செய்யப்படாவிடில் தெய்வ சாந்நித்தியம் உண்டாகாது.

## IV. மிருத்சங்கிரகணம் :

பாலிகை தெளிப்பதற்காகப் புண்ணிய பூமிக்குச் சென்று மண் எடுத்து வருதல் என்பதையும், பின் அங்குரார்ப்பணம் பாலிகை தெளித்தல் என்பதையும் இவ்விரண்டு கிரியைகளையும் குரு செய்கின்ருர். இவ்விரண்டும் படைப்பு என்ற தத்துவத்தைக் குறிக்கின்றது. ஆகவேதான், பூமிதேவியைப் பூசித்து வழிபட்டுப் பிரார்த்தனை முடித்துப் பூமிதேவியின் வயிற்றிலிருந்து மண் எடுக்கப் படுகின்றது. படைப்புக்குரிய இடம் வயிருகும். அதுபோலவே, பாலிகை தெளித்து அங்குரம் நன்கு வளருவதால், நாட்டில் தானிய வளர்ச்சியுண்டாகிப் படைப்புக்கள் வளர்ச்சி பெறும். பின் ஆசாரியர் பாலாலயம் சென்று, இறைவனுக்குப் பிரஸந்நாபிஷேகம் செய்கின்ருர் அதன் கருத்து, பாலாலயத்திலிருந்து யாகசாலைக்கு அழைத்துச் செல்லக் கருதியுள்ளோம். இறைவ, எங்கள் அழைப்பை ஏற்றுச் சகல கலா மூர்த்திகளுடனும் யாகசாலைக்கு எழுந்தருள வேண்டும் என்று குரு பிரார்த்திக்க இறைவன் மகிழ்வுடன் யாகசாலைக்கு எழுந்தருள ஆயத்தமாகின்ருர் என்பதாம். பின் கடஸ்தாபனம் என்ற கிரியை நிகழ்கின்றது.

குடத்தை மாவிலை, தேங்காய், கூர்ச்சம், வஸ்திரம், மாலை இவைகளால் வேத மந்திர பாராயணத்துடன் நன்கு அலங்கரித்துப் பாலாலயம் சென்று, இறைவனுக்கு முன் கலசத்தை வைத்துப் (கலாகர்ஷணம்) பிம்பத்திலிருந்து கலசத்தில் வந்து சகல கலைகளுடன் அமரும்படி பிரார்த்தித்துப் பூசித்து யாத்திராஹோமம் முடித்து, வேதபாராயணத்துடன் சகல வாத்திய கோஷங்களுடன் வலமாக யாகசாலை சென்று, கலசங்களைத் தானிய பீடத்தில் சிவாசாரியர் ஸ்தாபிக்கின்றார். உருவத்திருமேனியிலிருந்த இறைவனை அருவுருவத் திருமேனியாய் அமைந்த கலசத்தில் ஆகர்ஷித்து, விசேஷ பூசை, ஹோமம், ஜபம் முதலியவற்றைச் செய்து, வழிபட யாகசாலைக்கு அழைத்துச் சென்றதாகக் கருத்தாகும். அருவுருவத் திருமேனி என்று குறிப்பிட்டது இறைவனை நிஷ்களமாக ஆகர்ஷித்துச் ஸகளமாகப் பூசிக்கவேண்டும் என்ற ஆகம வாக்கியத்திற்குப் பொருத்தமாம். நிஷ்களரூபத்தில் சாந்தி அதீதகலை சிரஸாகவும், சாந்திகலை முகமாகவும், வித்தியாகலை மார்பாகவும், பிரதிஷ்டாகலை குஹ்யமாகவும், நிவிருத்திகலை முழங்கால் பாதமாகவும், புவநாத்துவக ரோமங்களாகவும், வர்ணாத்துவா தோலாகவும், மந்திராத்துவா இரத்தமாகவும், பதாத்துவா தசையாகவும், தத்துவாத்துவா எலும்பு இந்திரியங்களாகவும் நினைக்கப்படவேண்டுமென்று ஆகமசாஸ்திரம் கூறுகின்றது.

V. யாகசாலையில் கும்பம் ஸ்தாபித்த பின் விதிமுறைப்படி குண்டத்தில் ஆசாரியர் அக்நியை உற்பத்தி செய்கின்றார். மறுநாள் காலை தொடங்கி, காலை மாலை இரு நேரங்களிலும் பூஜை, ஹோமம் இவைகளைச் செய்து வருகின்றார். பூஜை, ஹோமம், ஜபம், பாராயணம் முதலியவற்றால் திருவருள் நிறைவு உண்டாகின்றது. அக்நியில் செய்யப்படும் ஹோமத்தால் இறைவன் பூரண திருப்தியடைகின்றார். அக்நிமுகா: தேவா என்று வேதவாக்கியம் உள்ளது. இறைவன் அக்நியை முகமாக உடையவர் என்ற கருத்து, உருவேறத் திருவேறும் என்ற சான்றோர் வாக்கின்படி எவ்வளவு ஹோம எண் கூடுகின்றதோ அவ்வளவு அருள் நிறைவும் உண்டாகின்றது.

(ஸ்பர்சாகுதி) யாகசாலையில் வழிபடும் அருவுருவத் திருமேனிக்கும், தருணாலயத்தில் வீற்றிருக்கும் உருவத்திருமேனிக்கும் முப்புரி நூலால் அல்லது தர்ப்பைக் கயிற்றால் தொடர்புபடுத்திச் சிவாக்நியில் ஆகுதி செய்து, சுருக் சுருவத்துடன் முப்புரி நூலைத் தொட்டுக்கொண்டு தருணாலயம் சென்று, உருவத்திருமேனியைப் பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திர பாகம் என மூன்றாகப் பிரித்துப் பூசித்துச் சுருக்சுருவத்தில் எஞ்சியிருக்கும் நெய்யை அந்தந்தப் பாகத்தில் ஹோமம் செய்கின்றார். இவ்வாறு மூன்று முறை நடைபெறுகின்றது. அக்நிக்குக் குணம் உருவம். பரஞ்சோதியாகிய பேரொளி அருவம். அது உருவத்திருமேனியில் மறைந்து நிற்கின்றது. ஒருசமயம் மால் அயனுக்கு அந்தப் பரஞ்சோதி உருவமாகக் காட்சியளித்தது. பின் அந்தச் சோதி குளிர்ந்து மலையாக மாறியது என்பதைப் புராணங்கள்மூலம் நாம் அறிவோம். அந்த மலையிலிருந்து எடுத்து உருவாக்கப்பட்டதே உருவத்திருமேனியாகும். உருவமான சிவாக்நியில் ஹோமம் செய்து, பின் பரஞ்சோதியான உருவத்திருமேனியில் எஞ்சிய நெய்யைக் ஹோமம் செய்து, யாகசாலையில் நிகழ்த்திய ஹோமத்தின் பலன்கள் யாவும் இந்த உருவத் திருமேனியில் நின்று அருள்புரியட்டும் என்பது கருத்தாகும். இவ்வாறு ஹோமம், ஜபம், பூசை முதலியவற்றால் யாகசாலையில் வேதிகையில் வைக்கப்பட்ட கலசநீர் அருளமுதமாய் மாறுகின்றது.

## VI. கும்பாபிஷேகம்:

விசேஷ பூர்ணுகுதி முடித்துத் தீபாராதனை செய்து, யாத்திராதானம் முடித்துக் கும்பம் தூக்கி அடியார்கள் புடைசூழ மேளவாத்தியங்களுடன் தருணுலயம் சென்று, சுபமுகூர்த்தத்தில் கலசத்தின் அருளமுதை உருவத்திருமேனியில் சிவாசாரியர் அபிஷேகம் செய்கின்ருர். தொடக்கம் முதல் பல கிரியைகள் நிகழ்ந்துள்ளன. இன்னும் இரண்டு கிரியைகள் உள்ளன. அவ்வாறு இருந்தும் பிரதிஷ்டை என்று பெயரிட்டு அழையாமல், மகாகும்பாபிஷேகம் என்று பிரசித்தமாக வழங்குவதின் காரணம் யாது?

படிகநிறம் வாய்ந்த சிவலிங்கம் பாதாளத்திலிருந்து வானளாவிப் புவனம் முழுவதும் வியாபித்து நிற்கின்றது. கூடிக்குறையாத பூரண சந்திரன் சிவலிங்கத்தின் சிரசில் விளங்குகின்றது. அதிலிருந்து அமுதநீர் பெருகிக்கொண்டே இருக்கின்றது. அக்காட்சியை உள்ளத்தால் சிவாசாரியர் தியானித்துக்கொண்டு நமச்சிவாய என்ற ஐந்தெழுத்தை நடுமணியாகக் கொண்டு விளங்கும் ஸ்ரீருத்தாரத்தைச் செபித்துக்கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற விதிமுறையைப் பின்பற்றி, இயற்கையாகவே இறைவன் முடியிலிருந்து இடைவிடாது அருளமுதம் பொழியப் பூசை, ஹோமங்களால் அருளமுதமாக மாறிய கலசநீரை அத்துடன் சேர்த்து அபிஷேகம் செய்வதாக அமைந்தபடியால், மகாகும்பாபிஷேகம் என்ற பெயரிட்டு அழைக்கப்படலாயிற்று. மகா - போற்றத்தக்க, கும்பா அபிஷேகம் - கலசநீரால் அபிஷேகம் செய்தல் என்று கருத்தாகும்.

## VII. மகாபிஷேகம்:

கும்பாபிஷேகம் முடிந்தபின் பால், தயிர், இளநீர் முதலிய விசேஷ திரவியங்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் மகாபிஷேகமாகும். அதனுல் இறைவன் உள்ளம் மகிழ்வு பெற்றுப் பரிபூரண அருளைச் செய்கின்ருர். இறைவன் அக்நியை முகமாக உடையவர் என்று முன் கூறப்பட்டது. அந்த அக்நிக்கு ஏழு நாக்குக்கள் உள்ளன. அந்தச் சிவாக்நியில் பால், தயிர், பழவகை முதலியவை விசேஷமாகக் ஹோமம் செய்யப்பட்டுள்ளன. அதனுல் இறைவன் கலசத்தில் அருள் பரிபாலிப்பவராய் விளங்குகிருர். பின் கும்பாபிஷேகம் முடிந்தது.

உருவத்திருமேனியில் மறைந்திருப்பது பரஞ்சோதி. அந்த அக்நிக்கு ஆயிரம் நாக்குக்கள் உள்ளன. ஆகவே, ஏராளமாகப் பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம் முதலியவற்ருல் அபிஷேகம் செய்து ஆசாரியர் திருவருள் நிறைவை உண்டுபண்ணுகின்ருர். இறைவன் தக்ஷிணுமூர்த்தியாயிருந்து ஸநகாதி முனிவர்களுக்கு ஞானத்தை உபதேசிக்கின்ருர் என்று சாஸ்திரம் கூறுகின்றது. முனிவர்களுக்கு குருவாக வந்த இறைவனும் முனிவராக விளங்குகின்ருர். முனிவர்களுக்குரிய முக்கிய விரதம் (திரிஷவணம்) மூன்று நேரம் நீட்டல் ஆகவேதான் (அபிஷேகப்ரிய: சிவ) அபிஷேகத்தில் விருப்பமுடையவர் சிவன் என்று சான்ருேர் போற்றியிருக்கின்றனர்.

## VIII. மண்டலாபிஷேகம்:

நாற்பத்தைந்து நாட்கள் தொடர்பாக அபிஷேகம் பூசை நடைபெறுகின்றன. பொருள் வசதி குறைந்தவர் வேறு வசதிக் குறைவுகளாலும் இருபது

நாட்கள், பத்து நாட்கள் தொடர்ந்து அபிஷேகம் செய்து முடிப்பார்கள்; கும்பாபிஷேகம், மஹாபிஷேகம், மண்டலாபிஷேகம் — மூன்று கிரியைகளிலும் அபிஷேகம் சொல்லால் குறிக்கப் பட்டுள்ளது — அபிஷேகத்தில் விருப்பமுடையவர் சிவன் என்ற நியாயத்தை அநுசரித்து அமைந்தது. மகாபிஷேகம், மண்டலாபிஷேகம் இவ்விரு கிரியைகளும் இறைவனின் (சாந்நியத்தியத்தை) திருவருள் நிறைவை உண்டுபண்ணுவனவாய் அமைந்தவை.

அண்மையில் உரும்பராய் கருணாகரப்பிள்ளையாரின் மகாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. அக்கும்பாபிஷேக மலரில் இக்கட்டுரை வெளிவருவதும் அவனருள்தான் என்று கருதுகின்றேன். சிவனடியார்கள் இக்கும்பாபிஷேகத்தில் கலந்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றித் தரிசித்துச் சகல இஷ்டசித்திகளையும் பெற்றுய்வார்களாக.

---

ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங்கென்னில்
இதுவாகு மதுவல்ல தெனும் பிணக்க தின்றி
நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூல்
ஆதலினா லிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்;

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகநீ யென்றவரின் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

— சித்தியார்.

# கருணாகரக் கணேசனே!
# குடமுழுக் காடியருளே!

பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள்

## ஆசிரிய விருத்தம்

திருவெலாம் பொலியு மீழநன் னாட்டிற்
　றிகழ்வீணா கானமா புரத்து
மருவுசீ ருரும்பைப் பரத்தைப் புலத்து
　மாண்புள கோயிலுண் மன்னும்
கருதுவார் மனத்துக் காரிரு ளகற்றுங்
　கணபதீ! கருணைமா முகிலே!
ஒருதிரு மருப்பா! ஓங்கார ரூபா!
　ஒப்பிலாக் குடமுழுக் காடியருளே. (1)

குடமுழுக் காட்டிக் கோலநீ றணிந்து
　குங்குமஞ் சாந்திவை சாத்தி
வடமணி யோடு வகையணி சாத்தி
　வயங்குபட் டாடையுஞ் சாத்தித்
திடமுள வடியார் தினந்தினம் போற்றத்
　தெய்வமாக் கோலங்கள் செய்ய
வடவரை போலுங் கோயிலுண் மன்னும்
　வளரருட் கருணாகரக் கணேசனே! (2)

கரமவை யைந்துங் காசினி யோர்க்குக்
　கருதுநல் லருண்மழை பொழிந்தே
வரமவை யருளி வாழ்வெலாம் நல்கி
　வயங்கிட வையகம் போற்ற
புரமெனும் பரத்தைப் புலத்துறை புனிதா!
　புராதனா! புண்ணிய முதலே!
கரதலங் கூப்பித் தொழுதனங் காக்க!
　கருதுநற் கருணாகரக் கணேசனே! (3)

---

# உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள்

**கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா**, B. A. Hons., Ph. D. **அவர்கள்**

*சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை வளாகம்.*

தமிழ்க் கல்வெட்டுக்கள் பொதுவாகக் கோயில்களுடன் தொடர்புடைய ஆவணங்களாகவே இருந்துவந்துள்ளன. தமிழ்நாட்டிலே பெரும்பாலான கல்வெட்டுக்கள் பழைய கோயில்களிலேதான் கிடைத்துள்ளன. அப்படி இருந்தும் பல நூற்றாண்டுகளாக இந்துக்கள் வாழ்ந்துவரும் ஒரு நிலப்பகுதியாக விளங்கும் யாழ்ப்பாணத்திலே பழைய கல்வெட்டுக்கள் இல்லாமலே கோயில்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கு விதிவிலக்காக அமைவது உரும்பராயிலுள்ள கருணாகரப் பிள்ளையார் கோயில் மட்டுமே. இதுவரை யாழ்ப்பாணத்திலே கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழைய கல்வெட்டுக்களுள் மூன்று மட்டுமே கோயில்களிலே காணப்படுபவை. அவற்றுள் இரண்டு கருணாகரப் பிள்ளையார் கோயிலில் உள. மூன்றாவது நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிலிலே இருக்கின்றது. ஆனால், இக்கல்வெட்டு அக்கோயிலுடனோ பிற கோயில்களுடனோ எதுவித தொடர்புமில்லாத ஓர் அரச பிரகடனமாகும். கருணாகரப் பிள்ளையார் கோயிற் கல்வெட்டுக்கள் அவ்வாறல்ல. யாழ்ப்பாணத்தில் இவ்வாறு கோயிற் சாசனங்கள் இல்லாது போனமைக்கு ஐரோப்பியராட்சிக் காலத்திலே பழங்கோயில்கள் அழிக்கப்பட்டமையே காரணமாகும்.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் இரண்டும் ஒரே கல்லிலே பொறிக்கப்பட்டுள்ளன. முதலாவது கல்வெட்டுத் தூண் போல் அமைந்துள்ள சற்சதுரமான கல்லின் நான்கு பக்கங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கல்வெட்டுத் தூணின் மேற்பாகத்தில், அதாவது தலைப்பாகத்தில், பொறிக்கப்பட்டுள்ள ஒரு சிறிய கல்வெட்டாகும். இக்கல்வெட்டுடன் ஒரு திரிசூலமும் செதுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ள இத்தூண் இரண்டு அடி நான்கு அங்குல நீளமுடையது. தூணின் ஒவ்வொரு பக்கமும் ஏறத்தாழப் பதினோர் அங்குல அகலமுடையது. இப்பக்கங்களிலே ஏறக்குறையப் பதினெட்டு அங்குல நீளத்துக்கு எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பாகம் நிலத்திலே புதைப்பதற்காக எழுதப்படாது விடப்பட்டுள்ளது. இத்தூணின் பக்கங்கள் கல்வெட்டுப் பொறிக்கப்படுவதற்காக நல்ல முறையிலே அழுத்தம்பண்ணப்படவில்லை. தூணைத் தயார்பண்ணிய சிற்பி கைதேர்ந்த ஒருவராக இருந்திருக்க முடியாது என்றே தோன்றுகிறது. இதனால், கல்வெட்டை நல்ல முறையிலே பொறித்துக்கொள்ளவும் முடியவில்லை.

யாழ்ப்பாண வரலாற்று மரபுகளின்படி, உரும்பராயிலுள்ள கருணாகரப் பிள்ளையார் கோயில் ஒரு பழமையான சைவத் தலமாகும். கருணாகரத் தொண்டைமான் என்ற மன்னன் ஒருவனால் இந்த ஆலயம் வழிபடப்பட்டது என்றும், இங்கு அம்மன்னன் பல திருப்பணிகளைச் செய்திருந்தான் என்றும் கூறப்படுகின்றது. கருணாகரத் தொண்டைமான் என்பான் யாழ்ப்பாணத்திலிருந்து உப்புப் பெறுவதற்காகத் தொண்டைமானாற்றை வெட்டுவித்தான் என்றும், அப்பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் அவன் இணுவிலிலே தங்கியிருந்து

உரும்பராயிலே கருணாகரப் பிள்ளையார் கோயிலை அமைப்பித்தான் என்றும் முதலியார் இராசநாயகம் மரபுக்கதைகளின் அடிப்படையிலே கூறியுள்ளார்.[1] யாழ்ப்பாண வைபவ மாலையிலும் தொண்டைமான் என்னும் மன்னன் ஒருவன் உப்புப் பெறுவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வந்து தொண்டைமானாற்றை வெட்டுவித்த கதை ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது.[2] கருணாகரப் பிள்ளையார் கோயிலைக் கட்டுவித்தவனாகக் கருதப்படும் மன்னன் யாழ்ப்பாண வைபவமாலையிலே குறிப்பிடப்பட்டுள்ள தொண்டைமான் எனவும், முதலாங் குலோத்துங்க சோழனின் தளபதியாக விளங்கிப் பல வெற்றிகளை ஈட்டிய கருணாகரனே இவன் என்றும் முதலியார் இராசநாயகம் கருத்துத் தெரிவித்துள்ளார். சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு எதுவும் இத்தளபதி கட்டியதாகக் கூறப்படும் கருணாகரப் பிள்ளையார் கோயிலிலே இதுவரை கிடைக்கவில்லை.

கருணாகரப் பிள்ளையார் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் முதன்முறையாக இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பரிசோதிக்கப்பட்டன என அறியக் கிடக்கின்றது. இவை பற்றிய மிகப் பழைய குறிப்பு முதலியார் இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாண வரலாற்றிலேதான் இடம்பெறுகின்றது.[3] அப்பொழுது கல்வெட்டுப் பொறித்த தூண் மூலஸ்தானத்தில் வைக்கப்படாது வெளியே வைக்கப்பட்டிருந்தது என அறிய முடிகின்றது. அப்பாக்குட்டிக் குருக்களின் மகனார் வைத்தீஸ்வரக் குருக்கள் கோயிலின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்த காலத்திலே இத்தூண் மூலஸ்தானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு பூசிக்கப்படுவதற்காக நிலத்திலே வைத்துக் கட்டப்பட்டதாக அறிய முடிகின்றது. தற்பொழுது இத்தலத்திலே பூசனை புரிந்துவரும் குருக்களாகிய வைத்தீஸ்வரக் குருக்கள் மகன் சபாரத்தினக் குருக்கள் தனக்குத் தெரிந்த காலந்தொட்டு இத்தூண் மூலஸ்தானத்திலேயேதான் இருந்ததாகக் கூறுகின்றார்.


முதலியார் இராசநாயகம் கருணாகரப் பிள்ளையார் கோயிலின் முதலாவது கல்வெட்டைத் தனது நூலிலே குறிப்பிட்டு, இக் கல்வெட்டு கி. பி. 1567இல் பொறிக்கப்பட்டதென்றும், இதிலே கருணாகரப் பிள்ளையார் கோயில் குறிப்பிடப்பட்டுள்ளதென்றும் கூறியுள்ளார். எனினும், கல்வெட்டின் வாசகத்தையோ பிற விபரங்களையோ அவர் கொடுக்கவில்லை. இது 1926 இல் ஆகும். அப்பொழுதோ அல்லது பின்னரோ இலங்கைத் தொல்பொருளியலாராய்ச்சித் துறையினர் இக் கல்வெட்டின் மைப்பிரதியை எடுத்ததாகக் குறிப்பில்லை. பின்னர் 1959இல் "யாழ்ப்பாணத்துச் சாசனங்கள்" என்னும் கட்டுரையை யான் எழுதியபோது, உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயிற் கல்வெட்டைப் பற்றி முதலியார் இராசநாயகம் கூறிய தகவலைவிட வேறு எதையும் புதிதாகக் கூறமுடியவில்லை[4]. இக் கல்வெட்டைப் பார்வையிடும் சந்தர்ப்பம் 1962 இலேதான் எனக்கு முதன் முறையாகக் கிட்டியது. ஆனால், அப்பொழுது அதன் மைப்பிரதியை எடுத்துக்கொள்ள வசதி கிடைக்காமையினால் அதனை வாசித்துக்கொள்ள முடியவில்லை பின்னர் 1970 பெப்ரவரி 28இல், இலங்கைப் பல்கலைக் கழகத்து விரிவுரையாளர் திரு. செ. குணசிங்கமும் கருணாகரப் பிள்ளையார் கோயிலுடன் நெருங்கிய தொடர்புள்ள அன்பர் திரு. அ. பஞ்சாட்சர ஆசிரியரும் புரிந்த பேருதவியின் விளைவாக இக் கல்வெட்டுக்களின் மைப்பிரதியை எடுத்துக்கொள்ள முடிந்தது. அப்பொழுது கல்வெட்டுத்தூண் மூலஸ்தானத்திலே நாட்டப்பட்டிருந்தது; அதனால், தூணின் நான்கு பக்கங்களிலும் இருக்கும் எழுத்துக்களைச் சரியாக மைப்பிரதி செய்துகொள்ள முடியவில்லை. அத்துடன், தூணின் கீழ்ப்பாகத்திலிருந்த எழுத்துக்கள் சீமேந்தினால் மூடப்பட்டிருந்தன. இக்காரணங்களினால். மைப்பிரதி எடுக்க வாய்ப்புக் கிட்டியும் கல்வெட்டை வாசித்துக் கொள்ள

முடியாத கவலை ஏற்பட்டது. தூணின் மேற்பாகத்தில் இருந்து சிறு கல்வெட்டை மட்டும் பூரணமாக வாசித்துக்கொள்ள முடிந்தது. இதன் வாசகம் பின்னர் 1971 ஜூலையில் வெளிவந்த சிந்தனைச் சஞ்சிகையிலே வெளியிடப்பட்டது[5]. கோயிலிலே திருப்பணிவேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது கல்வெட்டுப் பொறித்த தூணை மூலஸ்தானத்திலிருந்து வெளியே அண்மையில் கொண்டுவர நேரிட்டது. அப்பொழுது சபாரத்தினக் குருக்களும் திரு. பஞ்சாட்சரமும் எனக்கு மைப்பிரதி எடுக்க மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை அளித்தனர். ஆகவே, 1973 ஒகஸ்ட் 3ஆம் திகதி இத்தூணை நன்கு சுத்தப்படுத்தி நல்ல முறையிலே மைப்பிரதி எடுத்துக் கொள்ள முடிந்தது. சீமேந்தினால் மூடப்பட்டிருந்த பாகத்திலே எழுத்துக்கள் நன்கு பேணப்பட்டிருந்ததால், கல்வெட்டின் கீழ்ப்பாகம் தெளிவாக வாசிக்கக் கூடியதாய் அமைந்திருந்தது, மேற்பாகம் பெருமளவு சிதைந்தே இருந்தது.

தூணின் நான்கு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ள முதலாவது கல்வெட்டிலே பதினொரு வரிகள் உள. வழமையாகத் தூண்களிலே கல்வெட்டுக்களைப் பொறிக்கும்போது, ஒரு பக்கத்தில் எழுதி முடித்த பின்பே பிற பக்கங்களில் வாசகம் தொடரும். இக்கல்வெட்டில் அவ்வாறல்லாது, ஒவ்வொரு வரியும் முதலாவது பக்கத்திலிருந்து நான்காவது பக்கம் வரை நீட்டி இடமிருந்து வலம் எழுதப்பட்டுள்ளது. இரண்டாவது கல்வெட்டு ஐந்து சிறு வரிகளைக் கொண்டதாய்த் தூணின் மேற்பாகத்திலே பொறிக்கப்பட்டுள்ளது. இப்பாகத்திலே பொறிக்கப்பட்டுள்ள திரிசூலம் இத்தூண் ஒரு திரிசூலக்கல்லாகப் பயன்படுத்தப்பட்டது என்பதைக் காட்டி நிற்கின்றது.

இக்கல்வெட்டிக்களின் மொழி தமிழாகும்; எழுத்து பதினைந்தாம் பதினாறும் நூற்றாண்டுகளைச் சேர்ந்த தமிழ் எழுத்து; இக்கல்வெட்டுக்களுள் முதலாவது காலத்தால் முந்தியது, மற்றது சிறிது பிந்தியது என எழுத்தைக்கொண்டு கூறலாம். முதலாவது கல்வெட்டு, "ஸ்வஸ்திஸ்ரீ" என்ற மங்கல வாக்கியத்துடன் ஆரம்பிக்கின்றது. அதன் பின் மன்னன் எவனும் குறிப்பிடப்படாது, சக வருஷமும் ஆண்டுப் பெயரும் மாதமும் பிற காலக் குறிப்புகளும் இடம் பெறுகின்றன. துரதிர்ஷ்டவசமாக இப்பாகம் தெளிவாக இல்லாமையினால், இக்கல்வெட்டின் காலம் பற்றிய குறிப்புக்களைத் திட்டவட்டமாக அறிந்துகொள்ள முடியவில்லை. சக வருஷம் எது என்பது தெளிவில்லாவிட்டாலும், ஆண்டின் பெயர் "பிறபவ" வருஷம் என்பது தெளிவாக உள்ளது. அத்துடன் மாதப் பெயர் "சித்திரை" என்பதும் ஓரளவுக்குத் தெளிவாயுள்ளது. இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் முதலியார் இரசநாயகம் இக்கல்வெட்டை ஆராய்ந்த போது அல்லது பிறரைக்கொண்டு பரிசோதித்தபோது, சக வருஷம் தெளிவாக அமைந்திருந்திருக்கலாம், ஏனெனில், அவர் தனது நூலிலே கல்வெட்டின் காலம் கி. பி. 1567 என்று குறிப்பிட்டுள்ளார். கி. பி. 1567 பிரபவ என்ற பெயரைப் பெற்ற ஆண்டு. ஆகவே, முதலியார் இராசநாயகத்தின் குறிப்பைப் பயன்படுத்தி, இக்கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ள பிரபவ வருஷம் கி. பி. 1567 என்று தற்போதைக்குக் கொள்வது பொருத்தமாகும்.

இக்கல்வெட்டு, கோயிலுக்குச் செய்யப்பட்ட தர்மம் ஒன்றைப் பதிவு செய்வதற்காக எழுதப்பட்டது என்பது தெளிவு. எனினும், இத்தர்மம் என்ன என்பதைத் திட்டவட்டமாக அறிய முடியவில்லை. கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட தூண் ஒரு திரிசூலக் கல்லாக இருந்ததினாலும், கல்வெட்டிலே "(இ)ந்தத் திருசூல..." என்ற வாசகம் வருகின்றமையினாலும், இத்தர்மம் கோயிலுக்கு வழங்கப்பட்ட ஒரு நிலத்தானமாகும் என ஊகிக்கலாம். சைவக் கோயில்களுக்கு



உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலில் உள்ள பழைமை வாய்ந்த கல்வெட்டு



8-2-1965இல் நடைபெற்ற திருப்பணிக் கலைவிழாவில் திரு. வே. த. செல்லத்துரை தம்பதிகள் குத்துவிளக்கேற்றுகிறார்கள்.

வழங்கப்பட்ட நிலத்தானங்களின் எல்லைக் கல்லாகவே திரிசூலக் கற்கள் நாட்டப்பட்டன. கோயிலின் பெயரும் எமது கல்வெட்டிலே தெளிவாக இல்லை. ஆனால், முதலியார் இராசநாயகத்தின் குறிப்புப்படி, 'கருணாகரப் பிள்ளையார் கோயில்' என்ற குறிப்பு இதிலே வருகின்றது. அப்பாகம் இப்பொழுது அழிந்து விட்டதுபோலும்.

கல்வெட்டின் தடுப்பாகத்திலே தானம் செய்த சிலருடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், இப்பெயர்களும் சிதைந்த நிலையிலேதான் காணப்படுகின்றன. கல்வெட்டின் இறுதியிலே வழமைபோல் ஓர் ஓம்படைக்கிளவி காணப்படுகின்றது. "இந்தப்படி சந்திராதித்த வரையும் நடக்கக் கடவதாகவும், இந்தத் தன்மத்தை யாதாமொருவர் பொல்லாங்கு நினைத்தவர்கள் கெங்கைக் கரையிலே கோவதை செய்த பாவம் பெறக் கடவதாகவும்" என்று இறுதியிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, இக்கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ள தர்மமானது சந்திரனும் சூரியனும் நிலைக்கும்வரை நிலைத்திருக்க வேண்டும் என்றும், இந்தத் தர்மத்தை அழிப்பதற்கு நினைப்பவர்கள் பெரும் பாதகங்களுள் ஒன்றாகக் கருதப்பட்ட பாதகமாகிய, கங்கை நதியின் கரையிலே பசுவைக் கொல்லுகின்ற பாவத்தை அடைவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்படியான ஓம்படைக்கிளவி இடைக்காலக் கல்வெட்டுக்களிலே அடிக்கடி இடம் பெறுகின்றது. கிழ் மாகாணத்திலே திருக்கோவிலிலுள்ள ஒரு கல்வெட்டிலே பின்வரும் ஓம்படைக்கிளவி காணப்படுவது கவனிக்கத் தக்கது: "இத்தன்மத்துக்கு அகிதம் செய்தானாகில் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவானாகவும்."[6]

இரண்டாவது கல்வெட்டு மிகவும் தெளிவாக இருப்பதால் அதனைப் பூரணமாக வாசித்துக் கொள்ளமுடியும். இதன் நோக்கம் கோயிற் பண்டாரத்துக்கு (அதாவது கோயிலின் திறைசேரிக்கு) ஐந்து பணம் தர்மமாக இடப்பட்டதைப் பதிவு செய்வதாகும். யாரால் இப்பணம் இடப்பட்டது என்பது போன்ற விபரங்கள் கொடுக்கப்படவில்லை. இது பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் அல்லது பதினேழாம் நூற்றாண்டிலே பொறிக்கப்பட்டிருக்கலாம்.

## அடிக்குறிப்புகள் :

1. C. Rasanayagam, **Ancient Jaffna,** pp. 266-267 (Madras 1926)

2. *யாழ்ப்பாண வைபவமாலை,* முதலியார் குல. சபாநாதன் பதிப்பு, பக். 14 (யாழ்ப்பாணம் 1953).

3. C. Rasanayagam, முன்குறிப்பிட்ட நூல்; பக். 267;

4. கா. இந்திரபாலா, யாழ்ப்பாணத்துச் சாசனங்கள்,' *இளங்கதிர்* 1959/60, பக். 28 (பேராதனை).

5. ஆசிரியர் (கா. இந்திரபாலா), 'செய்தியும் குறிப்பும்,' *சிந்தனை,* IV, பாகம் 2 & 2, ஜனவரி - ஜூலை 1971, பக். 98 (பேராதனை).

6. கா. இந்திரபாலா, 'ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள், 4 : கிழக்கிலங்கைச் சாசனங்கள்,' *சிந்தனை,* II, பாகம் 2 & 3, ஜூலை - ஒக்டோபர் 1968, பக். 42;

## முதலாவது கல்வெட்டின் வாசகம்

| | பக்கம் 1 | பக்கம் 2 | பக்கம் 3 | பக்கம் 4 |
|---|---|---|---|---|
| 1. | ஸ்வஸ்தி (ஸ்ரீ) | சகா(த்)தம் | ............................ | ............................ |
| 2. | ... பிறபவ | வருஷம் சித் | (திரை)...................... | ............................ |
| 3. | ............................ | (த...டப)... | ன ........................ | ............................ |
| 4. | ............................ | (ற்ற. வா. ஊர | (ஞரு) ம்...................... | ............................ |
| 5. | ............................ | ந்தத் திருச்(சூ) | ல ........................ | ............................ |
| 6. | ............................ | (கண அடி) தெ | ரழு(ம்) ...................... லம் | ............................ |
| 7. | ............................ | (ம் பொ) னம்ப | லம் ப(னே)... | ............................ |
| 8. | லன் (பெண்) ... | ... அழகி நினே | வியும்... (ரும்) | ......(ரும் செ) |
| 9. | (ய்)தது இந்தப்ப | (டி) சந்திராதித்தவ | ரையும் நடக்க | கடவதாகவும் |
| 10. | இந்த தன்மத் | தை யாதா மொ | ருவர் பொல்லா | ங்கு நினேத்தவ |
| 11. | ர்கள் கெங்கை(க்) | (க)ரையிலெ கொவ | தை செய்த பாவம் | பெறக் கடவதாகவும் |

## இரண்டாம் கல்வெட்டின் வாசகம்

1. திருச்சிற்றம்பலம்
2. பண்டார
3. த் தன்மம்
4. உடமை
5. ப் பணம் ரு.

# வளர்க கருணாகரன் புகழே!

( சாரதா )

1. கருணா கரப்பேர்க் கணபதியே — உள்ளங்
கவரு முரும்பைக் குணநிதியே;
அருணா சலனார் அருள்பதியே — எங்கள்
அவல மறுத்தே யருள்கதியே! ( கருணா )

2. ஓமெனும் மந்திரத் துட்பொருளாய் — வந்தே
உலகை யியக்கிடு மற்புதனே,
யாமெலா முய்வுற நற்கருணை — நல்கி
நலமுறக் காக்குவை சற்குருவே! ( கருணா )

3. வாடும் பயிர்கள் தழைத்திடவே — பெய்து
வளந்தரு கின்ற மழையெனவே,
தேடும் அடியார் திளைத்திடவே — என்றுந்
திருவருள் நல்கு புழைக்கரனே! ( கருணா )

4. வேத முதல்வனே விண்ணவர்க்கும் — மேலாம்
விநாயக வித்தக தத்துவனே,
காதலாய் நின்பதம் பற்றுதற்கே — என்றுங்
கருணை புரிகுவாய் தற்பரனே! ( கருணா )

5. வாழு முரும்பை வளங்கொழிக்க — நின்னை
வணங்கு மடியார் உளங்களிக்கச்
சூழும் பிறவித் துயரொளிக்க — என்றுந்
துணைசெய் கருணாகரப் பொருளே! ( கருணா )

6. பற்றுக் குறைகளும் பஞ்சமுமாய் — மெத்தப்
பரிதபிக் காமலே எங்களுக்கோர்
நற்று யெனவே யெழுந்தருளி — எல்லா
நலன்களு மீகுவை ஞானபரா! ( கருணா )

7. கனவிலும் நனவிலும் மனம்நினையே — கண்டு
களிக்க வரந்தா கணபதியே
மணமுயிர் சோலை மருதவெளி — சூழ
மருவு பரத்தைப் புலவொளியே! ( கருணா )

8. "ஆரியச் சக்கர வர்த்தி" களின் — வீர
அரசு நடந்தகா லம்முதலாய்
பேரிசை கொண்டுரும பைப்பதியில் — நின்று
பிறங்குங் கருணா கரப் பெருமான்! ( கருணா )

9. கோவில் புதுக்கிக் குடமுழுக்கும் — ஆட்டிக்
கொழுத்த விழாச்செய் திடுமிதனால்,
நாவு மினிக்கும் படியுரைப்போம் — வாழ்த்தி,
"நமஓம் கருணா கர"! வென்றே! ( கருணா )

10. வாழ்க உரும்பை வளநகரம் — நீடு
வளர்க கருணா கரன்புகழே;
சூழ்க தமிழொடு சைவநெறி — தொண்டும்
தொடர்ந்து வளர்கபல் லாண்டினிதே! ( கருணா )

# அப்பர் தேவாரத்தில் அரிய சில சொல் வடிவங்கள்

செஞ்சொற்கொண்டல், வித்துவான், டாக்டர்,
**சொ. சிங்காரவேலன்,** எம். ஏ., டிப். லிங்க்., பிஎச். டி.,
( தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம் )

கவிதை சொற்களால் ஆகியது. சொற்கள் கவிஞன் எடுத்தாளும்போது பெருஞ்சிறப்பைப் பெற்றுவிடுகின்றன. எல்லோர்க்கும் தெரிந்த சொற்களே சிற்சில வேளைகளில் கவிஞனின் கைவண்ணத்தால் புதுப்பொருளும் பொலிவும் பெற்று ஒளிவிடுகின்ற அற்புதத்தை இலக்கியங்களிற் காணலாம். சொல் ஒரு கருவிதான்: ஆயினும், அந்தக் கருவியை வைத்துக்கொண்டு அதனைக் கையாள வல்லவனாகிய கவிஞன் எவ்வளவோ புதிய படைப்புக்களைச் செய்கின்றான். புதிய உலகிற்கு நம்மை அழைத்துச் செல்லுகின்றான். அதுவே அவன் படைக்கும் பொருள் உலகம். உயர்ந்த கவிஞர்களுடைய கவிதைகளுக்கே இத்தகு மாண்பு இயல்பாகின்றது. அப்பர் என்ற அருட்பெருங் கவிஞரின் சொல்வன்மையினை எண்ணுங்கால் இந்த நினைவுகள் அனைத்தும் நம் எண்ணத்தில் எழுகின்றன.

"இலக்கியம் என்பது வாழ்வின் ஒருவகை விளக்கமே; அது சொல்லின் வழியாக இனிது விளங்குகின்றது" என்பர்.[1] அத்துடன் ஓர் ஆசிரியனின் சில நடையினை ஆழ்ந்து உணர்தற்கு அவனுடைய சொல்லாட்சியினை அறிதல் பெரிதும் வேண்டத்தக்கது என்பது இலக்கிய ஆராய்ச்சியாளரது முடிவும் ஆகும். "இலக்கியம் விளைக்கும் இனிய உணர்வுகள் ஒரு மனத்தினின்றும் பிறிதொரு மனத்திற்குச் சொற்கள் வழியாகவே செல்லுதலால், அவற்றைத் தனித்து ஆராயும் ஆராய்ச்சி நடை ஆராய்ச்சியின் இன்றியமையாத பகுதிகளுள் ஒன்றும்" என்பர் எடித் ரிக்கர் என்னும் அறிஞர்.[2]

இத்தகு சிறப்புடைய சொல் ஆராய்ச்சி சில இன்றியமையாக் கூறுகளை உடையது. சொல்லின் அளவு, (Word Proportion) சொல்லின் நிலை (Word length) சொற்கள் தொடர்ந்து நிற்கும் நிலை (Associational values of words) தொடர்நிலை, சொற்கோவைப் பரப்பு (Extent of vocabulary) தொடராக்கம் (Phrasing) ஆகிய கூறுகள் இதன்பால் அடங்குவன. கவிஞனது சொற்கோவைப் பரப்பில் நம் சிந்தனையைத் தூண்டும் நிலைகளாகப் பலவற்றைக் கொள்ளலாம். அவற்றைக் கூர்ந்து நோக்குங்கால், அரிய சொற்கள் (Rare words) அரும் பொருள்களிற் கையாளப் பெற்ற சொற்கள், (Words used in rare sense) படைக்கப்பட்ட சொற்கள் (Coined words) இணையற்ற பொருளில் ஆளப்பட்ட சொற்கள் (Words used in a unique sense) அயல்மொழிகளினின்று கடன் வாங்கப்பட்ட சொற்கள் (Words borrowed from foreign languages) இலக்கியங்களில் முன்னர்க் கையாளப்பெறாத குறுமொழி இனஞ்சார்ந்த சொற்கள் (Slang and other words not before used in literature). வட்டாரச் சொற்கள் (Dialect words and forms) ஆகிய பாகுபாடுகள் தெளியப்பெறும்.[3]

அப்பர் தேவாரத்திற்கமைந்த சொற்கோவையினை ஆழ்ந்து நோக்கினால் இப்பாகுபாடுகளுள் முதலாவதாகிய 'அரிய சொற்கள்' பலவற்றை அங்குக் காணலாம். இலக்கியங்களிற் பயில வழங்கப்பெறாத அச்சொற்களை அப்பரடிகள் கையாண்டுள்ள திறம் பெரிதும் உணரத்தக்கது. 'தமிழ்மொழித் தலைவர்' என்றும், 'கோதின்மொழிக் கொற்றவனார்' என்றும், சேக்கிழாராற் பாராட்டப்

பட்டவர் அடிகள்,[4]. ஆதலின், அவருடைய சொல்லாட்சியும், திறனும் அறிஞர் உலகினுற் பாராட்டப்பெற்ற பழமைச் சிறப்புடையவை என்பது வெளிப்படை.

'அல்லகண்டம்' என்ற ஒரு சொல் அப்பர் தேவாரத்திற் காணப்பெறு கின்றது. இச்சொல் வடிவம் தமிழ் உலகிற் புதியதாகக் கருதப்பெறும் நலம் உடையது; 'துன்பம்' என்ற பொருளை உடையது இச்சொல்;

"அத்தா உன் பொற்பாதம் அடையப்பெற்ருல்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே"-[5];

இதனுள்வரும் "கொண்டு" என்பது மூன்ரும் வேற்றுமை ஆன்உருபின் பொருள் படுவதோர் இடைச்சொல் ஆகும்; ஆகவே, "துன்பத்தால் வருந்துதல் என் செய்யக்கடவேன், ஒன்றுமில்லை" என்பதும், 'அவை என்னை ஒன்றும் செய்யா' என்பதும் இத் தொடர்கருத்தாகக் கொள்ளப்படும்; இச்சொல் அல்லல், கண்டம் என்பதன் ஆக்கமாகக் கொள்ள இடம் உள்ளது; 'கண்டம்' என்பது இப்போதும் துன்பத்தையே குறிப்பதாகும். அல்லலாகிய கண்டம் என்று கொள்ளலாம். 'அல்' இருள் எனக்கொண்டு 'இருளனைய துன்பம்' என்றும் பொருள் கொள்ள இடம் உண்டு. எவ்வாறேனும் அரிய சொல் வடிவம் ஆகிய இது அப்பர் தேவாரத்தில் விளங்குவது அறிந்துணரத்தக்கது.

'ஒப்பாரி' என்பது ஒப்புப்பொருளில் வரும் ஒருசொல். இது திருவள்ளுவரால், தம் கயமை அதிகாரத்தில் பின்வருமாறு எடுத்தாளப்பெற்றுள்ளது-[6].

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம் கண்டதில்"

'அவர் அன்ன ஒப்பாரி' என்பதற்குப் பரிமேலழகர் 'அவர் மக்களையொத்தார் போன்ற ஒப்பு' என்றெழுதுவதால், 'ஒப்பாரி' என்ற சொல் 'ஒப்பு' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளதென்றே அவ்வுரையாசிரியர் கருதுகின்ருர் என்று கூறலாம்.

"கடவுளைக் கடலுள்ளெழு நஞ்சுண்ட
உடலுளானை ஒப்பாரி இலாதவெம்
அடலுளானை அரத்துறை மேவிய
சுடருளானைக் கண்டீர்நாம் தொழுவதே"

என்ற இடத்து அப்பர் அடிகள் 'ஒப்பாரி' என்ற சொல்லை ஒப்புப்பொருளில் (resembleness) எடுத்தாண்டுள்ளார்[7]. 'இறைவனுடைய பெருவீரத்திற்கு ஒப்பு இல்லை' என்பது கருத்து. திருவள்ளுவராற் கையாளப்பெற்ற இச்சொல் பன்னூருண்டுகளுக்குப் பிறகு பழுத்த தமிழ்ப் புலவராகிய அப்பராற் கையாளப் பெற்றுப் புதுவாழ்வு பெறுகின்றது.

'சிவன்' என்ற சொல் சிவபிரானைக் குறிக்கும் சொல் ஆகும்: இதனை 'Siva' என்ற வட சொல்லாக்கமாகக் கருதுவார் உளரேனும், அப்பர் இதனை அருந்தமிழ்ச் சொல்லாகவே கொண்டு பாடியுள்ளார். 'சிவ(த்தல்)' என்ற வினையடியாகப் பிறந்த சொல்லாகவே இது கொள்ளப்பட்டுள்ளது.

"சிவன் எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனி எம்மான்"

என்ற இடம் இக்கருத்தை இனிது விளக்குவதாக அமைந்துள்ளது [8]. 'சிவன்' என்ற சொல் 66 இடங்களிலும், 'ஆர்' விகுதியுடன் சேர்த்து 3 இடங்களிலும் அடிகளால் ஆளப்பட்டுள்ளன. 'சிவந்தான்' என்றும் ஓரிடத்துச் சிவனைக் குறிப்பிட்டுள்ளார் [9]. சடையினைச் 'செஞ்சடை' என்றும், 'தீவணத்த செஞ்சடை' என்றும், கூறி மகிழ்வதுடன், 'சுடர்' என்றும், 'சோதி' என்றும் 'செம்பொன் சோதி' என்றும் கூறுவர் அடிகள் [10]. எண்ணற்ற இடங்களில் பேரொளிப் பிழம்பாக உள்ள பெருமானைப் போற்றியுள்ளார். சிவ பரம்பொருளின் செவ்வொளிக் காட்சி அனுபவம் உடைய அடிகள், இச்சொல்லை இவ்வாறேகொண்டு உணர்த்தியுள்ளார் என்பது அறியத்தக்கது.

பன்மை விகுதிகளாகத் தொல்காப்பியர் உரைத்த பலவற்றுள் ஒன்று 'கள்'என்பது. இதனைத் தொல்காப்பியர்,

"கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலவறிசொற்கே"

என்பர் [11]. அஃறிணை இயற்பெயர்களின் பன்மைக்குறிப்பு அவற்றொடு சேர்க்கப் பெறும் 'கள்' விகுதியான் விளங்கும் என்பது கருத்து.

"ஆர்கள் ஆகிலும் ஆக" "இருபதுகள் தோள்" "செய்வனகள் செய்யக்கண்டு" "திருவருள்கள்" "நீங்கள்" "நீர்கள்" "பிழைத்தனகள்" "எழுமின்கள்" "பிதற்றுமின்கள்" என்பன அடிகளார் பாக்களிற் காணப் பெறும் தொடர்கள் [12]. 'ஆர்' என்னும் வினாவினைக் குறிப்புடன் 'கள்' விகுதி சேர்த்தலும், எண்ணுப் பெயர்களுடன் சேர்த்தலும், அஃறிணை வினைமுற்றுடன் சேர்த்தலும், முன்னிலைப்பன்மைப்பெயர்களுடன் சேர்த்தலும், (நீ—ர்—கள்) வியங்கோள் முற்றுக்களுடன் சேர்த்தலும் இவருடைய பாடல்களிற் காணப் பெறுதலைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். 'விகுதிமேல் விகுதி' என்று இவற்றைக் கூறல் பொருந்தும். முன்னிலை இடப்பெயர்களில், நீ—நின்னை என்ற வடிவங்களும், உன்னை, நுன்னை என்ற வடிவங்களும் இவர் தேவாரப் பதிகங்களிற் காணப்பெறுகின்றன [13]. இலக்கியங்களில் அரிதாகக் காணப்பெறும் சொல் வழக்குகள் இவர் பாக்களிற் காணப்பெறுகின்றமை அறிந்திடத்தக்கது.

பேச்சு வழக்குச் சொற்களுக்கும் பெருமதிப்புத் தந்தவர் அடிகள்,

| | |
|---|---|
| வைத்த > வைச்ச > வச்ச | நித்தலும் > நிச்சலும் |
| விரித்து > விரிச்சு | சிரித்து > சிரிச்சு |
| கைத்த > கைச்ச > கச்ச | |

இவை ஒருவகையான மாற்றங்கள். இவை இவர் பாக்களிற் காணப்பெறும் வடிவங்கள் [14].

உய்ந்து > உஞ்சு மைந்தன் > மஞ்சன்

இத்தகு மாற்றங்களும் அடிகளார் வாக்கிற் காணப்பெறுகின்றன [15]. ஒன்று என்ற எண்ணுப்பெயரை 'ஒண்ணு' என்று பேச்சு வழக்கிற் குறித்தலும் உண்டு. இவ்விருவகை வழக்குக்களும் அடிகள் வாக்கிற் காணப்பெறும். 'ஒண்ணு' என்ற வழக்கு ஓர் இடத்தில் மட்டுமே உள்ளது; ஏனைய 288 இடங்களிலும் 'ஒன்று' என்ற திருந்திய வடிவமே உள்ளது. 'எண்ணுகேன்' என்ற எதுகைக்கேற்ப "ஒன்று'ளே' என்பதனை "ஒண்ணுளே" என்று மாற்றி வழங்குகின்றார் அடிகள் [16]. இவ்வாறே சழக்கு, சங்கடம், பொந்தை, களேபரம், தொந்தம், மொன்னனை,

சரக்கு முதலிய பல சொற்கள் அடிகளார் பத்திப் பாட்டிலக்கியத்திற் புதிய வாழ்வு பெற்றுவிடுகின்றன 16B.

'மாட்டேன்' என்ற எதிர்மறைவினை அடிகளார் திருவாக்கிற் பொருளில் ஒரு மாற்றத்துடன் விளங்கக் காண்கின்றோம். 'செய்யமாட்டேன்', 'ஓடமாட்டேன்', 'பாடமாட்டேன்' என்ற தொடர்களுக்கு, 'செய்ய இயலாதவன் ஆனேன்', 'ஓடுதல் இயலாதவன் ஆனேன்', 'பாடுதல் இயலாதவன் ஆனேன்' என்று பொருள் கொள்ளுமாறு அடிகளார் பாநெறி அறிவுறுத்துகின்றது. 'நான் செய்யேன்', 'ஓடேன்', 'பாடேன்' என்று பொருள் கொள்ளுதல் அடிகள் பாநெறிக்குத் தக்கதன்று; அடிகளார் திருவாக்கில் 'மாட்டேன்' எனவரும் இடங்கள் அனைத்தும் இவ்வாறு பொருள் செய்யத் தூண்டுகின்றன.

'மாட்டுதல்' என்ற வினையடியாகப் பிறந்த பெயரெச்சம் 'மாட்டா' என்பதாகும்; இது 8 இடங்களில் வருகின்றது. 'மாட்டேன்' என்ற தன்மை ஒருமை வினை வடிவம் 60 இடங்களிலும், 'மாட்டீர்' என்ற முன்னிலைப்பன்மை வடிவம் 2 இடங்களிலும், 'மாட்டான்' 'மாட்டாதான்' என்ற வினையாலணையும் பெயர் வடிவங்களில் முன்னது 4 இடங்களிலும், பின்னது 1 இடத்திலும், 'மாட்டாதார்' 'மாட்டார்' என்ற படர்க்கைப் பன்மை வினையாலணையும் பெயர் வடிவங்களில் முன்னது 1 இடத்திலும், பின்னது 5 இடங்களிலும் வருகின்றன. இவையனைத்தும் இயலாமைப் பொருளிலேயே வழங்குகின்றன என்பதும், நேர் எதிர்மறைப் பொருளில் வழங்கப்பெறவில்லை என்பதும் அறியத்தகுந்தன.-17

''காணமாட்டா'', ''பாடமாட்டேன்'', ''உணரமாட்டீர்'', ''மாட்டாதான்'', ''அறியமாட்டான்'', ''காணமாட்டார்'', ''மாட்டாதார்'' என வரும் இடங்கள் காணத்தக்கன. பெரும்பாலும், மாட்டுதல் என்ற வினைப்பகுதியின் அடியாகப் பிறந்த இவ்வடிவங்கள், செய்வன் எச்சங்கட்குப் பின்னர் வந்து விளங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐம்பொறிகளையும் அடக்கி நிற்கும் தொண்டர் இயல்பை நம் அருளாளர் வியந்து போற்றுவர். அறிவு என்ற அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்குதல் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து.-18

''உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து''

திருஞான சம்பந்தரும், ''தொண்டர் அஞ்சுகளிறும் அடக்கி'' என்ற வித்தகத்தை எடுத்துப் பாராட்டுவர்.-19 அப்பரடிகள், ''தொழுது அகம் குழைய மேவித் தோட்டிமை உடைய தொண்டர்'' என்று பாடுகின்றார்.-20 இவ்விடத்துத் தொட்டிமை என்ற பாட வேறுபாடும் உண்டு. 'தொட்டிமை' என்ற சொல், 'ஒற்றுமை, அழகு' என்ற பொருளில் சிந்தாமணி, பெருங்கதை ஆகிய நூல்களிற் காணப்பெறும்.-21 'அஞ்சு பொறிகளையும் அறிவு என்னும் தோட்டியால் அடக்கும் தன்மை' என்ற பொருளில், இவ்விடத்துத் 'தோட்டிமை' (தோட்டி + மை > தோட்டிமை) அடிகள் வழங்கியிருத்தலும் கூடும். இச்சொல் வடிவம் அரும்பொருள் சான்ற அடிகள் ஆட்சியாக உள்ளது. 'அடங்காத் தன்மை' என்ற பொருள் உடைய 'பட்டி' என்ற சொல்லுடன் 'மை' விகுதியைச் சேர்த்துப் 'பட்டிமை' என்ற சொல்லைப் படைத்துக் 'கீழ்மை' என்ற பொருளில் ஆள்கின்றார் அடிகள்.-22 'பட்டிமை' என்ற இச்சொல்லாட்சியும், 'தோட்டிமை' என்ற சொல்லிற்கு இங்குக் கண்ட பொருள் தக்கதென்பதற்குச் சான்றாகும். 'காதன்-மை'-23 'பத்தி-மை'-24 என்றும் வரும் சொல் வடிவங்கள்

கருதத்தக்கன. ஒரு பண்புப் பெயரினைப் பின்னும் பண்பு விகுதியை (மை) ச் சேர்த்து ஆள்வது அடிகட்கு இயல்பு ஆம்.

'கத்து' என்ற ஒரு சொல் தமிழில் வழங்குகின்றது. 'பொய், கரவு' என்ற பொருள்களை உடையது இச்சொல். இறைவன் உயிரின் உள்ளத்தில் இருந்தும் தன்னைத் தோன்றாமல் மறைத்து நிற்கும் அருள் இயல்பு உடையான், "தோன்றாத்துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே" என்று பாடுவர் அடிகள்.-[24] பிறிதோர் இடத்து, "தோன்றாதென் உள்ளத்தின் உள்ளே நின்ற கத்தாம் அடியேற்கு" என்று பாடுகின்றார்.-[25] இவ்விடத்தே கத்து என்ற சொல்லிற்கு 'கரவு, பொய்' என்ற பொருள் கூறுவர். தேவார ஒளிநெறி ஆசிரியர் 'ஒலி' என்ற பொருளைக் கூறுவர். 'கத்து' என்னும் சொல் 'உள்ளொலி'யைக் (Inner voice) குறிக்கும் என்பது அவர் கருத்து.-[26] "களவும் கத்தும் அற" என்ற மொழியின் பொருளாகத் திருட்டும் பொய்யும் நீங்குக என்று கூறுவதையும் இங்கு நினைவு கூரலாம்.

அடைவு திருத்தாண்டகம் என்ற பகுதியில் பள்ளி, வீரட்டானம், குடி, ஊர், கோயில், காடு, வாயில், ஈச்சரம், மலை, ஆறு, குளம், கா என்று முடியும் ஊர்களை உரைத்து அவற்றைப் போற்றுகின்றார் அடிகளார்.-[27] தமிழகத்து 'ஊரும்பேரும்' பற்றிப் பல நுட்பங்களை இப்பதிகத்துச் சொல் வடிவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

"கடுவாயர் தமைநீக்கி என்னை ஆட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல்வாயில்
நெடுவாயில் நிறைவயல் சூழ்நெய்தல் வாயிலை
நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல்வாயில்
மடுவார்தென் மதுரை நகர் ஆலவாயில்
மறிகடல்சூழ் புனவாயில் மாடநீடு
குடவாயில் குணவாயில் ஆனவெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடாவன்றே.-[28]

'ஆலம் — விடம்; ஆலவாய் என்பது நச்சுப்பாம்பு தன் வாயோடு வாலை வைத்து வளைத்து எல்லை காட்டியதால் மதுரை நகர்க்குக் காரணப்பெயர்' என்று புராணம் கூறும். ஆனால், 'ஆலவாயில்' என்பதே சரியான சொல்வடிவம் என்பது அப்பர் பாடலால் விளங்குகின்றது. நெய்தற் பூக்கள் அடர்ந்தது நெய்தல் வாயில்; முல்லைப் பூக்கள் செறிந்தது முல்லைவாயில். ஆலமரங்கள் செறிந்தது மதுரையாகிய ஆலவாயில் என்கிறது பாட்டு. இயற்கை நெறிப்படி இவ்வாறு "ஆலவாயில்" என்று இருந்த பெயரே, புராண காலத்தே வேறு கதை விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதலாம்.-[29]

"ஆலவாயில் அப்பனே அருள் செயாயே" என்று அடிகள் பாடுவதை, இவ்வாறே பொருள் கொள்ளவேண்டும்.

இவ்வாறு அப்பர் தேவாரத்திற் காணப்பெறும் அரிய சொல் வடிவங்கள் பல. அவற்றை ஒவ்வொன்றாய் விரித்துரைக்கப்புகின் 'விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்' என்ற நிலை வந்திடும். ஆதலின் சுருக்கமாகச் சொன்னால், காய்தல், உவத்தல் அகற்றி நடுநிலைமையில் நின்று நோக்குவார்க்கு அப்பர் தேவாரச் சொற்கோவை காட்டும் விழுமிய சொல் வடிவங்கள் பல. அவை சிந்தனைக்கு விருந்தாகவும், இலக்கிய நயம் காட்டும் எழில் சார்ந்தவையாகவும் அமையும். அதனுடன் இடைக்காலத் தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும், போக்கினையும் உணர்த்துவதாக அமையும் என்றும் கூறலாம்.

## அடிக்குறிப்பு விளக்கம்,

1. "Literature is the interpretation of life through the medium of words"
New methods for the study of Literature
Edith RICKER — 1935 - P. 2

2. "As words are the only sympols by which literature is conveyed from one mind to another, the study of them is an important part of the analysis of style" Ibid — P. 73.

3. Ibid — P. 90.

4. திருத்தொண்டர் புராணம் — பா. திருஞான-598 பா. அப்பூதி-12

5. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப்பதிகங்கள் — சைவசித்தாந்த மகாசமாசம் — மூன்றாவது பதிப்பு — 1941 — பா: 2705 — 2714.

6. திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும் — சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் — எட்டாவது பதிப்பு — 1951 — 1071 குறள் உரை:

7. மேற்படி: — தேவாரப்பதிகங்கள் — பா. 1092:

8. மேற்படி: — 1058:

9. மேற்படி: — பா. 72. 84. 135. 554. 566. 638. 948:
1058, 2063, 2356, 2946, 3056 முதலியன:
1149. 1563, 2370, 2621, 2483 முதலியன.

10. மேற்படி: 121 — 2, 163 — 8, 160 — 6 முதலியன:

11. தொல்காப்பியம் மூலம் — சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் — முதற்பதிப்பு 1943 — சொல் 654.

12. மேற்படி — தேவாரப்பதிகங்கள்: பா: 1975, 313, 2555, 450, 574, 3022
1245, 413:

13. மேற்படி — தேவாரப்பதிகங்கள்: பா. 82, 589, 1303, 609, 790, 2016,
3021, 837, 990, 2072, 742.

14. மேற்படி — தேவாரப்பதிகங்கள்: பா: 1673, 1673, 1980, 2603, 1073, 1673.

15. மேற்படி — தேவாரப்பதிகங்கள், பா: 2402, 1459.

16. (A) மேற்படி — தேவாரப்பதிகங்கள்: பா. 3052:
(B) பா: 499, 569, 265, 1820, 1039 முதலியன.

17. மேற்படி — தேவாரப்பதிகங்கள். பா. 207, 265, 229, 553, 756, 306,
2194, 341, 238, 2194 முதலியன.

18. மேற்படி — திருக்குறள் கழகப் பதிப்பு: குறள். 24:

19. திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள் — சைவசித்தாந்த மகாசமாசம் முதற்பதிப்பு 1931 பக். 409;

20. திருநாவுக்கரசர் தேவாரப்பதிகங்கள் — மேற்படி பதிப்பு பா; 510.

21. சீவகசிந்தாமணி; "ஆடல் தொட்டிமை உருவம்" பா; 1255.
"தொட்டிமை உடைய வீணை" பா. 2047.

பெருங்கதை. "காபத்துத் தொட்டிமை கலந்த தூசு"
உஞ்சைக் காண்டம் — 508.

22. மேற்படி பதிப்பு பா; 2174

23. மேற்படி பதிப்பு பா; 1456

24. மேற்படி பதிப்பு பா. 913

25. தேவார ஒளிநெறி — அப்பர்(க) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1960 பக்; 70

26. மேற்படி பதிப்பு பதிகம்; 284

27. மேற்படி பதிப்பு பா; 2803

28. பார்க்க "ஆலவாய் என்னும் பெயர் வழக்கு" கட்டுரை —
சொ; சிங்காரவேலன் — "ஞானசம்பந்தம்" 1965

---

மாநுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயத்(து)
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காகவன்றே
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணராரந்தோ.

— சித்தியார்.

உ
ஓம்

# உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கும்பாபிஷேக

## *வாழ்த்துப்பா*

**நீர்வையூர் பண்டிதர் நீ. சி. முருகேசு அவர்கள்**

சொல்லியவை

### *வெண்பா*

வாழி ! தமிழ்நாடு வாழி ! உயருரும்பை
வாழி ! கரு ணாகரனார் மாண் தலமே ! — வாழியவே !
இன்றுசெயும் கும்பாபி ஷேக இயல்கருமம்
நன்றுறவே வாழ்க ! நயந்து.

### *விருத்தப்பா*

தூயமறை முடிபுணரா ஞானத்தின் திருவுருவே !
தூமறைகள் போற்றுகின்ற எங்களுயர் மணியே !
ஆயகலை பலவுக்கும் மேலான அருமணியே !
ஆமயத்துள் ஒளிருகின்ற அற்புதனே ! ஐங்கரனே !
மேயஇருள் தனைப்போக்கும் மிகுஞான நல்விளக்கே !
மேதினியோர் போற்றுகின்ற மிகுசைவ முதற்பொருளே !
ஆயபுகழ் உரும்பைதனில் அமர்கருணா கரக்கன்றே
அடியேங்கள் போற்றுகிறோம் அவனியெலாம் வாழியவே !

உரியமறை யாகமங்கள் உலகமெலாம் மிகஒலிக்க
உம்பர்சொரி மாமலர்கள் மணம்வீசிப் பரவியிட
பிரியமொழி பேசியடி யார்கூட்டம் பெரிதொலிக்க
பேரானந் தம்கொண்டு அன்பரவர் நடமாட
அரியயனார்க் கெட்டாத அத்திமுகப் பேராளா !
அரியகும் பாபிடேகம் கண்டயர்ந்து களிகூர்ந்தேம்
பெரியசெல்வ மெமக்கீந்து பெட்புடனே வாழவைப்பாய் !
பேராத ரக்கருணா கரக்கன்றே வாழியவே !

ஓங்கார வடிவாகி உயர்கின்ற மெய்ப்பொருளே !
உள்ளூறு மமிர்தத்தின் உயர்மருந்தே கற்பகமே !
ஆங்கால மத்தனையும் அருகிருந்து அறிவூட்டும்
அற்புதனே ! கருணா கரனென்னும் அருமணியே !
பாங்காகக் கும்பாபி ஷேகத்தைப் பார்த்துயர்ந்தேம்
பங்காளன் திருக்குமரா ! பண்ணியம்சேர் திருக்கரத்தாய் !
நீங்காது போற்றுகிறோம் நீளுரும்பை தனிலமர்ந்து
நித்தமெமக் கருள்தருவாய் ! நீற்றையணி யடியவர்க்கே !

உ

கருணாகரன் துணை

# உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் வரலாறும் மகத்துவமும்

( திரு. அ. பஞ்சாட்சரம் )

*அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த*
*தொல்லைபோம் போகாத்துயரம் போம் — நல்ல*
*குணமதிகமாம் கருணைக கோபுரத்துண் மேவும்*
*கணபதியைக் கைதொழுதக்கால்.*

ஓங்கார மூர்த்தியாகிய விநாயகப் பெருமானின் திருப்பாதங்களை நினைத்துக் கைகூப்பித் தொழுதால், துன்பம், தீவினை, தாய்வழித் தொல்லை, நீங்காத துயரம் இவைகள் யாவும் நீங்கி நன்மை யதிகமாம். தொழுவார் துயர் நீக்கும் சர்வவல்லமையும் பொருந்திய உரும்பராய் பரத்தைப்புலக் கருணாகரப் பிள்ளையாரைக் கைதொழும் அடியார்களது துன்பம் யாவும் பகலவனைக் கண்ட பனி போலப் பறந்தோடிவிடும். நல்ல வரங்களும் கல்விப் பெருக்கும் சித்திக்கும்;

*' நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்*
*கற்குஞ் சரக்கன்று காண்.'*

என்ற உமாபதியார் வாக்கு நன்கு சிந்திக்க வேண்டியது. நினைப்பவர் மனம் கோயிலாய்க் கொள்ளும் விக்கினேஸ்வரப் பெருமான் திருவருள் ஒருவருக்குக் கைகூடுமானால், அவருக்கு எவ்விதத் துன்பங்களும் இல்லையாம்.

*'எப்போ தகத்தும் நினைவார்க் கிடரில்லைக்*
*கைப்போ தகத்தின் கழல்.'*

இறைவனின் அளவு கடந்த ஆற்றல்களில் அடியார்களின் இடையூறை அகற்றி ஆளும் ஆற்றலும் ஒன்றாகும். இவ்வாற்றல் மிக்கிருப்பவரே விக்கினேஸ்வரன். தனக்கு மேலே ஒரு தலைவர் இல்லாத பெருமையை யுடையவராதலின் விநாயகக் கடவுள் என்றும் பெயர் பெறுகிறார். உரும்பராய் கருணாகரப் பிள்ளையாரும் தமக்கு மேலே ஒரு தலைவரின்றி ஆன்ம கோடிகளின் இடையூறுகளைப் போக்கி இரட்சிக்கின்றார்.

## ஆலய வரலாறு

பல்வகைச் செல்வங்களும் மலிந்து விளங்கும் உரும்பராய்ப் பதியின் கற்பகமெனக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றார் கருணாகரப் பிள்ளையார். கருணாகர ஐயர் என்பவரால் பூசிக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வந்தமையால் கருணாகரப் பிள்ளையார் என்ற பெயர் வந்ததென்பர் பெரியோர்.

உரும்பராய்ப் பதியின் மேற்கு எல்லையில் சைவாசாரம் மிக்கவர்களும், விருந்தோம்பும் சிறப்பை இயல்பாகப் பொருந்தியவர்களும், இசை வல்லுநர்களும் சிறந்து நிறைந்து விளங்கும் இணுவிலம்பதியின் கிழக்கு எல்லையில் மருத

நிலங்களாலும் சோலைகளாலும் சூழப்பட்டு அமைந்திருக்கிறது கருணாகரப் பிள்ளையார் ஆலயம். ஆலயம் இருக்கும் குறிச்சி பரத்தைப்புலம் எனப்படும்; எனவே, உரும்பராய் பரத்தைப்புலக் கருணாகரப் பிள்ளையார் என்னும் பெயர் சிறப்பாக வழங்கப்படலாயிற்று.

யாழ்ப்பாணத்தை அரசு புரிந்த தமிழ் அரசனான விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி காலத்திற்றோன்றிய பூர்வ ஆலயங்களில் இவ்வாலயமும் ஒன்று என்று ஆராச்சியாளர்கள் கூறுவர். பலவித மரங்களும் அடர்ந்து சூழ்ந்து இருந்த இவ்விடத்தில் ஓர் அரச மரத்தின் கீழ் ஒரு பிள்ளையார் இலிங்கம் இருந்ததாகவும், அது தோன்றிய காலம் எவருக்கும் தெரியாதென்றும் கூறுவர்.

பாட்டசாரிகளும் கிராமவாசிகளும் இந்த இலிங்கத்தைப் பூசித்து வழிபட்டனரென்றும், அந்த வழியால் ஆசிரய பரிவர்த்தனஞ் செய்து வந்தவரான கூழங்கைச் சக்கரவர்த்தி இலிங்கத்தையும் எழில் நிறைந்த காட்சிகளையும் கண்டு அந்த இலிங்கத்தைப் பூசித்துப் பெரும் பேறு பெற்றாரென்றும், அதனால் பெரு மகிழ்ச்சியுடையவராய்ச் செங்கற்களால் அவ்விடத்தில் ஓர் ஆலயத்தை அமைத்தாரென்றும், செங்கற்களால் ஆன ஆலயம் ஒல்லாந்தரால் தகர்க்கப்பட்டதென்றும், பின் குழைமண்கொண்டு கருணாகரர் என்னும் பெயருடைய ஐயரவர்கள் அதனைப் புதுக்கி அமைத்தார் என்றும் கர்ண பரம்பரையாய்ப் பேசப்பட்டு வருகிறது.

ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலயத்துக்கும் கருணாகரத் தொண்டைமானுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டென்றும், மிகமிகப் பழமையான ஆலயம் இது என்றுங் கூறுவர்.

## அந்தணர் பரம்பரை

கருணாகர ஐயர், பரம ஐயர், அப்புக்குட்டி ஐயர் முதலானோர் இவ்வாலய வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தார்கள். பிரமஸ்ரீ அப்புக்குட்டி ஐயர் அவர்கள் காலத்தில் மகாமண்டபம், நிருத்தமண்டபம், தம்பமண்டபம் என்பன அமைக்கப்பட்டன. அக்காலங்களிலும் நித்திய நைமித்திக பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. *1910* ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20-ம் தேதி உரும்பராய்ப் பெரியாரும், பிரபல வைத்தியருமான வயிரவநாதர் வல்லிபுரம் என்பவர் கொடிஸ்தம்பம் ஒன்றினைச் செய்து கொடுத்ததுடன், விழாவையுமேற்று நடத்தி வந்தார். அன்று தொடக்கம் ஆவணிச் சஷ்டியில் துவஜாரோகணத்துடன் விழா ஆரம்பமாகி மகோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.



## பொற்காலம்

அப்புக்குட்டி ஐயரவர்களது சிரேட்ட புத்திரரே வைத்தீசுவரக் குருக்கள் (சின்னையா) அவர்கள். உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய வளர்ச்சியில்

பிரமஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் காலம் பொற்காலமாகும். பெரிய நீதிமானுன வைத்தீசுவரக் குருக்கள் சிறந்த கல்விமானுமாவர். வேதங்கள், ஆகமங்கள், புராணங்களை நன்கு கற்று, ஆசார ஒழுக்கங்களில் உயர்ந்தவராய் அந்தணர்க் கரசனென வாழ்ந்தார்கள். மறந்தும் பிறர்க்குக் கேடு எண்ணுத மாண்பினர். புராண படனங்களிற் பங்குபற்றி வாசிக்கும்போதும், உரை விளக்கம் செய்யும் போதும் அறிஞர்களையெல்லாம் அப்படியே கொள்ளை கொண்டுவிடுவார். குருக்கள் அவர்கள் வாசிக்கும்போதும் உரை விளக்கம் செய்யும்போதும் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையவர்களும், நாவலர் பெருமானும் நினைவுக்கு வருவார்கள். எத்துணைக் காலம் திருப்பித் திருப்பிப் படிக்கினும், கேட்கினும் எட்டுணையேனும் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அத்தியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழாகிய கந்தபுராண சமுத்திரத்தில் மூழ்கித் திளைத்தவர்களே திரு. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள்.

சாதிமானும் நீதிமானுமான ஐயரவர்கள் தமது உடல், பொருள், ஆவியைக் கருணாகரப் பிள்ளையார் ஆலய வளர்ச்சிக்கே அர்ப்பணஞ் செய்தார்கள். எடுத்த காரியங்களைச் சிறப்பாகவும், சிரமமின்றியும், விரைவாகவுஞ் செய்யும் தனியாற் றல்கள் குருக்களவர்களோடு கூடிப் பிறந்தவை. வைத்தீசுவரக் குருக்களவர்கள் விட்ட ஒவ்வொரு மூச்சும் கருணாகரப் பிள்ளையார் ஆலய வளர்ச்சிக்கென விட்ட மூச்சாகவே இருக்கும். இவரது காலத்தில் வசந்த மண்டபக் கொட்டகை, தம் பக் கொட்டகை முதலிய திருப்பணிகள் நிறைவேறுதற்கும், பெறுமதியும் பேரழ கும் வாய்ந்த சித்திரத்தேர் உருவாதற்கும் காரணமாயிருந்தார்கள். திரு. வைத் தீசுவரக் குருக்களவர்களது காலம் உண்மையிலேயே பொற்காலம்தான். இசை, ஒருவரின் உள்ளத்தை எவ்வாறு தூய்மை செய்யுமோ, அதுபோல இசைமேதை யான ஸ்ரீ வைத்தீசுவரக் குருக்களவர்களின் நற்குண நற்செயல்கள் அடியார் களின் உள்ளத்தை அப்படியே உருக்கிவிடுவன. அவரது இடம் எவராலும் நிரப்ப முடியாத சிறப்பு வாய்ந்த தனியிடம். அவர் மனிதரில் தேவர்.

## அற்புதங்கள்

1. கருணாகரப் பெருமானுக்கு அர்ச்சனை செய்துவந்த பரமையர் சிவபத மடைந்த பின்னர், ஐயரவர்களது பத்தினியார் கருணாகரப் பெருமானுக்குத் தம் குறைகளை முறைப்பட்டு வந்தார். ஒருநாள் ஆலயக் கதவு திடீரெனத் திறக்கப் பட்டதாம். பெரியவர் ஒருவர் தோன்றி, 'நீ ஒன்றுக்கும் பயப்படாதே!' என்று ஆறுதல் கூறினாராம்.

2. முற்காலத்தில் இவ்வாலயம் டச்சுக்காரராற் சிதைக்கப்பட்டது. மூல மூர்த்தியைத் தூக்கிச் சென்ற சிலருக்குத் தூக்கும் சக்தி குறையவே, அவ்விடத்தி லேயே வைத்து விட்டுப் போனார்கள். நிலத்திலே புதையுண்டது அவ்விக்கிரகம். நிலத்தை யகழும்போது விக்கிரகத்தில் ஆயுதம் பட்ட இடத்தில் இருந்து இரத் தம் பீறிட்டுப் பாயவே, தொழிலாளர்கள் தம் கவனக்குறைவை இறைவனிடம் கூறி மன்னிப்புக் கேட்டதாயும் கர்ண பரம்பரைக் கதையுண்டு.

3. ஈழநன்னாட்டிற் பல சிவாலயங்கள் பிரசித்தி பெற்றிருந்தபோதும் சாசனங்களோ, கல்வெட்டுக்களோ பல இடங்களில் இல்லை. உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் பழமைவாய்ந்த கல்வெட்டு உண்டு. இக் கல்வெட்டைப் பல ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து எழுதியுள்ளார்கள். இலங் கைப் பல்கலைக் கழக சரித்திரத்துறைச் சிரேட்ட விரிவுரையாளர் கலாநிதி

திரு. கா. இந்திரபாலா அவர்கள் கல்வெட்டு முழுவதையும் நன்கு பார்வையிட்டு, எழுத்துக்களைப் படியெடுத்துத் தமது கருத்தினைத் தெரிவித்துள்ளார். இக் கல் வெட்டு சரித்திரப் பிரசித்திவாய்ந்த உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் ஆல யத்தின் பழைமைக்குத் தக்கதொரு சான்ருய் விளங்குகின்றது.

4. கருணாகரப் பிள்ளையாரின் சிறப்புப் பற்றிப் புலவர்கள் பலர் பதிகங்கள் பாடியுள்ளனர். நீர்வேலி, இணுவில் தொடர்புடைய சிதம்பரநாதப் புலவர், ஆசுகவி (கல்லடி) வேலுப்பிள்ளை முதலியோர்கள் பாடல்களை இன்னும் யாம் பெறக்கூடியதாயுண்டு. (கல்லடி) வேலுப்பிள்ளை அவர்கள் தமது நூலின் காப்பா கப்பாடிய செய்யுள்களில் ஒன்று வருமாறு.

சுரும்புமுல்லை தென்னை கமுகமுயர் சேத்ர
மிருஞ்சித் திரவில் லினிய — சுரும்பரிசை
பாடும்புர மும்பைப் பஞ்சாக் கரபரன்மேற்
பாடுந்துதி மாலைப் பா.

என்று பாடி மேலே செல்கின்ருர்.

பொன்னே தினங்கமழ் பூவே விசும்பிற் பொலிந்தவிரு
மின்னே யடிய ருளவிளக் கேவினை வீக்கவந்த
அன்னே தந்தாயென் றுனைப்பணிவார்க் கருள்புரியும்
மன்னுர் பிறருரும் பைப்பரத் தைப்புல மாமணியே.

இவ்வாறு ஆசுகவி வேலுப்பிள்ளை யவர்களது பாடல்கள் ஒவ்வொன்றும் சிறந்தனவாயும், சிலேடைக் கருத்துநடை யுடையனவாயும் திகழ்கின்றன. ஆசுகவி யவர்கள் கருணாகரப் பெருமான் மீது கீர்த்தனங்களும் பாடியுள்ளார்.

## உற்சவச் சிறப்பு

ஆவணி பூர்வபக்கச் சதுர்த்தியை முதலாகக் கொண்டு, ஆவணிச் சஷ்டியில் துவஜாரோகணமாகிப் பத்து நாட்கள் மகோற்சவம் நடைபெறும். அடியார் களுக்கு ஆனந்தமான காலம். கருணாகரன் கருணை மழை பொழியும் நாட்கள். அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களைப் பூசைகள் செய்வித்தும், அங்கப் பிரதக்ஷணம் செய்தும், விரதமிருந்தும், காவடி முதலியன எடுத்தும் நிறைவேற்றுவர். மெய்யடியார்கள் எங்கே நினைப்பினும் அங்கே வந்து எதிர் நிற்பார் கருணாகரப் பிள்ளையார். அவரருளை வேண்டி உரும்பராய், இணுவில், கோண்டாவில் உட்படப் பல பதி மக்களும் ஓடோடி வருவர். ஆலயத்துக்கு அயலில் உள்ள கிணற்றில் நீராடி, தோய்த்துலர்ந்த வஸ்திரத்தைத் தரித்தவாறு வழிபடுவதில் அடியார்களுக்கு ஒரு பேரின்பம். அருட் கருணாநிதியாகிய கருணா கரன், தம்மை வழிபடுபவர்களுக்குக் கருணை மழை பொழிந்து கொண்டேயிருக் கின்ற காட்சியை இரதோற்சவ விழா காட்டுவதாயமையும். சித்திர வேலைப்பா டமைந்த சுந்தரத் தேரில் கருணாகரப் பெருமான் ஆரோகணித்து வீதிவலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். இக்காட்சிகளைக் கண்டவர் களும் காண இருப்பவர்களும் புண்ணியசாலிகளே.

## சிவநாமமும் திருவிளக்கேற்றலும்

சமீப காலமாக ஆலயங்களிற் கூட்டுப்பிரார்த்தனை யென்றும், பஜனைகள் என்றும் நடைபெறுகின்றன. ஆயின், இத்தொண்டு மெத்தப் பழங்காலத்திலேயே — அதாவது அரை நூற்ருண்டுக்கு முன்னரேயே கருணாகரப் பிள்ளையார் கோயிலில் ஆரம்பமாகிவிட்டது. திரு. த. முருகேசு அவர்கள் அன்றெடுத்த முயற்சி இன்


றும் நடைபெற்று வருகின்றது. வெள்ளி தோறும் மாலை வேளைகளில் கருணாகரப் பெருமானுக்குப் பூசையாவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன் இச்சிவநாம ஒலி ஆரம்பித்து நடைபெறும். தெய்வாநுக்கிரகத்தை வேண்டி நடைபெறும் சிவ நாம பஜனையில் ஈடுபட்டோர் அனைவரும், கருணாகரன் திருவருளால் சீரும் திருவும் பொலிந்து விளங்குகின்றனர். இச் சிவநாம பஜனை வெள்ளி தோறுமன்றி, மகோற்சவ காலங்களிலும் இடம்பெறும்; அடுத்துள்ள சிதம்பர சுப்பிரமணியர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமைதோறும், பர்வத பத்தினி அம்மன் கோயிலில் திங்கட் கிழமைதோறும் இச் சிவநாம பஜனை பக்திசிரத்தையுடன் நடத்தப்பட்டு வருகின்றது: அத்துடன் இவ் வாலயங்களில் திருவிளக்கேற்றும் நிகழ்ச்சியும் மறக்க முடியாத ஒன்றாகும். மூன்று ஆலயங்களிலும் திருவிளக்கிடும் பணி நீண்ட காலமாகத் தினசரி முட்டின்றி நடைபெற்று வருகின்றது. எந்தப் பஞ்சமும் இத் திருப்பணியைத் தோல்வியடையச் செய்யவில்லை.

## திருப்பணிச் சபை


24-5-59 இல் திருப்பணிச்சபை இராசவாசல் முதலியார் திரு. வ. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் முக்கிய நோக்கம், அன்பர்களது உதவியுடன் ஆலயத்தில் திருப்பணிகளை நிறைவேற்றுவதே. இத் திருப்பணிச்சபை ஆரம்பத்திலிருந்து ஆலயத்திற் சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்குக் குறையாத திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளது. திரு. வைத்தீசுவரக் குருக்களவர்கள் ஊக்கத்தினால் உண்டாக்கப்பட்ட திருப்பணிச்சபை, தம்பக் கொட்டகை, வசந்த மண்டப வாயிற் கொட்டகை, யாக வாசற் கொட்டகையை அமைக்க ஆரம்பத்தில் முயற்சி செய்தது. திருத்தேரைப் பாதுகாக்கத் தேர் மண்டபத்தைக் கட்டி ஒப்பேற்றியது. இப்பொழுது தெற்கு வீதிக்கொட்டகை, சுந்தர விமானத் திருத்தம், மகாமண்டபத்துக்குப் பிளேற் போடுதல், மின்சார இணைப்பு உட்படப் பல திருப்பணிகளை நிறைவேற்றி, மகாகும்பாஷேகமும் நிகழத் தன்னாலான முயற்சிகளும் செய்தது. திருப்பணிச்சபை தொடர்ந்தும் இப் பணியில் ஈடுபடும். திருப்பணிச் சபையாரின் நன்முயற்சிகளுக்கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருபவர் பிரதம குரு பிரமஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்களவர்கள். அவரும் அவரது குடும்பத்தாரும் செய்துவரும் தொண்டுகள் மகத்தானவை. முயற்சி இருந்தாலும், அம்முயற்சிகள் தடைப்படாமல் கண்மூடி விழிப்பதற்குள் கருணாகரனின் திருப்பணிகள் இனிது நிறைவேற மனமுவந்த நன்கொடைகளை வழங்கிய ஊர்ப் பிரமுகர்களையும், மலாய் நாட்டு அன்பர்களையும் அபிமானிகளையும் புகழ்வதற்கு விரும்பினால், அவ்வார்த்தைகளில் அவர்கள் புகழ் ஒருபோதும் அடங்காது. இச்சபையின் தற்போதைய தலைவரான திரு. கா. தம்பு அவர்களும், அதற்கு முன் தலைவராயிருந்த வழக்கறிஞர் திரு. ஆ. தனபாலசிங்கம் அவர்களும், இணைக்காரியதரிசிகளில் ஒருவரான ஆசிரியர் திரு. க. பாலசுப்பிரமணியமும் செய்த சேவைகளும் உயர்ந்தவை. சபையின் அச்சாணியாய் இருந்து, தனாதிகாரி என்ற தகுதியுடன் தம் பணியைச் செய்து வருபவர் பிரதம கணக்காளர் திரு. மு. பசுபதி அவர்கள். எல்லோருடைய நல்ல ஒத்துழைப்பே ஆலயத்தின் சமீப கால வளர்ச்சிக்கு உதவியாயுள்ளன. எல்லோருக்கும் கருணாகரன் திருவருள் நிச்சயம் கிடைக்கும். இதற்கையமில்லை.

தருக்குற்றேறித் திரியாமல் தனத்தைத் தேடிப் புதையாதுன்
திருப்பொற்பாதம் மறவாமல் செகத்திற் பாடுற் றுழலாமல்
ஒருத்தர்க்கேதம் புரியாமல் உறப்பெட் டோதிக் களியாமல்
புருச்சற் போகந் தருவாயே பரத்தைப் புலத்துப் பெருமானே.


கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்.



10-9-1965 இல் நடைபெற்ற தேர்மண்டபத் திறப்புவிழா. பிரமுகர்கள் ஊர்வலமாக வருகிறார்கள்.



பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சிறப்புரை நிகழ்த்துகின்றார்.



திரு. அ. நல்லதம்பி அவர்கள் தேங்காய் உடைத்து ஆரம்பிக்கிறார்



திருத்தேர் மண்டபமும், கருணாகரப்பிள்ளையார் சித்திரத்தேரில் எழுந்தருளி வரும் காட்சியும்.

உ

கணபதி துணை

# உரும்பராய் கருணாகரப் பிள்ளையார்

# திருவூஞ்சல்

## காப்பு

### ஆசிரிய விருத்தம்

சீர்பூத்த ஈழமண் டலத்து மேய
திறம்பூத்த யாழ்ப்பாணத் துரும்பை தன்னிற்
பார்பூத்த பதிபரத்தைப் புலத்தில் நாளும்
பயன்பூக்குங் கருணாக ரேச ரான
நீர்பூத்த அத்திமுக நிமலர் மீது
நிலைபூத்த ஊஞ்சலிசை நெறியே பாட
நார்பூத்த பிரணவத்துட் பொருளாய் நண்ணும்
நலம் பூத்த ஐங்கரன்றாள் காப்ப தாமே.

## திருவூஞ்சல்

சீரோங்கு வேதங்கள் கால்க ளாகத்
திகழுமெழி லாகமங்கள் விட்ட மாக
வாரோங்கு பலகலைகள் வடங்க ளாக
மன்னுமுப நிடதங்கள் பலகை யாகப்
பேரோங்கு மந்திரங்கம் பலம தாகப்
பேசரிய பிரணவமே பீடமாகத்
தேரோங்கு வீதிபல திகழு ரும்பை
சேர்கருணா கரவீசர் ஆடி ரூஞ்சல்! 1.

செங்கதிரு மம்புலியுஞ் சேர வந்து
திகழ்கின்ற வெண்கொற்றக் குடைகள் தாங்க
தங்கொளிசேர் கவரிதனைக் காலோன் வீசத்
தயங்கால வட்டமதை வருணன் தாங்க
எங்குமுள தேவரெலா மிருக்கி யம்ப
ஏழிசைதும் புருநா ரதர்தாம் பாட
பொங்குதிரு வருள்பொழிய வுரும்பை மேவும்
புகழ்கருணா கரவீசர் ஆடி ரூஞ்சல்! 2.

பூதகணம் பலபலவும் புடையின் மேவப்
புண்ணியநன் முனிவோர்கள் புகழ்நின் றேத்த
கீதவிசைக் கருவிபல மீட்டு நல்ல
கீதமவை பலபலவுந் தேவர் பாட

நாதவொலி மிக்கெழுந்து நயந்து விம்ம
நாட்டியங்கள் தேவமாதர் நயந்தே யாட
வேதவொலி மிகுமுரும்பை மன்னி வாழும்
வெகு கருணு கரவீசர் ஆடீ ரூஞ்சல்! 3.

மறையாவு முணர்ந் தோனும் மாயன் தானும்
மற்றுள்ள தேவகணம் மருங்கு சூழக்
குறையாவு மில்லாத குபேரன் தானுங்
குலவுமிந் திரனேடு கும்பிட் டேத்தத்
தறைமேவு மடியார்கள் தமக்கு நல்ல
தண்ணருள்செய் துறைகின்ற தேவே யென்றும்
இறைமேவு மின்னருள்செய் துரும்பை மேவும்
இன்கருணு கரவீசர் ஆடீ ரூஞ்சல்! 4.

விண்ணேர் தம் முன்னேனே! வேத வித்தே!
விநாயகனே! அடியார்கள் வினைகளோடக்
கண்ணுக நின்றருளுங் கற்ப கம்மே!
கணபதியே! கயமுகனே! கருணை பூத்தே
மண்ணேர்கள் தாம்வாழ மண்ணில் வந்த
மறைப்பொருளே! விழுப்பொருளே! மருவும் நல்ல
தண்ணுருஞ் சோலைதிக ழுரும்பை மேவும்
தவகருணு கரவீசர் ஆடீ ரூஞ்சல்! 5.

ஓமெனுநற் பிரணவத்தி னுருவு தோன்ற
ஒளிதிகழு நீண்முடியி னெளியுந் தோன்ற
வாமமுறு மைந்துகர வண்மை தோன்ற
வளரொருநான் காயபுய வலிமை தோன்ற
தாமமுறு கௌத்துபநன் மணியுந் தோன்ற
தகுகுடநேர் திருவயிறு தானுந் தோன்ற
சேமமுறு திருவடியோ டுரும்பை மேவுந்
திருகருணு கரவீசர் ஆடீ ரூஞ்சல்! 6.

பத்தர்தமக் கருள்புரியும் பண்பு தோன்றப்
பரமர்திரு மகனுய பரமுந் தோன்றச்
சித்திபுத்தி தமை மணந்த தகவு தோன்றச்
சிந்திப்பார் வினை தீர்க்குஞ் சீர்மை தோன்ற
எத்திக்கி லுள்ளோரும் வணங்கல் தோன்ற
ஏழையோ முக்கருளுங் கருணை தோன்ற
முத்திபெற முயல்வோர்வா ழுரும்பை மேவும்
முதுகருணு கரவீசர் ஆடீ ரூஞ்சல்! 7.

அத்திமுகன் தனைக்காதி அமரர்க் கந்நாள்
அருள்சுரந்த திருவதன மசைந்தே யாட
எத்திசையும் புகழௌவை தனையெ டுத்தே
ஈசர்வாழ் கயிலைவிட்ட கரமு மாட
முத்தமிழா கரனுகு மகத்தி யற்கு
முன்நின்றே அருள்சுரந்த பதமு மாட
பத்தரவர் வாழுரும்பை தன்னின் மேவும்
பலகருணா கரவீசர் ஆடீ ரூஞ்சல்! 8.

போற்றரிய இந்திரற்கு அருள்செய் திட்ட
புகழுதிரு வடியவைகள் தாமு மாடச்
சாற்றரிய சதுர்செய்து கனிபெற் றிட்ட
தகைமைசெறி திருக்கரங்கள் தாமு மாட
நாற்றிசையு மருளீயும் நயனந் தாங்கும்
நல்லதிரு முகமதியு மசைந்தே யாட
போற்றிசெயு மடியார்வா ழுரும்பை மேவும்
பொற்கருணா கரவீசர் ஆடீ ரூஞ்சல்! 9.

ஏகதந்த! விநாயகரே! ஆடீ ரூஞ்சல்!
ஏரம்ப மூர்த்தியே! ஆடீ ரூஞ்சல்!
போகமின்ப மளிப்பவரே! ஆடீ ரூஞ்சல்!
புகலளிக்கும் புழைக்கையரே! ஆடீ ரூஞ்சல்!
மோகமெலாந் தீர்ப்பவரே! ஆடீ ரூஞ்சல்!
முத்திதனை அளிப்பவரே! ஆடீ ரூஞ்சல்!
மாகணத்து நாயகரே! ஆடீ ரூஞ்சல்!
மன்கருணா கரவீசர் ஆடீ ரூஞ்சல்! 10.

## வாழி

உலகமெலாம் அறநெறிகள் வாழி! வாழி!!
ஓதரிய மறையாவும் வாழி! வாழி!!
அலகிலா ஆகமங்கள் வாழி! வாழி!!
அற்புதமாந் தமிழ் மறைகள் வாழி! வாழி!!
நிலவடியார் கூட்டங்கள் வாழி! வாழி!!
நீடியநல் லான்பூதி வாழி! வாழி!!
குலவரசர் நீதியொடு வாழி! வாழி!!
கோக்கருணா கரவீசர் வாழி! வாழி!!

## எச்சரீக்கை

மூவா முதலே முக்கண்ணா! எச்சரீக்கை!
மூவேழுல கெங்குந் தொழு முதலே! எச்சரீக்கை!
பாவாயதன் பயனுயுறு பண்பே! எச்சரீக்கை!
பாதந்தொழு மடியார்க்கருள் பரனே! எச்சரீக்கை!

காவாயெனக் கழல்தாழ்பவர்க் கருள்வாய் ! எச்சரீக்கை !
கந்தன்முனம் வந்தவருட் களிறே ! எச்சரீக்கை !
நாவாரநின் றேத்தும்மவர் நம்பா ! எச்சரீக்கை !
நற்கருணு கரவீசர் அருளே ! எச்சரீக்கை !

## பராக்கு

சீர்தங்கு மாகுலூர் செல்வா ! பராக்கு !
செய்யதிருச் சீறடிச் செல்வா ! பராக்கு !
பேர்தங்கு மைந்துகரப் பெருமான் ! பராக்கு !
பேசரிய தத்துவப் பெருமான் ! பராக்கு !
கூர்தங்கு வேலற்கு மூத்தோய் ! பராக்கு !
கொஞ்சுமொழி யுமையாட்கு மூத்தோய் ! பராக்கு !
ஊர்தங்கு முரும்பைநக ருறைவோய் ! பராக்கு !
உளகருணு கரவீசா யுறைவோய் ! பராக்கு !

## லாலி

மூக்கணற்கு மூத்தவனே ! லாலி ! சுபலாலி !
முதுமறைக்கு முன்னோனே ! லாலி ! சுபலாலி !
விக்கினங்கள் தீர்ப்பவனே ! லாலி ! சுபலாலி !
வேண்டுபவர்க் கருள்பவனே ! லாலி ! சுபலாலி !
தொக்ககணத் திறையவனே ! லாலி ! சுபலாலி !
தோத்தரித்தோர் தம்மனத்தோய் ! லாலி ! சுபலாலி !
எக்கணமு முரும்பையோய் ! லாலி ! சுபலாலி !
எங்கருணு கரவீசர் ! லாலி ! சுபலாலி !

## மங்களம்

ஓங்கார ரூபனுக்கு ஜெயமங்களம் — சிவ
உமையாள்தன் பாலனுக்குச் சுபமங்களம்......ஓங்கார

உலகமெலா மான வர்க்கும்
உணர்வரிய மூல னுக்கும்
அலகில்புகழ் நாய கிக்கும்
அருளாயு றைப வட்கும்......ஓங்கார
ஐந்துகரத் தைய ருக்கும்
ஆறுமுகத் தைய ருக்கும்
சுந்தரநற் பைர வற்கும்
தூயவீர பத்தி ரற்கும்......ஓங்கார

மங்களம்! ஜெய மங்களம்! — மங்களம்! சுபமங்களம்!
மங்களம் ! மங்களம் !! மங்களம் !!!

உ
சிவமயம்

# மனப்பூர்வமான நன்றி

கல்லா னிழல்மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே.

— சிவஞான போதம்.

பிரணவ வடிவினராய உரும்பராய் கருணாகரப் பிள்ளையாரின் திருக்கோயிலிற் செய்யவேண்டிய திருப்பணிகளை நிறைவு செய்து, நித்திய நைமித்திக பூசையுடன் மகோற்சவங்களையும் சிறப்புற நடாத்த வேண்டுமென்று விரும்பினர். குருக்களவர்களும் அவ்வாறே விரும்பினார்கள். இதை முன்னிட்டு இந்த ஆண்டு தைப்பூச நன்னாளில் திருப்பணிச்சபை கூடிப் பல விஷயங்களையும் ஆராய்ந்தது. கர்ப்பக் கிரகம் திருத்தஞ் செய்தல், மின்சார இணைப்பைப் பெறுதல், உள்வீதியில் தெற்குப்புறமாய்க் கொட்டகை அமைத்தல் பற்றிய ஆராய்ச்சிகள் இடம் பெற்றன. கருணாகரனைக் கனவிலும் நனவிலும் மறவாது வழிபட்டுவரும் மலாயன் பென்சனர் திரு. கா. தம்பு அவர்கள் இத்திருப்பணிகளுக்கு முதன் முதற் கைவிசேஷமாய் நன்கொடை வழங்கி ஆரம்பித்து வைத்தார்கள். இந்த நன்முயற்சியைச் சைவமெய்யன்பர்களாயுள்ள ஊரவர்களும், அயற் கிராமத்தைச் சேர்ந்தவர்களும், மலாய் நாட்டு அன்பர்களும் நன்கு வரவேற்றதுடன் தமது தகுதிக்கேற்பப் பலவாறு உதவி புரிந்தனர். நம்மூர்ப் பெரியாரும், மலாய் நாட்டில் இப்பொழுது வசிப்பவரும், கருணாகரப் பெருமானில் முறுகிய பக்தியுடையவருமான திரு. மு. செல்லத்துரை அவர்கள் இத்திருப்பணி விஷயங்களைக் கேள்வியுற்றதும் "பிள்ளையார் இருக்கும் மண்டபத்தைத் திருத்த ஐயாயிரம் ரூபா அனுப்பியுள்ளேன். இன்னும் தேவையானால் தெரிவியுங்கள்" என்றார்கள். பணத்தையும் அனுப்பியதுடன், "சரித்திரப் பிரசித்தி வாய்ந்த கருணாகரப் பிள்ளையாரின் திருப்பணிகள் இனிது நிறைவேறும். கருணாகரன் அருள் செய்வார்" என்று ஆசியும் கூறி எழுதினார்கள். இவர் போலவே அன்பர்கள் எல்லோரும் பொருள் உதவி புரிந்தார்கள். என்ன மாதிரி இந்தத் திருப்பணிகள் நிறைவேறப் போகின்றன? இந்தக் கஷ்ட காலத்தில் எப்படிப் பொருள் சேர்ப்பது என்று ஏங்கி இருந்த திருப்பணிச்சபையை நோக்கித் திருப்பணி நன்கொடைகள் உலகின் பல பாகங்களில் இருந்தும் வந்து கொண்டிருந்தன. இந்த நன்கொடைகளின் பயனே கருணாகரப் பெருமானுக்கு இன்று நடைபெற்ற மகாகும்பாபிஷேகமாகும்.

கட்டடத்துக்கு வேண்டிய பொருள்களை முட்டின்றி உடனுக்குடன் பெற உத்தியோக ரீதியில் உதவி புரிந்த உரும்பராய்க் கிராம சேவையாளர் திரு. அ. த. கிருஷ்ணராசா, வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை, வடபகுதி மரக் கூட்டுத்தாபன அத்தியட்சர் திரு. ஆர். பொன்னம்பலம் ஆகியோரின் சேவை மகத்தானவை.

ஆலயமணி படக்காட்சி மூலம் (16-6-73) திருப்பணிக்கு நிதி சேர்க்க இணுவில் நியூ காலிங்கன் படமாளிகை இயக்குநர் குழுவைச் சேர்ந்தவர்கள்,

சினிமாஸ் ஸ்தாபனத்தினர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பேராதரவு நல்கினர்.

ஆலயத்தில் ஒரே நேரத்தில் பல திருப்பணிகளைச் செய்ய வேண்டி ஏற்பட்டது; சிற்ப வேலைகள், மர வேலைகள், கட்டட வேலைகள், இரும்பு வேலைகள் யாவும் துரிதமாக நடைபெற்றன. தொழிலாளர்கள் யாவரும் ஆலயத்தில் தொண்டுகள் பல புரிந்தனர். இவர்களுக்குத் தலைமை தாங்கி நடாத்திய திருவாளர்கள் வி. நாகமுத்து, கி. ஈசுரபாதம், அ. நாகலிங்கம், ம. பொன்னையா, எஸ். ஆறுமுகம் ஆகியோர்கள் தங்கள் தங்கள் கடமைகளை இழுபறிப்படாமல் நன்ருகச் செய்து முடித்தனர்;

மின்னிணைப்பை ஏற்படுத்துவதற்கு உரும்பராய் ஊரெழு பட்டணசபைத் தலைவரும் ஊழியர்களும், யாழ்ப்பாணம் முருகன் எலெக்றிக்கல் கம்பனியாரும் பக்கபலமாய் இருந்தனர்.

கும்பாபிஷேகம் நடைபெறப் போகிறதே, இதையொட்டிக் கும்பாபிஷேக மலர் ஒன்றை வெளியிடுங்கள் என்று கேட்டார்கள் அன்பர்கள்: திருப்பணிச் சபையும் விரும்பியது. எல்லோர்க்கும் எப்பொழுதும் இனியவரான ஸ்ரீ சண்முகநாத அச்சக முதல்வர் திரு. சி. ச. குமாரசுவாமி அவர்கள் மலிவாக அச்சிட்டுதவ முன்வந்தார்கள். உரும்பராய் கருணாகரப் பிள்ளையாரையும் கோயிலையும் சூழலையும் அட்டைப்படமாகப் பார்த்து மகிழ, சித்திரத்தில் வடித்துக் கொடுத்தார் பிரமஸ்ரீ சு. ஜெகநாத சர்மா அவர்கள். மலருக்கு விஷயங்கள் தேவைப்பட்டன. பண்டிதமணி அவர்கள், ஸ்ரீ கி; வா; ஜ; அவர்கள், பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள், திருமுருககிருபானந்தவாரியார், தருமையாதீனம், காசி மடத்தலைவர்கள், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள், பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள், சாரதா உட்படப் பலரும் மலரை அலங்கரிக்க முன்வந்தார்கள். ஆலயத்திலுள்ள பழமை வாய்ந்த கல்வெட்டினை ஆராய்ந்து, அரியதொரு கட்டுரையை உதவி இருக்கிருர் கார்த்திகேசு இந்திரபாலா அவர்கள். மலர் பலவகையிலும் அழகுக்கு அழகு தர உழைத்தார் அன்பர் செ. தனபாலசிங்கன் அவர்கள். அன்பர்கள், அபிமானிகள், வியாபார நிலைய உரிமையாளர்கள் விளம்பரந் தந்து உதவினுர்கள். அன்பும் பண்பும் மிக்கவர்களான ஞானம்ஸ் ஸ்ருடியோ நிறுவனத்தினர் ஆலயக் காட்சிகளை புளொக்காக்கி அழகுறத் தந்தார்கள். பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டதுபோல மலரை அழகு படுத்தும் அட்டைப் படத்தை அழகிய வர்ணக் காட்சியில் தந்திருக்கிருர்கள் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர்.

நொடிப்பொழுதில் கருமங்கள் நிறைவேறியுள்ளன. யாவருக்கும் திருப்பணிச் சபையின் நன்றி. சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் எல்லாம் வல்லா கருணாகரப் பெருமான் திருவருள் சித்திப்பதாக. திருப்பணிச்சபையினர் என்னதான் செய்தாலும் ஊக்குவிக்க ஒருவர் வேண்டுமே! அவர்தான் மதிப்புக்குரிய குருக்கள் ஐயா பிரமஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள் அவர்கள். அவரும் அவரது புத்திரர்களும் செய்த தொண்டுகள் எல்லையில்லாதன. எழுதப்புகின், உரையே நீண்டோடிவிடும்.

குருக்கள் அவர்கள் மதிப்புக்குரிய ஏனைய குருக்கள்மாருடன் தொடர்பு கொண்டு கும்பாபிஷேகத்துக்கான கிரியைகளுக்கு வேண்டியன செய்தார்கள்.

**கருணாகரப் பெருமானின் குடமுழுக்கைச் சிறப்புற நடத்தி வைத்த சிவாசாரியர்கள் அனைவருக்கும் சபையாரின் பணிவன்புடன் கூடிய மனப்பூர்வமான நன்றி;**

**எல்லோரும் வாழ்க: இன்பமே சூழ்க:**

| | | |
|---|---|---|
| **கா. தம்பு** | **மு. பசுபதி** | **அ. பஞ்சாட்சரம்** |
| **(பென்சனர்)** | **(பிரதம கணக்காளர்)** | **க. பாலசுப்பிரமணியம்** |
| **தலைவர்** | **தனாதிகாரி** | **இணைக் காரியதரிசிகள்** |

**திருப்பணிச்சபை,**
**கருணாகரப் பிள்ளையார் கோயில்,**
**உரும்பராய்.**
**19-8-73**

## அருட் கருணாகரன்

பிரணவப் பொருளாய் முன்வந்துதித்த முதல்வன். பிணியினைத் தீர்த்து எமையாளும் ஐயன், உரும்பை நகரில் விரும்பியுறை அருட் கருணாகரன். கருணை மழை பொழியும் கற்பகம். பூர்வ ஜென்மத்திற் செய்த பயனால் கருணாகரனைக் குல தெய்வமாய்ப் பெற்றோம்.

**நினைந்துருகும் அடியாரை நைய வைப்பான்**
**நில்லாமே என் தீவினைகள் நீங்க வைப்பான்.**

எல்லாம் வல்லவராய் எம்மை நடத்திக் கொண்டிருக்கின்றார் கருணாகரப் பெருமான், அவரருளாலே அவரை வழிபட்டு உய்வோமாக.

— குணம்

சிறந்த போட்டோக்களுக்கு

↓

ஞானம்ஸ் ஸ்ரூடியோ

↓

புளொக்குகள் தயாரிப்பாளர்கள்

↓

# ஞானம்ஸ் ஸ்ரூடியோ,

மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7067

கிளை: ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.



16-6-73ஆம் திகதி திருப்பணி நிதியின் பொருட்டு இணுவில் நியூ காலிங்கன் தியேட்டரில் படக்காட்சிவிழா.

1. திருப்பணிச்சபை சார்பில் நன்றி தெரிவிக்கப்படுகிறது.

2, 3, 4, 5, 6. ஆலயமணி படக்காட்சிக்குத் திரளாக வந்த பெண்கள், ஆண்கள், பாடசாலை மாணவர்கள்.

அன்பளிப்பு

உமா ரான்ஸ்போட் சேர்விஸ்

விக்னேஸ்வரன் ஸ்ரோர்ஸ்

பலாலி வீதி, உரும்பராய்.

அன்பளிப்பு

யாழ்ப்பாணத்தில் உயர்தர பிடவை மாளிகை

**செ. காசிப்பிள்ளை அன் கோ.**

82, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 506

கிளை:

**சி. கே. பி.**

74, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

தனிப்பட்ட பாடங்களின் அறிவு ஒன்று சேரவேண்டுமா?

கலை, வர்த்தக, விஞ்ஞான, விசேட சிங்கள,
ஆங்கில, தமிழ் வகுப்புகளுக்கு

இன்றே சேர்ந்து படியுங்கள்.

குறைந்த கட்டணம்! சித்தி நிச்சயம்!

**போல்ரன் கல்வி நிலையம்**

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

அன்பளிப்பு

# கணேசன் ஸ்ரோர்ஸ்

157, மெயின் வீதி,

திவுலப்பிட்டி.

போன் : 895

உரிமை : க. தா. வேலுப்பிள்ளை

அழகிய

தங்கப்பவுண் நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

★

## எஸ். கே. எஸ். நகை மாளிகை

ஆர். ஜி. பில்டிங்,

கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்

புனராவர்த்தன மகா கும்பாபிஷேக மலருக்கு

ஸ்ரீமான் சுப்பிரமணியம் பொன்னையா

அவர்களின்

ஞாபகார்த்த அன்பளிப்பு

## சு. பொ. நடராசா

அண்ணா கோப்பித் தொழிற்சாலை,

இணுவில்.

SPACE DONATED BY

# K. T. Veluppillai Stores

**( 34 Years Experience in business )**

**VEYANGODA.**

*Phone :* 245

அன்பளிப்பு

# நியூ கிருபா ஸ்டோர்ஸ்

**236, பாங்ஷால் வீதி,**

கொழும்பு - 11.

எமது அன்பளிப்பு

# ஏ. கே. எஸ். அன் சன்ஸ்

கன்னாதிட்டி,

யாழ்ப்பாணம்.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்
புனராவர்த்தனம் செய்து
மஹா கும்பாபிஷேகம் செய்ய
அயராது அரும்பாடுபட்ட தொண்டர்களுக்கும், பெருங்குடி
மக்கட்கும் கருணாகரப் பிள்ளையார் மேலும் மேலும்
செல்வச் சிறப்பையும் பெருவாழ்வையும், பக்திப் பரவசம்
குன்றாதிருக்கவும் அருள்புரிய வேண்டுமென்று
பிரார்த்திக்கிறோம்.

லிங்கம் ஸ்டோர்ஸ்
15, காபோஸ் லேன்,
கொழும்பு - 11.

தொலைபேசி: 34697

WITH BEST COMPLIMENTS FROM

**Veyangoda Printers**

**Main Street,**

**VEYANGODA.**

எமது வாழ்த்துக்கள்

ஸ்ரீ லங்கா ஸ்டோர்ஸ்

296, 298, மெயின் வீதி,

நீர்கொழும்பு.

பாடசாலைப் புத்தகங்கள்

மற்றும் உபகரணங்களுக்கு

சிறந்த ஸ்தாபனம்

★

**தனலக்குமி புத்தகசாலை**

சுன்னுகம்

சிறந்த அச்சுவேலைகளுக்கு

★

**திருமகள் அழுத்தகம்**

சுன்னுகம்

அன்பளிப்பு

சிறந்த அச்சு வேலைகளுக்கு

★

குமரன் அச்சகம்

டாம் வீதி,

கொழும்பு.

போன்: 21388

அன்பளிப்பு

★

★ ★

★ ★

சிவதாசன் அன் கோ.

58, மெயின் வீதி,

வியாங்கொடை.

*Donated by*

**S. K. Vythilingam**

Main Street,

**Veyangoda.**

*Space Donated by*

**BHAMAS**

**11, De Cross Road,**

**NEGOMBO.**

அழகிய

பவுண் நகைகள், தங்கப் பவுண், வைரங்கள்

★

# கே. என். எம். மீருன் சாஹிப்

## தங்கப் பவுண் நகை மாளிகை

கன்ருதிட்டி, யாழ்ப்பாணம்.

போன்: 585

லிங்கம் ஸ்ரோர்ஸாரின் அன்பளிப்பு

உரிமையாளர்: க. கனகசபை

# லிங்கம் ஸ்ரோர்ஸ்

கே. கே. எஸ். வீதி,

இணுவில்.

*Space Donated By*

# Kaneshan Stores

**78, K. K. S. Road, JAFFNA.**

**பி. எஸ். தொய்வு மருந்து**

**நியூ P. S. டிஸ்பென்ஸரி**

*75, மின்சார நிலைய வீதி,*

*யாழ்ப்பாணம்.*

போன் : **7097**

கட்டிடப் பொருட்களா !

பெயின்ற் வகைகளா !

இன்றே எம்மை நாடுங்கள்

# எம். எம். அப்துல்காதர் அன் பிறதர்ஸ்

யாழ்ப்பாணம்.

அலுவலகம்: 97, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 443

ஸ்ரோர்ஸ்: 14, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சிறந்தவைகளையே வாங்குங்கள்

★ பிடவைத் தினிசுகள்

★ கூறைச்சேலை வகைகள்

★ றெடிமேட் உடுப்புக்கள்

★ அழகுசாதனப் பொருட்கள்

★

**மணியம்ஸ்**

16, மக்கள் நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.



**யானை மார்க் சந்தனாதித் தைலம்**

பல மூலிகைகளால் ஆயுள்வேத முறைப்படி
தயாரிக்கப்பட்டது.

**யானை மார்க் சந்தனாதித் தைலம்**

தயாரிப்பாளரும் விநியோகஸ்தரும்:

**என். ஏ. இராசரத்தினம் அன் பிறதர்**

இணுவில் மேற்கு, — இணுவில்.

மின்சார இணைப்புகளுக்கு,

மின்சார உபகரணங்களுக்கு

V

# முருகன் எலெக்றிக்கல்ஸ்

**68, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

போன்: **7110**

அன்பளிப்பு

# பென்ஸி ஹவுஸ்

39, மெயின் வீதி,

வியாங்கொடை.

எமது நல்வாழ்த்துக்கள்

# அமிர்தாஸ்

15, டி குறஸ் ரோட்,

நீர்கொழும்பு.

புதிய நிர்வாகம்,

திருத்தியமைக்கப்பட்ட

ஒலி, ஒளி, அமைப்புகள்

சினிமாஸ் லிமிட்டெட் திரைப்படங்களை

வெளியீடு செய்பவர்கள்.

**நியூ காலிங்கன் படமாளிகை**

**இணுவில்.**



பாத்திர வேலைகளுக்கும்

வார்ப்பு வேலைகளுக்கும்

**சிறந்த இடம்**

★

செ. லெட்சுமண ஆச்சாரி

லெ. வேணுகோபால் ஆச்சாரி

428, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

DONATED BY

# MANIAM

**AUTOMOBILE ENGINEERS**

NEAR KALINGON THEATRE,
**INUVIL.**

அன்பளிப்பு

## சிங்கப்பூர் கம்பெனி

*128/130, கே. கே. எஸ். வீதி,*
***யாழ்ப்பாணம்.***

தொலைபேசி: **547**

கிளை :

*12/1, ஸ்ரான்லி வீதி,*
***யாழ்ப்பாணம்.***

நீங்கள் விரும்பும்

**சிறந்த பட்டு, பருத்திப்**
**பிடவைகளுக்கு**

## லதா ரெக்ஸ்ரைல்ஸ்

68, மக்கள் நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

## ஜெயம் சைக்கிள் வேர்க்ஸ் ஸ்டோர்ஸ்

★

திறமான சைக்கிள் வேலைகளுக்கும்
உப உறுப்புக்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

## த. ஜெயரட்ணம்

கே. கே. எஸ். வீதி,
**இணுவில்.**

அன்பளிப்பு

என். வைத்திலிங்கம் கம்பனி லிமிட்டெட்

(இரும்பு வியாபாரிகளும், கொந்தராத்துக்காரரும்)

யாழ்ப்பாணம். கொழும்பு.

அன்பளிப்பு

சிறந்த மருந்துச்சரக்கு ஸ்தாபனம்

சுந்தரம் பிறதர்ஸ்

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இம்மலரை அலங்கரிப்பது
எமது அச்சுவேலைகளே!

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 285

150




ஒரே செலவில் தமக்கும் பிறர்க்கும் நயம் வர
வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா?

★

நாடு நலம்பெற, நாம் நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்.

★

அதிபர்,

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233

தந்தி : "மில்க்வைற்"

மில்க்வைற் சோப் மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வருகின்றோம்.
சேகரித்துக் கொடுத்துப் பரிசுகளைப் பெறுங்கள்.

அட்டை, சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்றது.